24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 24
விலை: 30

சுடர் 34 கதிர் 125 பங்குனி 18ஆம் நாள் திங்கட்கிழமை 01 ஏப்ரல் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

# இராணுவத்தை ஜெனிவாவில் காப்பாற்றிய சுமந்திரனை மக்கள் மன்னிக்கமாட்டார்கள்

## பன்னாட்டு விசாரணையே என்ற நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என்கிறார் விக்னேஸ்வரன்



யாழ்ப்பாணம், ஏப்ரல் 1

இலங்கையில் நடந்தது இனப்படு கொலை என்பதை மறுத்து வருபவர், கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர். நூற்றுக்கணக்கான எமது பெண்களை பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்திய இராணுவத்தைக் காப்பாற்றும் வகையில் ஜெனிவாவில் அவர் செயற்பட்டமை எனக்கு கவலையையும் வருத்தத்தையும் தருகின்றது. எமது மக்கள் இதனை மன்னிக்கமாட்டார்கள். பன்னாட்டு விசாரணை எப்பொழுதோ முடிந்து விட்டது என்பதையும் எமது மக்கள் மறந்துவிடமாட்டார்கள்.

இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். » 19

### அரச தலைவர் தேர்தலில்

## இந்தியாவின் நடுநிலை தமிழர்களுக்குத் தேவை

### விக்னேஸ்வரன் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 1

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் எந்தவொரு வேட்பாளருக்கும் ஆதரவு வழங்குவதற்கு, மூன்றாம் தரப்பு நடுநிலையை தமிழர்கள் கோருவதாக, முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். » 19

## பாதிக்கப்பட்டோர் விரக்தி, கோபத்தால் நிலைமாறுகால நீதி வேண்டாம் என்கின்றனர்

### அரசுக்கு அது வாய்ப்பாகிவிடும்



யாழ்ப்பாணம், ஏப். 1

நிலைமாறுகால நீதி வேண்டாம் என்கின்ற குரல்கள் எங்களுடைய சமூகத்தில் இருந்து தற்போது எழுகின்றன. அது விரக்தியால், கோபத்தால், காத்திருப்பால் எழுகின்ற குரல்கள் என்று எங்களுக்குத் தெரிகிறது. ஆனால் எங்களுக்குசரியான நீதிகிடைக்கவேண்டும் என்றால் நாங்கள் நிலைமாறு கால நீதியைக் கைவிடக்கூடாது என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற » 19

## புதிய அரசமைப்பை உருவாக்கும் துணிவு தலைமை அமைச்சர் ரணிலுக்கு இல்லை

### இப்போது கூறுகிறார் சுமந்திரன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஏப். 1

புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சி கடந்த ஒக்ரோபர் மாதம், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அடித்த குத்துக் கரணம் காரணமாகவும், அடுத்த கட்சியின் தலைவரிடம் (ரணில் விக்கிரமசிங்க) துணிவு இல்லாத காரணத்தாலும், புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சிகள் தற்போது தடைப்பட்டுள்ளன. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் பகிரங்கமாகக் குற்றம் சுமத்தியுள்ளார். » 07

### காணாமல் ஆக்கப்பட்ட

## எங்கள் உறவுகளின் பெயர்களை குடும்பஅட்டையில் உள்ளடக்குங்கள்

### கண்ணீருடன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 1

போர்க்காலத்திலும், அதனை அண்மித்த காலப் பகுதிகளிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களு » 19

## இலங்கை தமிழ் அரசுக் கட்சி கிளைத் தெரிவில் கைகலப்பு

### பிரதேச சபை உறுப்பினர் கைது

முல்லைத்தீவு, ஏப். 1

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் முப்புரம் வட்டாரத்தில் இடம்பெற்ற தமிழ் » 07



### ரயர் வெடித்து

## தடம்புரண்டது டிப்பர் சாரதி பரிதாபச் சாவு

தென்மராட்சி, ஏப். 1

டிப்பர் வாகனத்தின் ரயர் வெடித்து, முன்னால் சென்ற இருசக்கர உழவி யந்திரத்துடன் மோதித் தடம்புரண்டது. இதில் டிப்பர் சாரதி பரிதாபகரமாக உயிரிழந்ததாக சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்த இருவர் யாழ்ப்பாணம் » 19

### வடமராட்சி கிழக்கில்

## சிறுவன் மீது கொலை முயற்சி

யாழ்ப்பாணம், ஏப். 1

வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டுப் பகுதியில் தனது மகனை இனந்தெரியாதோர் கொலை செய்வதற்கு முயற்சி செய்ததாக தாயார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

29ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 » 19

### 765 கிலோ

## போதைப்பொருள்கள் பகிரங்கமாக அழிப்பு

கொழும்பு, ஏப். 1

பாதுகாப்பு படையினரால் கைப்பற்றப்பட்டு நீதிமன்ற விசாரணை நடவடிக்கைகள் நிறைவ » 07

## கஞ்சா, ஹெரோயினுடன் வடக்கில் பலர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 1

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் கஞ்சா, ஹெரோயின் போதைப் பொருள்களை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 6பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். » 19

## குடிதண்ணீர் பிரச்சினைக்கு மற்றொரு தீர்வும் முன்மொழிவு

### வடக்கு அபிவிருத்தி அமைச்சு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 1

யாழ்ப்பாணக் குடாநாட்டின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக் குத் தீர்வாக கீழ்பாலியாறு நீர்த்தேக்கத் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளதாக தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் மறுவாழ்வளிப்பு, வட மாகாண அபிவிருத்தி, மற்றும் இளைஞர் விவகாரங்கள் » 07

விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111
உதயன்

YAMAHA
Revs Your Heart
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு விசேட சலுகை எம்மிடம்
Yamaha மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்யும்
வாடிக்கையாளர்களுக்கு குலுக்கல் முறையில் அதிஸ்டம்



மோட்டார் சைக்கிள்
ஒன்றை வாங்கி
ரூபாய் 3.5 மில்லியனுக்கும் மேலான பெறுமதியுள்ள
Brand NEW
WAGONR ஐப்
பரிசாக வெல்லுங்கள்



அத்துடன் பெறுமதியுள்ள வீட்டு எலக்ட்ரானிக் பொருள்களையும் வெல்லுங்கள்
நிபந்தனைகளுக்கு உட்பட்டது
DIGITAL ELECTROICE
62/16, Stanley Road, Jaffna.
Tel: 021 222 4040 Mob : 077 662 3824 Email: nraveen1981@gmail.com

## மாவட்டச் செயலகம்,கிளிநொச்சி
## குடிசார் வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பின்வரும் விவரங்களைக்கொண்ட குடிசார் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் | மதிப்பீட்டுத் தொகை | வேண்டப்படும் ICTADதரம்/ பதிவு | கேள்விப் பிணைப்பணம் செல்லுபடியாகும் காலம் | மீளளிக்கப் படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | KN/DPS/DO 12/ND/359-1 | அம்மாச்சி உணவகம் நிர்மாணம் கட்டம் I - அறிவியல்நகர், கிளிநொச்சி | 13.729 மில்லியன் (வரி நீங்கலாக) | C6 Building | ரூபா 137,500.00 வங்கிப் பிணை 05.08.2019வரை | 3,500.00 |
| 2 | KN/EB/11/ Con/DS.Qua/ 736 | பிரதேச செயலாளர் விடுதி நிர்மாணம் - கண்டாவளை, கிளிநொச்சி | 11.184 மில்லியன் (வரி நீங்கலாக) | C6 Building | ரூபா 112,000.00 வங்கிப் பிணை 05.08.2019வரை | 3,500.00 |

1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்ததாரர்களும் கேள்வி கோருவதற்கு தகுதியுடையவராவர்.
   I. நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் இக்ராட் (ICTAD/CIDA) விருத்திசெய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
   II. இக்ராட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.
   III. நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016 (i) இலக்க 16.03.2016 ஆம் திகதிய நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தைச் சார்ந்தவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.
   IV. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்றவேலைச் செயற்திறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் இருக்கக்கூடாது.
2. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல:-0212285663,பக்ஸ் இல:-0212283966)
3. கேள்வி ஆவணங்களை 02.04.2019 ஆம் திகதியிலிருந்து 22.04.2019 ஆம் திகதிவரை முற்பகல் 9.00மணி முதல் பிற்பகல் 3.00மணிவரை வேலை நாள்களில் கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.
4. இரு அரக்கு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி, பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்வி கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 5இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.
5. அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாவும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "KN/………………" என ஒப்பந்த இலக்கம் குறிப்பிடப்பட்டு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், கிளிநொச்சி எனும் விலாசத்திற்கு 23.04.2019 ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிக்கு முன் கிடைக்கப்பெறல் வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்க முடியும்.
6. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.
7. கேள்வி கோரலுக்கு முன்னரான தெளிவுபடுத்தல் கூட்டம் (Pre bid meeting ) 16.04.2019 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

சுந்தரம் அருமைநாயகம்,
திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரும்,
**அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**

கோடிபதி சனிதா KOTIPATHI SHANIDA
சீட்டிழுப்பு வாரம்: 426
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.03.31
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 119,173,508/-
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
K 03 13 34 54
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 571
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.03.31
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 50,272,065/-
வெற்றி இலக்கங்கள்
04 22 29 38 J
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 949
சீட்டிழுப்பு திகதி 2019.03.30 சனிக்கிழமை
Q 06 12 55 63
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 31.03.2019 | வெற்றி வாரம் 2489 | வர்ணம் ஊதா
மீனம்
வெற்றி இலக்கங்கள் 10 32 43 48
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 02, 390, 066/=
02.04.2019ம் திகதி செவ்வாய்க் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்
## ஆண்டுப் பொதுக்கூட்டம் - 2019

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் 20.04.2019 அன்று மு.ப. 10.00 மணியளவில் நடைபெறும். யாப்பின் திருத்தப்பட்ட உறுப்புரை 05.09 இற்கமைய 31.01.2019 இற்கு முன்னர் உறுப்புரிமை பெற்றோரும் தமது உறுப்புரிமையைப் புதுப்பித்தோருமே இக் கூட்டத்திற் கலந்து கொள்ள உரித்துடையவராவார்.

பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டிய பிரேரணைகள் 13.04.2019 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**தி.செல்வமனோகரன்**
**செயலாளர்.**

**கலாசாலைவீதி,திருநெல்வேலி.** (C 32445/15/18)

## முழுநேர/பகுதிநேரவேலைவாய்ப்பு

வேலைவாய்ப்பை நாடி நிற்போருக்கு **காப்புறுதி ஆலோசகராக** யாழ்.மண்ணில் 50வருடங்களாகச் சேவையாற்றி வரும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்ற வாய்ப்பு.

- 1 வாரப் பயிற்சிக் காலத்தையுடையது.
- பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

### அடிப்படைத் தகைமைகள்

- G.C.E (O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- 18 - 60 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிவரக் கோவையுடன் (BIO DATA) விண்பப்பங்களை 15.04.2019 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**விளம்பர இல: JF1005**
**C/O உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## அற்றோனித்துவத்தை இரத்துச் செய்தல்

சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலியில் வசிக்கும் தம்பையா குமாரதாசன் ஆகிய என்னால் இலக்கம் 13/5, காலி வீதி, மவுண்டவேனியாவில் வசிக்கும் திருமதி செல்லாச்சிப்பிள்ளை சச்சிதானந்தனுக்கு 2002 ஆம் ஆண்டு மாசி மாதம் 7ஆம் திகதியிட்டு வழங்கப்பட்ட விசேட அற்றோனித்துவப் பத்திரத்தை நான் தற்போது வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வந்துள்ளமையால் இரத்துச் செய்கின்றேன். எனக்குரிய எந்த ஆதனத்தையும் குறித்த திருமதி செல்லாச்சிப்பிள்ளை சச்சிதானந்தனால் என்னால் வழங்கப்பட்ட குறித்த விசேட அற்றோனித்துவ பத்திரம் மூலம் விற்கவோ அல்லது கைமாற்றவோ முடியாது. அப்படி கைமாற்றினால் அது செல்லுபடியற்றதாகும்.

**தம்பையா குமாரதாசன்** (CS/24424)(1,17)

**காணி விற்பனைக்கு**

பொன்னாலை விதி, மானிப்பாய் மேற்கில் 2½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு.


**077 275 6720, 077 968 8280**

**வேலையாள்கள் தேவை**

கொழும்பில் தங்கி நின்று கட்டட வேலைகள் செய்ய வேலையாள்கள் தேவை.

**077 449 3375, 076 678 8848, 077 378 9065**

## மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்




புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த

**திரு. தில்லையம்பலம் அமிர்தலிங்கம்**

**B.Com, (University of Peradeniya)**
**Diploma in Human Rights (Institute of Human Rights)**

அவர்கள் 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற **கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் 111 ஆம் வகுப்பின்** (திணைக்களம்) போட்டிப் பரீட்சையில் சித்தி அடைந்துள்ள தமிழ்மொழி மூல உத்தியோகத்தர் ஒருவர் என்ற பெருமையைப் பெற்று புதுக்குடியிருப்புக்கும் முல்லைத்தீவு மாவட்டத்துக் கும் புகழை நிலைநாட்டியமைக்கு மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**தலைவர்/ செயலாளர்,**
**கமக்கார அமைப்பு, தேவிபுரம், "ஆ" பகுதி.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது அன்புப் பேரனும்
சாவகச்சேரி இந்துக் கல்லூரி
மாணவனுமாகிய

**செல்வன்**
# சிவபாலன் திலக்ஷன்


க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் **7A 2B** பெறுபேறுகளைப் பெற்றமையையிட்டு நாம் மகிழ் வுடன் பாராட்டுவதில் பெருமையடை கின்றோம். அவர் மேலும் சிறப்புற இறைவனை வேண்டுகின்றோம். சிறந்த பெறுபேற்றினையடைய கற்றலுக்கு ஊக்கமளித்த அதிபர் ஆசிரியர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**சித்தன் மாவடி வீதி,**
**கல்வயல், சாவகச்சேரி.**

வாழ்த்துவோர் : அப்பப்பா – அப்பம்மா
திரு. திருமதி சிவலிங்கம் – தவமணி

# மாசற்ற நீரே குறைவற்ற செல்வம்

**"நீரினால் ஏற்படும் தொற்று நோய்களுக்கும் நீரிலுள்ள கடினமான தாது உப்புக்களால் ஏற்படும் சிறுநீரக கல், பித்தப்பை கல், சிறுநீரக அழற்சி போன்ற நோய்களை தவிர்ப்பதற்கு வடிகட்டிய நீரினை பருகுவது வைத்தியர்களால் பரிந்துரைக்கப்படுகின்றது."**



மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட எமது நிறுவனமானது வடமாகாணத்தில் சகல விதமான நீர் சார்ந்த பிரச்சினைகளுக்கும் உயர்தர தீர்வினை வழங்கி வருகின்றது.



**இலகு தவணை கொடுப்பனவு முறையிலும் பெற்றுக்கொள்ளலாம்**

மாதம் 3642/=லிருந்து
(நிபந்தனைக்கு உட்பட்டது)

**Everpure Hi-Tec (Pvt) Ltd.**
No.341, K.K.S Road, Jaffna.

**HOTLINE: 075 331 3310**
**Tel: 021 222 6888**

# SOLAR சிஸ்டம்ஸ்

- செலவை ஏற்படுத்திய மின்சாரம் வருமானத்தைப் பெற்றுத் தரும்
- மின் கட்டணம் இல்லை

E Green Lanka


MICRO PC SYSTEMS
Micro Power Co Systems

WARRANTY 25 YEARS WARRANTY



| 2kW SYSTEM | 3kW SYSTEM | 5kW SYSTEM | 8kW SYSTEM | 12kW SYSTEM | 15kW SYSTEM | 22kW SYSTEM | 33kW SYSTEM | 44kW SYSTEM |
|---|---|---|---|---|---|---|---|---|
| 350,000/= | 470,000/= | 750,000/= | 1,080,000/= | 1,480,000/= | 1,695,000/= | 2,200,000/= | 3,300,000/= | 4,400,000/= |
| 240 Units | 360 Units | 600 Units | 950 Units | 1465 Units | 1795 Units | 2640 Units | 3960 Units | 5280 Units |


**மின்சார தடை இல்லை**
**No Power-Cut**




**விவசாயிகளுக்கான மின்சாரம்**




**SOLAR STREET GARDEN LIGHTS**




**7 வருடங்களுக்கான தவணை கட்டண முறை**

- **44 kW** – CEB இனால் வருமானம் ரூ.116,160 (5280 x 22/-) ரூ.44 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 68,600/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 47,560/-
- **33 kW** – CEB இனால் வருமானம் ரூ. 87,120 (3960 x 22/-) ரூ. 33 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 51,450/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 35,670/-
- **22 kW** – CEB இனால் வருமானம் ரூ. 58,080 (2640 x 22/-) ரூ. 22 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 34,300/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 23,780/-
- **12 kW** – CEB இனால் வருமானம் ரூ. 32,230 (1465 x 22/-) ரூ. 14.8 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 23,067/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 9,163/-

*நிபந்தனைகளுக்குட்பட்டது

KACO · Fronius · SOLAX POWER · ENVERTECH · victron energy · REC · JinKO Solar · YINGLI SOLAR · ReneSola

CEB · SEA · LECO Approved

**கொழும்பு** - 077 3963281/ 077 3963283 / 071 0356062 / 077 3963278
**யாழ்ப்பாணம்** - 077 3963280 / 0777 425973 / 0777 425974 / 077 3963284
**வவுனியா** - 0777 425974 / 0777 763071 / 077 3963273
**மட்டக்களப்பு** - 071 0356069 / 071 8963280 / 071 0356072 / 077 3963281

**TIPS!!!**
***Factors affecting performance of a solar PV system!***
Factors which are under the control of Human efforts:
1. Solar Panels: Figures given in the datasheet by the panel manufacture and its accuracy of Peak power, Module efficiency, temperature co efficient.=> So request for Tier 1 brand
2. Installation: Panel's orientation and tilt, System Design, Grid quality =>Select well-trained / Certified Company for the Installation.
3. Inverter: Efficiency =>so select premium brands.

***Factors which are beyond the control of Human efforts:***
1. Solar irradiance (SI) available at the site
2. Ambient temperature 3. Accumulation of Dirt/Smog
4. wind speed etc.

**மொத்த விற்பனையாளர்கள் தொடர்பு கொள்ளவும் : 0773 076409 / 071 9963275 | E-mail: mail@micropcsystems.com | Web: www.solarpowerlk.com**

No.115C, W.A. Silva Mawatha, Colombo 06. Tel: 011 4000686 | No.218, Hospital Road, Jaffna. Tel: 021 2225893 | No.66B, 2nd Cross Street, Vavuniya. Tel: 024 2221969 | No.115-5C, New Kalmunai Road, Kalladi, Batticaloa. Tel: 011 5640650

## வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் சமாசம் (வ.து)

**இல.52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்**

### பதவி வெற்றிடம்

எமது நிறுவனத்தின் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகைமையுள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பதவி : அங்கத்தவர் தொடர்பு பயிற்சி உத்தியோகத்தர்
குறியீட்டு இலக்கம் : 201 / 10
சம்பள அளவுத்திட்டம் : 17605 - 198 x 10 - 220 x 10 = 21785
(சுற்று நிருபம் 04/ 2018 இன்படி)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ. கூட்டுறவுப் பணியாளர் 11 ஆவது சம்பளத்திட்ட அங்கத்தவர் தொடர்பு அல்லது பயிற்சி வழங்கல் சம்பந்தமான பதவியொன்றில் (03) மூன்று வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 12 ஆவது சம்பளத்திட்ட அப்படிப்பட்ட பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கூட்டுறவு சமுதாய அபிவிருத்தி பற்றிய பாடநெறி ஒன்றை பயின்றிருத்தல் பற்றி விசேட கவனம் செலுத்தப்படும்.

02. பதவி : எழுதுனர்
குறியீட்டு இலக்கம் : 302 / 13
சம்பள அளவுத்திட்டம் : 16365 - 140 x 10 - 150 x 10 = 19265
(சுற்று நிருபம் 04/ 2018 இன்படி)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ. கூட்டுறவுப் பணியாளர் 14 ஆவது சம்பளத்திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களிற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 15 ஆவது சம்பளத்திட்ட அப்படிப்பட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. க.பொ.த (சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் தமிழ் மொழி உட்பட 05 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியும். கூட்டுறவு சங்கமொன்றின் எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களிற்கு குறையாத அனுபவம்.

03. பதவி : அச்சு இயந்திர இயக்குனர் (ஓவ் செற்)
குறியீட்டு இலக்கம் : 318 / 14
சம்பள அளவுத்திட்டம் : 15960 - 135 x 10 - 145 x 10 = 18760
(சுற்று நிருபம் 04/ 2018 இன்படி)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

. க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் கணிதம் /எண்கணிதம். தமிழ்/ சிங்களம் உட்பட (06) ஆறு பாடங்களுடனான சித்தியுடன் இயந்திர இயக்குனர் பதவியில் ஆகக் குறைந்தது ஒரு (01) வருட அனுபவம்.

**ஏனைய விவரங்கள்**


- வயதெல்லை : 18 - 45 (சமூகப் பணியாளர்களுக்கு இவ் வயதெல்லை பொருத்தமற்றது)
- இப்பதவிகளுக்குரிய அடிப்படைச் சம்பளத்தை விட மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்திற்கமைய இதர படிகளும் காலத்திற்குக் காலம் அங்கீகரிக்கப்படும் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
- குறித்த பதவிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி சமாசத்தால் கோரப்படும் பிணையினை செலுத்துதல் வேண்டும்.
- கல்வித் தகைமை சான்றிதழ். சேவைத் தகைமை சான்றிதழ். ஏனைய தகைமை சான்றிதழ்களின் பிரதியினை இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.
- ஏற்கனவே கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் கடமையாற்றும் ஊழியர்கள் அச் சங்கத்தினூடாகவே விண்ணப்பித்தல் வேண்டும்.
- தகைமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

சமாசத்தினால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை எமது அலுவலகத்தில் ரூபா 50/= செலுத்திப் பெற்றுப் பூரணப்படுத்தி கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு தலைவர். வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ.து). இல.52. சோமசுந்தரம் லேன். சுண்டுக்குழி. யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ 10.04.2019 திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

**திரு.வ.தெய்வேந்திரம்**
**தலைவர்,**
**வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் சமாசம் (வ.து)**
**யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

### தம்பிப்பிள்ளை மகேஸ்வரன்



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை மகேஸ்வரன் 29.03.2019 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நேசமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், திலகமணி, சிவபாக்கியம், பரமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மோகனதாஸின் அன்புத் தந்தையும், ராஜினியின் அன்பு மாமனாரும் லகீசனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2019) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.00 மணிக்கு உரும்பிராய் இளங்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஞானவைரவர் வீதி,**
**உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

**தோற்றம்**
**20 . 05 . 1938**



**மறைவு**
**27 . 03 . 2019**

### பொன்னுத்துரை செல்லம்மா

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை செல்லம்மா 27.03.2019 புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னட்டி - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வெள்ளையப்பு - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தங்கமுத்து. ஆச்சிப்பிள்ளை, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயதீஸ்வரி (வவுனியா), தபேந்திரராசா, ஜெகதாம்பாள் (வவுனியா), மகேந்திரராஜா (பெல்ஜியம்), குலேந்திரராஜா (ரவி - லண்டன்), புலேந்திரராஜா (சிவா - டென்மார்க்), ஜெனிந்திரராஜா (ஜெனி - பெல்ஜியம்), காலஞ்சென்ற சுரேந்திரராஜா (உதயம்) ஆகியோரின் பாசமிகு தாயும், தவராசா (வவுனியா), செபமாலைநாயகி, ரொனிக்கற்லாஸ் (ரவி - வவுனியா), கிறிஸ்துநாயகி (பெல்ஜியம்), வதனாதேவி (லண்டன்), சுபாஷினி (டென்மார்க்), திருமாலினி ஆகியோரின் அன்பு மாமியும், நிரஜா, மயூரன்ராஜ் (டென்மார்க்), நிரக் ஷனா, நிலுக் ஷி (வவுனியா), சரோன் யூட்ஸ், ருகாஷன், ஜெனுஷன் (வவுனியா), குயினி, திலக் ஷன், திஷானி (லண்டன்), மேகலா, யாதவன், திவ்யா (டென்மார்க்), நிலக் ஷன், நிறோன் (பெல்ஜியம்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஜெஷோன்ஜோஸ், ஜொஹானாலியா (டென்மார்க்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை பருத்தித்துறை வீதி, இருபாலையிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (01.04.2019) திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் இராச பாதையில் உள்ள கானான் சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**பருத்தித்துறை வீதி,**
**இருபாலை.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(cs 236659)

**077 616 6844, 077 2912933**

## மரண அறிவித்தல்



### நடராசா சபாபதிப்பிள்ளை

அராலியைப் பிறப்பிடமாகவும், கனடா வினிப்பெக்கை (Winnipeg) வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சபாபதிப்பிள்ளை 30.03.2019 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் ஞானசோதியின் அன்புக் கணவரும், கலாநிதி ஜூலியன் (Julian), கலாநிதி றூபன் (Reuben) ஆகியோரின் தந்தையும், ஜெசிக்காவின் (Jessica) மாமனாரும், ஜூட் (Jude), பெறி (Perry) ஆகியோரின் பேரனும், அச்சுவேலியைச் சேர்ந்த உவில்லியம் செல்வராஜா, செல்வராணி, சாந்தம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**39, சன்னிதி வீதி,**
**அச்சுவேலி.**

(J/9932)(11.17)


தகவல்:
**உவில்லியம் செல்வராஜா**

**021 205 8615, 077 317 5387**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்லையா பராசக்தி

**(காந்தியம்மா)**



இணுவிலைப்பிறப்பிடமாகவும் கந்தர்மடம், இணுவிலைப் வசிப்பிட மாகவும் கொண்ட செல்லையா பராசக்தி (30.03.2019) காலமானார்.


அன்னார் காலஞ் சென்றவர்களான சிவசம்பு சின்னத் தங்கம் தம்பதியினரின் புதல்வியும் கந்தர்மடத்தைச்சேர்ந்த காலஞ் சென்றவர்களான கார்த்திகேசு தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும் காலங்சென்ற பிரபல வர்த்தகர் (கம்பளை பாணாந்துறை) கந்தர்மடம் செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லாபரணம், கௌரி அம்மா, கனகசபாபதி, சரஸ்வதி ஆகியோரின் சகோதரியும்கார்த்திகேசு, கணேசநாதன் (கனடா), பூலோகநாயகி, இலட்சுமணநாதன் (உரிமையாளர் சிவசம்பு களஞ்சியம்), காலஞ்சென்ற கைலாயநாதன் மற்றும் மகேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கந்தர்மடத்தைச்சேர்ந்த காலஞ்சென்றவர்களான (கனகம்மா, சுப்பிரமணியம், கார்த்திகேசு. குணபூரணியம்மா சோதிப்பெருமாள் ஆகியோரின் மைத்துனியும் பரமேஸ்வரி, தனலட்சுமி(கனடா), சண்முகநாதன், அருந்ததி, தேவபாலன்(இலண்டன்) ஆகியோரின் மாமியாரும் கழுக்குன்றான் - ராகினிமலர் (லண்டன்), கௌரி - தவசோதி (ஜேர்மனி), கல்யாணி - மகேஸ்வரன் (பிரான்ஸ்), எல்லாளன் (பிரான்ஸ்), செவ்வேன் - விஸ்ணுப்பிரியா (லண்டன்), காலஞ்சென்ற ஜனார்த்தனன் மற்றும் தனவந்தி - கணேஷ் (கனடா), சிவராம் - தர்சிகா (கனடா), மதுளா - ராதையன் (கனடா), சிவாகரன் -நந்தினி, சுதாகரன்-உஷாந்தினி, பவித்திரா-கிரிதரன், பிரியதர்சினி-ரஞ்சித், சிவதர்சன், ஜெனனி - வில்லியம், தீபன் - ஸ்ரோமி, நிதன் ஆகியோரின் பேர்த்தியும் பவித்திரா - தயாபரன், பிரதீபன், பிரதாபன், ரஜித்தா, விபுர்தினி - ரமணன், மாதுளன், துவாரகன், மாதங்கி, ஆய்ஷன், கபிசேக், நிஷேக், நிஸவின், யாஸ்மின், மிதினி, தணுஸ்னன், வரகுணன், தேவமதுரன், தருண்ஜன், கவிஸ்ணா, சாருண்ஜா, சப்ரூன், கலம் ஆகியோரின் பூட்டியும் அர்ச்சுனா, திவியா, டானியா, டனுஜன் ஆகியோரின் கொள்ளுப்பேர்ததியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (31.03.2019) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**"பூலோகம்", காரைக்கால் வீதி**
**இணுவில்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

---



### கந்தையா சண்முகலிங்கம்

யாழ். புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் Sumiswald ஐ வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சண்முகலிங்கம் 29.03.2019 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பூரணம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் சசிரேகா, லிங்கேஸ்வரன்(குமணன்), வசந்தராஜ்(ரமணன்), சுரேகா ஆகியோரின் ஆருயிர்த் தந்தையும் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை, தர்மராசா, ஆயிலியராணி மற்றும் இலட்சுமணன், தம்பிராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், யோகேஸ்வரன், லோசனா, லோஜினா, பிரதீபன் ஆகியோரின் அன்பு மாமனாரும், தமயந்தி, தேவி, ராசமணி, வதனம், காலஞ்சென்ற தியாகராஜா ஆகியோரின் மைத்துனரும், ராஜேஸ்வரி, ஜெகதீஸ்வரி, நாகரட்ணம், செந்தமிழ்ச்செல்வன் ஆகியோரின் பாசமிகு அத்தானும், காலஞ்சென்றவர்களான தேவராசா, நாகேஸ்வரன் மற்றும் கோமலாம்பிகை, கீதா ஆகியோரின் அன்புச் சகலனும், ஆதிசன், அஷான், ஜனீஷ், அஜீஷ், அகன், ஆர்யன், அரசு, தாமிரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: மனைவி, மக்கள், மருமக்கள்.**

**திருமதி சி.சிவக்கொழுந்து (மாமி)**
**33, பிரம்படி லேன், கொக்குவில்.**
**0777042517**

(CS 24423)
(14,17)

**திருமதி.ச.நாகேஸ்வரி**
**(மனைவி - சுவிஸ்) +41344311470**

---

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி மேரி யோசப்பின் பாக்கியநாதர்

(இளைப்பாறிய ஆசிரியர்)

பிறப்பு 18.03.1937 — இறப்பு 01.04.2010

"என்னிடம் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" (யோவான்.11.25)

என்றும் நீங்காத கனத்த உள்ளத்துடன்

கணவர் : அ.பாக்கியநாதர்
பிள்ளைகள் : றெஜி, றொகான், றதீஸ்குமார்.
மருமக்கள் : நிஜிதா, வதனி, தயாளினி.
பேரப்பிள்ளைகள் : மேரி றியாங்கி, ஆன் செரன், ஆன் ஷிரோனி, ஜெறோம்.




அ. பாக்கியநாதர்
கல்லூரி வீதி, மானிப்பாய்.
077 635 9240

---

## மரண அறிவித்தல்கள்

### செல்லப்பா சின்னையா

**(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர் - வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம்)**



யாழ். பொலிகண்டியைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா சின்னையா நேற்று (31.03.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வ மலரின் அன்புக்கணவரும் இன்பமலர் (ஆசிரியை - யா/ வல்வை சிவகுரு வித்தியாலயம்), மதிவதனி (சுவிஸ்), மணிவண்னன், சிவச்செல்வி, (விரிவு ரையாளர் - தொழில்நுட்ப பல்கலைக் கழகம், இரத்மலானை), மயூரன் (இலண்டன்) ஆகியோரின் தந்தை யாரும் சிறிகுமரபரன் (ஆசிரியர் - கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலை), பகீரதன் (சுவிஸ்), உருத்திரன் (விரிவுரையாளர் - தொழில்நுட்ப பல்கலைக்கழகம், இரத்மலானை), தாரணி (லண்டன்), ஆகியோரின் அன்பு மாமனாரும் கிருத்திகா, செந்தூரன், நவீனன், மதீனன், சங்கவி, ஸ்ரீராம், மதுவந்தி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.04.2019 புதன்கிழமை பொலிகண்டி ஊரணி இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக காலை 10.00 மணியளவில் எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தம்பலடி, பொலிகண்டி**
**வல்வெட்டித்துறை**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 406 5556, 077 6717393, 021 226 2626**

---

### திருமதி அன்னலட்சுமி கிருஷ்ணபிள்ளை

***(அன்னம்)***



பிறப்பு 03.08.1934 — இறப்பு 31.03.2019

பெரிய கிணற்றடி, அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அன்னலட்சுமி கிருஷ்ண பிள்ளை (அன்னம்) நேற்று (31.03.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சண்முகம் - செல்லம்மா தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற கிருஷ்ண பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கணபதிப் பிள்ளை மற்றும் ஞானலட்சுமி ஆகியோ ரின் அன்புச் சகோதரியும் சிவனேசன், பாஸ்கரன் (லண்டன்), தயாளினி, சுதா கரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சரஸ்வதிதேவி, புஸ்பலதா (லண்டன்), நிர்வாகரன், நந்தகுமாரி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெசிக்கா (லண்டன்), கஜீபன் (லண்டன்), நேரிசா (லண்டன்), ஆதன்யன் (லண்டன்), அரபன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.04.2019) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 504 6978 தயாளினி**
**077 044 7742 சிவா**
**077 544 1901 நிருபாகரன்**

(CS 23803/15/18)

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்



பிறப்பு 28 . 02 . 1928

இறப்பு 30 . 03 . 2019

### தர்மலிங்கம் பொன்னம்மா


(பரமேஸ்வரி ராசாத்தி)

செம்பாட்டுஒழுங்கை, கொக்குவில் கிழக்கினைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தர்ம லிங்கம் பொன்னம்மா (பரமேஸ்வரி ராசாத்தி) கடந்த(30.03.2019)சனிக்கிழமைஇறைபதம்அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராமப் பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான தம்பு - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான அன்னம்மா, கனகரத்தினம், இராசையா, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் மாலதி (ஓய்வுபெற்ற உப அதிபர் - யாழ். கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), காலஞ்சென்ற ஜெயந்தி, மனோகரன், மனோரஞ்சிதம், ரவீந்திரன் (ஜேர்மனி), செல்வதி (நெதர்லாந்து), வசந்தி (ஜேர்மனி), கோமதி ஆகியோரின் அன்புத் தாயாரும் விஜயலெட்சுமி, தேவராசா, யோகேஸ்வரி (ஜேர்மனி), நித்தியானந்தன் (நேதர்லாந்து), சிறிக்காந்தன் (ஜேர்மனி), குணசேகரன் (யேசுதாசன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற பிரதீப், பிரசாந், பிரசன்னா, மயூரி, மேனன், தர்சனா, றொபேஷன், றெஜிவன், லக்ஷன், சத்யன், மயூரன், சசிதா (ஜேர்மனி), நிரோசன் (நெதர்லாந்து), கீர்த்திகன், கிரிசன், கிசோத் (ஜேர்மனி), லினோஜா, கலாசத்தி, றஜனியா, ஜெனனி, கயானா (ஜேர்மனி), வித்தியா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பிரியன், அபிரன், ஆதிரன், நத்தியா (ஜேர்மனி), நோவா (ஜேர்மனி), ஜியானா (ஜேர்மனி), அஜித் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.04.2019) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் காலை 8.30 மணிக்கு நடைபெற்று மு.ப. 10.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**



### வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தி

(ஓய்வுபெற்ற எக்ஸ்றே தொழில்நுட்பவியலாளர்)

நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும், காரைநகர் புது வீதி மற்றும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட வே.விநாயகமூர்த்தி கடந்த 29.03.2019 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சபாபதி - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், சுசிலாவதியின் அன்புக் கணவரும், மிருணாளினி (London), ஸ்கந்தபிரசாத் (London) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற நடேசபிள்ளை, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், அமிர்தாவின் அன்பு மாமனும், ஹரிணி, அருண், அசோக் ஆகியோரின் அன்புப் பேரனும், ஶ்ரீபதி, நடனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற சபாநடேசன் (Canada) சபாநாதன் (London), காலஞ்சென்ற சபாநேசன், சபாநாயகம் (London), காலஞ்சென்ற Dr. சபாரட்ணம் (London), சிவஞானவதி, சபேந்திரன் (London), சங்கரப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும், தனலக்ஷ்மி, சரஸ்வதி, காலஞ்சென்ற சகுந்தலாதேவி, விமலாதேவி, Dr. மங்கையர்க்கரசி, காலஞ்சென்ற துரைச்சாமி, யசோதா, காலஞ்சென்ற சிவமலர், அனு ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் இன்று (01.04.2019) திங்கட்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு செவ்வாய் (02.04.2019) நண்பகல் 12 மணியளவில் கனத்தை மயானத்துக்கு தனகத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: சங்கரப்பிள்ளை**
**(077 757 1776 - கொழும்பு)**
**ஸ்கந்தபிரசாத்**
**(0044 7932 421063 - லண்டன்)**

**077 797 6131/077 494 9818**

## மரண அறிவித்தல்கள்

### வைரமுத்து கந்தையா



முள்ளானை, இளவாலையைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி வீதி, புலோலி மத்தியை வசிப்பிடமாகவும் புதிய செங்குந்தா சட்டநாதர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து கந்தையா நேற்று முன்தினம் (30.03.2019) சனிக்கிழமை இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01.04.2019) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் பருத்தித்துறையில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: பாலஈஸ்வரி (மனைவி)**
**077 468 3906**



### மகேந்திரராஜா இந்துமதி

அரியாலை திருமகள் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடாகவும் கொண்ட மகேந்திரராஜா இந்துமதி 29.03.2019 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - புஸ்பவதி தம்பதியரின் அன்பு புதல்வியும், காலஞ்சென்றவர்களான நடராசா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், மகேந்திரராஜாவின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2019) திங்கட்கிழமை இல.04.சின்னாலங்கண்டு வீதி, அரியாலையில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக சித்துபாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.04.சின்னாலங்கண்டு வீதி,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்**

**077 456 7213**

### திருமதி விமலர் அருளேஸ்வரி பாலசுப்பிரமணியம்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், இல.618 மானிப்பாய் வீதி, ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விமலர் அருளேஸ்வரி பாலசுப்பிரமணியம் 31.03.2019 ஞாயிற்றுக்கிழமை காலை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் (மனேஜர்) - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவசோதி - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், C.S பாலசுப்பிரமணியத்தின் (C.S. பாலா) அன்பு மனைவியும், சிவராஜா, காலஞ்சென்ற கமல அருளேஸ்வரி மற்றும் பாக்கியராஜா (ஆஸ்திரேலியா) இராஜேஸ்வரி, விஜயராஜா, யோகேஸ்வரி (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தசந்தன் (ஆஸ்திரேலியா), வசந்தன், கீர்த்திகா ஆகியோரின் அன்புத் தாயாரும், பிரியா (ஆஸ்திரேலியா), றமா ஆகியோரின் அன்பு மாமியாரும், ரெவின் சிவோன், திவ்வியா, ஹஜானன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.04.2019) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**618, மானிப்பாய் வீதி,**
**ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.**

**தகவல்: C.S.பாலசுப்பிரமணியம்**
**(C.S.பாலா- கணவர்)**

**021 222 8033**

## அமைச்சர்களின் மின்சாரப் பட்டியலை சபையில் சமர்ப்பிக்குமாறு வலியுறுத்து

கொழும்பு,ஏப். 1

மக்கள் மின்சாரத்தை கட்டுப்பாடுடன் பயன்படுத்த வலியுறுத்தும் அரசு முதலில் அமைச்சர்களின் மாதாந்த மின் கட்டணப்பட்டியலை சபையில் சமர்ப்பிக்க வேண்டும் என ஜே.வி.பி வலியுறுத்தியுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இந்த ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்திமற்றும் பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சு, மின்வலு, வலுசக்தி மற்றும் தொழிற்துறை அபிவிருத்தி அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் நலிந்த ஜெயதிஸ்ஸ இதனைக் குறிப்பிட்டார். இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்.

மக்களின் அத்தியாவசிய பொருள்கள் அனைத்தினதும் விலை உயர்வடைந்துள்ளது. இந்த நிலையில் மின் துண்டிப்பும் இடம்பெற்றுவருகின்றது. இதற்கு அமைச்சர் ரவி கருணாநாயக்க மக்களிடம் மன்னிப்பும் கேட்டுள்ளார். மன்னிப்பு கேட்பது ஒருபுறம் இருக்க மக்களை கட்டுப்பாடுடன் மின்சாரத்தை பயன்படுத்த வலியுறுத்தியுள்ளார். மக்கள் ஏற்கனவே சிக்கனமாகவே மின்சாரத்தைபயன்படுத்தி வருகின்றனர். இன்றுள்ள பொருளாதார நெருக்கடியில் மக்கள் மிகவும் சிக்கனமாகவே வாழ்கின்றனர்.

மக்களை வலியுறுத்தும் அரசு ஒவ்வொரு அமைச்சர்களும், ஆளும்கட்சி உறுப்பினர்களும் தத்தமது வீட்டின் இரண்டுமாத மின்சார கட்டணப்பட்டியலை சபையில் சமர்ப்பிக்க வேண்டும். இதனை ஒரு சவாலாக எடுத்துகொண்டு ஒவ்வொருவரும் சபையில் முன்வையுங்கள். ஏனெனில் இதற்கு முன்னர் அமைச்சுக்களில் இருந்தவர்கள் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான தொகையை தமது ஒரு மாத மின்சார கட்டணமாக செலுத்தியுள்ளனர். மக்களை கட்டுபாடுடன் செயற்படக் கூறும் முன்னர் இந்தஆட்சியாளர்களின் லட்சணம் என்னவென்பதை அறிந்து கொள்ள வேண்டும் என அவர் குறிப்பிட்டார். (க-31)

### பேருந்து



சாரட்டுப் போல உருளுமே
வீதி எங்கும் போகுமே
ஆளை ஏற்றிச் செல்லுமே
அழகுப் பேருந்து என்னுமே
ஊர்கள் எங்கும் போகலாம்
உறவைக் கண்டு மகிழலாம்
பேதம் இன்றி எல்லோரையும் ஏற்றிச்
செல்லும் பேருந்து
ஓட்டுநர்கள் திறமையாய் ஓட்டுகின்ற வாகனம்
பாட்டும் கூடக் கேட்கலாம்
பரவசமும் அடையலாம்
பயணச்சீட்டு வாங்கியே
பத்திரமாய்ப் போகலாம்
பயணம் செய்து இன்பமாக
பல இடங்கள் பார்க்கலம்.

**சதாபொன்ஸ் கல்விநிலையம்**
**(ஒழுக்கம் சார் கல்வி)**
**மாலிசந்தி அல்வாய்**

A/L 2021 கலை வர்த்தகப் பிரிவு
வகுப்புக்கள் ஆரம்பம்
03.04.2019 புதன்
மாலை 3.00 மணி

**077 309 5176/021 226 3206**

# சொல்லும் செயலும்



ஒரு கிராமத்தில் பசியோடு உணவுக்கு அலைந்து கொண்டி ருந்தது ஒரு ஓநாய். இறுதி யில் அது கிராமத்தின் கடைசியில் இருந்த ஒரு குடிசைப் பக்கமாக வந்தது. அப்போது அந்தக் குடி சையின் உள்ளே ஒரு சிறு பையன் அழுது கொண்டிருந்தான். ஒரு பாட்டி அவனை அதட்டி "நீ உன் அழுகையை நிறுத்து. இல்லா விடில் உன்னை ஓநாயிடம் தூக்கிப் போட்டு விடுவேன்" என்று பயமுறுத்திக் கொண்டிருந்தார். அதனைக் கேட்டு ஓநாய் மேலும் நடந்து அலையாமல் குடிசைக்கு வெளியே படுத்துக் கிடந்தது. கிழவி எப்போது பையனை வெளியே எறிவாள் என்று ஆவலோடு எதிர்பார்த்துக்கெண்டிருந்தது. இரவு நேரம் ஆகியும் ஓநாய் காத்துக்கொண்டேயிருந்தது. இப்போது குடிசைக்குள் இருந்து பாட்டியின் குரல் கேட்டது. "என் தங்க ராசா! அழாதே! உன்னை ஓநாயிடம் தூக்கிப் போடமாட்டேன். கிழட்டு ஓநாய் இந்தப்பக்கம் வரட்டும், அதை அடித்துக் கொண்டு விடுவோம் என்றாள். பாட்டி கூறியதைக் கேட்டுக்கொண்டிருந்த ஓநாய் "சே" இந்த மனிதர்கள் எல்லாம் பேசுவது ஒன்று செய்வது வேறாக இருக்கிறதே என்று எண்ணியபடி எழுந்து வேறு திசையை நோக்கிப் போனது.



## புதிய...

தந்தை செல்வாவின் 121 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வளாக புனித தோமா ஆலயத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் ஒரு தேசம் என்ற உணர்வை ஊட் டியவர் தந்தை செல்வா.

ஒரு நாடாக பரிணமிக்காதபோதும் நாம் ஒரு மக்கள் ஒரு தேசம் என்பதை நிலைநிறுத்தும் கோட்பாடு அன்றே நிலைநிறுத்தப்பட்டது. இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாப்பின் அடிப்படையே அதுதான். இந்த எண்ணக் கரு இப்போது எல்லா அரசியல் கட்சிகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதனை தமது கொள் கையாகவும் காண்பிக்கின்றனர்.

பண்டாரநாயக்காவின் காலத்தில் தந்தை செல்வா தமிழ் மக்களின் வேணவாக்களை கூறியபோது அதற்குப் பதிலளித்த பண்டார நாயக்க, நீங்கள் கிறிஸ்தவர். தமிழ் மக்களில் அதிகமானோர் இந்துக்கள். நீங்கள் அவர் களை எப்படிப் பிரதிநிதித்துவப்படுத்த முடியும் என்று கேட்டார். தமிழ் மக்கள் தங்களது அரசியல் தலைவர், மதத்தை மாற்ற வேண் டும் என்று கோராதது தமிழ் மக்களின் சிறப் புக் குணாம்சம் என்று பதிலளித்தார். இன்று சமயமும், அரசியலும் கலப்பது குறித்துப் பல கருத்துக்கள் உள்ளன.

மலையக மக்களின் குடியுரிமை பறிக்கப்பட் டபோது, எண்ணிக்கையில் சிறுபான்மையி னரின் நிலமையை எண்ணி தந்தை செல்வா நடவடிக்கை எடுத்தார். கூட்டாட்சி முறைமையே இலங்கைக்குப் பொருத்தம் என்ற நிலைப்பாட்டை முன்வைத்தார். ஒற் றாயாட்சி என்றால், சட்டத்தை உருவாக்கும் சபை ஒன்றுதான். இதில் எண்ணிக்கையில் சிறுபான்மையினரின் வாக்கில் பலன் கிடை யாது. கூட்டாட்சி முறைமையை உருவாக்கி, மத்திக்கு சமனான சட்டவாக்க சபை உரு வாக்கப்படவேண்டும். சிறுபான்மையினரும் நாட்டில் சம தகுதியுள்ள மக்களாக அப்போதே வாழ முடியும் என் கருதி அதை அடைவதற்கு தந்தை செயற்பட்டார். பண்டா செல்வா ஒப் பந்தம். இதில் கூட்டாட்சி என்ற சொல் பதம் நேரடியாக இல்லை. இதன் பின்னர் டட்லி செல்வா ஒப்பந்தம். இந்த ஒப்பந்தங்களை பிரதான கட்சிகள் கிழித்தெறிந்தன.

இந்த ஒப்பந்தங்களுக்காக எவ்வளவு இணங்கிச் செல்ல முடியுமோ அதற்கு முயற் சித்தார். இரண்டு தடவைகள் ஏமாந்த பின் னரும் சிறிமா அரசால் உருவாக்கப்பட்ட சபையில் ஆராயவும் அவர் இணங்கினார். அதுவும் தோற்கடிக்கப்பட்டபின்னர், இவற் றால் பயன் இல்லை. சபையிலிருந்து வெளி நடப்புச் செய்து நாடகம் ஆடவும் விரும்பவில்லை என்று கூறினார். எமது இணக்கம் இன்றி பெரும்பான்மை வாக்குக ளின் தீர்வு எம்மைக் கட்டுப்படுத்தாது என்று கூறியே, நாடாளுமன்ற உறுப்புரிமையைத் துறந்து தேர்தலிற்கு அழைப்பு விடுத்தார்.

இது ஒரு நாடு என்று கூறும் தலைவர்கள் தமிழ் மக்களை ஒரு தேசம் எனக் கூறுவதில் இருந்து எம்மை வெளியே வைத்திருக்கின் றார்கள். ஐரோப்பியர்களிடம் இழந்த இறை மையை மீண்டும் பெறுவோம் என்று வட் டுக்கோட்டை தீர்மானம் நிறைவேற்றப்பட் டது.

இன்று ஒரு நாட்டுக்ள் வாழத் தயார் என் கின்றோம். இதுவரை எமது சம்மதத்தைக் கொடுக்கவில்லை. அதிகாரப் பகிர்வு முறையை சிங்களவர்கள் ஏற்றுக் கொண்:டால் நாம் தயார். அதிகாரப் பகிர்வை வழங்க மறுத்தால் எமது இணக்கத்தைப் பெறுவது சாத்தியமற்றது. அனைவரும் ஒன் றாக வாழ அனைவரும் ஏற்று தயாரித்த ஒப்பந்தம் இதுவரை தயாரிக்கப்படவில்லை. அதாவது நாமும், சிங்களவர்களும், முஸ் லிம்களும் ஏற்கும் ஒப்பந்தம் வந்தாலே ஒரு நாட்டுக்குள் வாழும் நிலமை ஏற்படும்.

இந்த நிலையில் இரு கட்சிகளும் இணைந் திருந்த நிலையில் இதனை உருவாக்க முடி யும் என்று நம்பினோம். கடந்த ஒக்ரோபர் 26ஆம் திகதி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன குத்துக்கரணம் அடித்தார். அடுத்த கட்சியின் தலைவரிடம் துணிவு இல்லாத காரணத்தால் இந்த முயற்சி தடைப்பட்டது. இருப்பினும் நாம் முயற்சியைக் கைவிட வில்லை - என்றார் (ஒ.5.105)

## இலங்கை...

அரசு கட்சியின் மூலக்கிளைத் தெரிவின் பின்னர் பொதுமகன் இருவர்களைத் தாக்கிய குற்றச்சாட்டில் புதுக்குடியிருப்பு பொலிஸா ரால் தமிழரசு கட்சியின் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் கைதுசெய் யப்பட்டுள்ளார்.

முப்புரம் வட்டாரத் தொகுதியின் மூலக்கிளை தெரிவு நடைபெற்றுள்ளது. மூலக்கிளையின் தலைவராக தேவிபுரம் பகுதியைச் சேர்ந்த இருவர் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் இருவருக்கும் இடையில் வாக்கெடுப்பு நடத் தப்பட்டு அதில் ஒருவர் தெரிவாகியுள்ளார். முப்புரம் வட்டாரத்தைச் சேர்ந்த பிரதேச சபை உறுப்பினர் தோல்வியுற்றுள்ளார்.

இதன் பின்னர் பொதுமகன் இருவர் மீது தாக்குதல் நடத்தியதாக புதுக்குடியிருப்பு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதற்கு அமைவாக புதுக்குடியிருப்பு பொலிஸாரால் தமிழரசு கட்சியின் பிரதேச சபை உறுப்பி னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

(ஒ.5.246)

## போதைப்பொருள்கள்...

டைந்துள்ள 765 கிலோ கிராமிற்கும் அதிக மான போதைப்பொருள்கள் இன்று முற்பகல் களனி மகுறுவெலவில் அமைந்துள்ள சுரவீர களஞ்சிய வளாகத்தில் வைத்து அழித்தொ ழிக்கப்படவுள்ளது.

இதுதொடர்பில் அரச தலைவரின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக்கமைய இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. அதனை பார் வையிடுவதற்கு அரச தலைவரும் கலந்து கொள்ளவுள்ளார். இந்த நடவடிக்கைகளை பார்வையிட ஊடகங்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணிய கத்தின் தலைமையில் பன்னாட்டு விதிமு றைகளுக்கமைவாக போதைப்பொருள்கள் அழித்தொழிக்கப்படவுள்ளன. பொலிஸா ரால் கைப்பற்றப்படும் போதைப்பொருள்க ளுக்கு என்ன நடக்கின்றது என்பது தொடர் பில் பொதுமக்கள் இடையே தோன்றியிருக் கும் சர்ச்சைகளுக்கு தீர்வளிக்கும் முகமாக அரச தலைவரின் பணிப்புரையின் கீழ் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் திகதி 926 கிலோகிராம் கொக்கெயின் போதைப் பொருள் பகிரங்கமாக அழித்தொழிக்கப்பட் டது. 2016ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 9ஆம் திகதி கொழும்பு துறைமுகத்துக்கு கப் பல் மூலமாக கொண்டுவரப்பட்ட போதைப் பொருள்களே அவ்வாறு அழிக்கப்பட்டன.

இதுவரை கைப்பற்றப்பட்ட போதைப்பொ ருள்களை பகிரங்கமாக அழித்தொழிப்பதற் கான நடவடிக்கைகள் இன்று மேற்கொள்ளப் படவுள்ளதாக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

நாளை மறுதினத்திலிருந்து சட்டவிரோத போதைப்பொருள்கள் தொடர்பான சுற்றிவளைப்புகளை மேலும் தீவிரப்படுத்து வதுடன், போதைப்பொருள்களை இலங்கை யிலிருந்து முற்றுமுழுதாக இல்லாதொழிக் கும் வேலைத்திட்டங்களை துரிதமாக முன் னெடுத்து செல்வதற்கு அரச தலைவரின் பணிப்புரைக்கமைய நடவடிக்கைகள் எடுக் கப்பட்டுள்ளது - என்றுள்ளது. (ஒ.5)

## குடிதண்ணீர்...

அமைச்சின் செயலர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

குடாநாட்டின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு வடமராட்சி நீரேரியை மையப்படுத்தி குளம் அமைக்கும் திட்டம் முன்மொழியப்பட்டு, அதற்கு நிதி ஒதுக்கப் பட்டுளளது. திட் டத்தை செயற்படுவ தற்கான அனுமதி இழுபறிப்படும் நிலை யில், மற்றொரு தீர் வுத் திட்டம் முன்மொ ழியப்பட்டுள்ளது.

அமைச்சின் செயலர் வே.சிவஞானசோதி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடலில் பிரயோசன மின்றி கலக்கும் நீரின் பெரும் பகுதி கீழ்பாலியாறு நீர்தேக்கத்தில் தேக்கி வைக்கப்பட்டு யாழ்ப்பாண மாவட்டத் துக்கான குடிநீர் வளங்களை மேற்கொள்ள முடியும். யாழ்ப்பாண மாவட்டத்தில் நீருக் கான கேள்வி வருடாந்தம் 22 மில்லியன் கனமீற்றர்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த நீர்தேக்கமானது மன்னாரிலுள்ள பெரும்பரப்புக்குளம் என்ற கைவிடப்பட்ட குளத்தை மறுசீரமைப்பதன் மூலம் நீர்தேக் கமாக மாற்றமுடியும். இந்த நீர்தேக்கத்தின் கொள்ளளவு 37 மில்லியன் கனமீற்றர்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 3 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா திட்டத்தை செயற்படுத் தத் தேவை.

நீர்வழங்கல் அமைச்சாலும், தேசிய நீர்வ ழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையாலும் முழுமையான சாத்தியவள ஆய்வை மேற் கொள்வதற்கு 40 மில்லியன் ரூபா ஒதுக்கப் பட்டுள்ளது. இதன்அடிப்படையில் இந்தக் கருத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு பொருத்த மான நிதிப்படுத்தலுடன் நடைமுறைப்படுத் தப்படும்.

கீழ்பாலியாறு நீர்தேக்கத்தை நிர்மாணிப்பது டன் இது வவுனிக்குளம், கொள்ளவிளான்கு ளம், கல்விளான்குளம், மல்லாவிகுளம் என் பவற்றுக்கு கீழ்நிலை நீரோட்டமாக நிர்மா ணிக்கப்படுவதற்கும் முன்மொழியப்பட் டுள்ளது - என்றுள்ளது. (ஒ.5)

**வீடு வளவு விற்பனை**

அச்சுவேலி தெற்கு பயித்தோலை வீதிச்சந்திக்கு அண்மையில் உள்ள வீடு வளவு விற்பனைக்கு உள்ளது.


* மூன்றுபரப்புக்காணி சுற்றுமதில்
* அண்மைக்காலத்தில் கட்டப்பட்ட பெரிய வீடு

**தொடர்பு - 077 424 8765**

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த (02.03.2019) சனிக்கிழமை சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர்

**முருகேசு சரவணமுத்து**



அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ் வுகள் இன்று (01.04.2019) திங்கட் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர் ந்து நடைபெறும் மதிய போசன நிகழ் விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

உசன், மிருசுவில். 077 610 8420 குடும்பத்தினர்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# கண்காணிப்பு குறித்து ஐ.நா. ஆணையருக்கு தெரியாதோ?

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அண்மையில் ஓர் அறிக்கை விடுத்துள்ளார். அவர் கூறியதைத் தவறாக அர்த்தப்படுத்தியிருக்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்தும் அறிக்கை அது. அதேநேரம் மறைமுகமாக மற்றொரு தெளிவையும் அது வழங்கியிருக்கிறது.

ஜெனிவா சென்ற இலங்கைப் பிரதிநிதிகளுக்கும் ஆணையாளருக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடல் குறித்துக் கொழும்பில் உள்ள ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்த கருத்துச் சரியானதல்ல, பிழையாக அர்த்தப்படுத்தப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கை கூறுகின்றது.

ஐ.நா. ஆணையரின் அறிக்கையில் இலங்கை தொடர்பில் கூறப்பட்ட சில விடயங்கள் பொருந்திப்போக முடியாதவை என்பதை ஆணையாளர் ஏற்றுக்கொண்டார் என்றும் இது போன்ற விடயங்களில் இனிவரும் காலங்களில் மிக அவதானமாக நடந்துகொள்ளவேண்டும் என்று தனது இரு அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார் என்றும் ஆளுநர் தெரிவித்திருந்தார் என "டெய்லி மிரர்" ஆங்கிலப் பத்திரிகை தெரிவித்திருந்தமையை மறுப்பதற்காகவே அந்த அறிக்கை.

அந்த இரு கருத்துக்களுமே உண்மையற்றவை என்றும் ஒன்றில் ஆளுநரின் கருத்தைப் பத்திரிகை தவறாகப் புரிந்துகொண்டிருக்கலாம் அல்லது தனது கருத்தை ஆளுநர் தவறாகப் புரிந்திருக்கலாம் அல்லது தனது கருத்தைத் தவறாக மேற்கோள்காட்டியிருக்கலாம் என்றும் தெரிவித்திருக்கிறார் ஆணையாளர். அதற்கும் மேலாக, இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரது முழு அறிக்கையையும் அது தொடர்பான தனது வாய் மூல அறிக்கையையும் தான் இப்போதும் ஆணித்தரமாக வழிமொழிந்து நிற்கிறேன் என்றும் தெரிவித்திருக்கிறார்.

இது ஆளுநரின் கருத்தோடு தொடர்புபட்டது. இன்னும் சொல்லப்போனால் இதற்காகத்தான் அறிக்கையே வெளியானது. ஆனால், அவரது அறிக்கையில் மற்றொரு இடத்தில் கூறப்பட்டிருக்கும் விடயம் கூர்ந்து நோக்கப்படவேண்டியது. ஏனெனில் அது தொடர்பில் ஜெனிவா அமர்வுக்கு முன்னதாக தமிழ் மக்களின் அரசியல் பரப்பில் கடும் வாதப் பிரதிவாதங்கள் நடந்தன. ஊடகங்கள்கூட அதற்காகக் கடுமையாக விமர்சிக்கப்பட்டன, குற்றஞ்சாட்டப்பட்டன.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு வழங்கப்படப்போவது 2 வருட கால அவகாசமா அல்லது 2 வருடக் கண்காணிப்பு நீடிப்பா என்பது தொடர்பானது அந்த விவகாரம். இலங்கை தொடர்பான ஐ.நா. தீர்மான வரைவு வெளியானது முதல் கொழும்புக்கு மேலும் இரண்டு வருடகால அவகாசம் வழங்கப்படப்போகிறது என்றன ஊடகங்கள். ஆனால் அப்படிச் சொல்வது தவறு என்றனர் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த சிலர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலும் இந்த விளக்கம் வழங்கப்பட்டு, ஏற்கப்பட்டு அதனடிப்படையில் கண்காணிப்பை நீடிக்க அனுமதியும் வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஏப்ரகாம் சுமந்திரன் இன்னும் ஒருபடி மேலே சென்று எத்தனை தரம் சொன்னாலும் வேண்டுமென்றே ஊடகங்கள் திரிபுபடுத்துகின்றன என்று வசைபாடினார். இந்தப் பின்னணியில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை உண்மை எது என்பதைச் சொல்லியிருக்கிறது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 30/1 (2015), 34/1 (2017) தீர்மானங்களைச் செயற்படுத்த இலங்கை அரசுக்கும் அதன் மக்களுக்கும் ஒத்துழைப்பு வழங்க தானும் தனது அலுவலகத்தினரும் மிகுந்த அர்ப்பணிப்புடன் உள்ளார்கள் என்றும் அத்தோடு நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்றுக்கொண்ட பொறுப்புக்களை முழுமையாக நிறைவேற்றி முடிப்பதற்கு மேலும் இரண்டு வருடங்களைக் கடந்த வாரம் நிறைவேற்றிய மற்றொரு தீர்மானத்தின் (40/1) மூலம் மனித உரிமைகள் சபை வழங்கியிருக்கிறது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தீர்மானத்தை நிறைவேற்ற மேலும் இரண்டு வருடங்கள் வழங்கப்பட்டுள்ளது என்று ஆணையாளர் கூறியிருக்கிறாரே தவிர, இலங்கையின் மீதான கண்காணிப்பை ஐ.நா. மனித உரிமைகள் சபை இரண்டு வருடங்களுக்கு நீடித்திருக்கிறது என்று எந்த இடத்திலும் அவர் குறிப்பிடவில்லை. ஆக மொத்தத்தில் கொழும்புக்கு வழங்கப்பட்டது கால அவகாசம்தான் என்று ஊடகங்கள் கூறியதில் தவறு ஏதும் இல்லை.

ஒருவேளை இதனையும் நாம் தவறுதலாகப் புரிந்து கொண்டிருந்தால் ஆணையாளர் மற்றொரு அறிக்கை மூலம் அது கால அவகாசம் இல்லை, கண்காணிப்புத்தான் என்று தெளிவுபடுத்துவார் என்று எதிர்பார்க்கலாம்!



ஐ.நா. ஒரு பலமான அமைப்பாக இயங்கியிருக்குமானால் போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற படுகொலைகளைத் தடுத்து நிறுத்தியிருக்க முடியும். வெள்ளைக் கொடிகளுடன் படையினரிடம் சரணடையச் சென்றவர்களைக்கூட காப்பாற்ற முடியாத நிலையில்தான் ஐ.நா. இருந்திருக்கின்றது. ஐ.நாவின் பொதுச் செயலாளராகவிருந்த பான்கீ மூனின் நம்பகத்தன்மை கேள்விக்குரியதாகவே அப்போது மாறிவிட்டிருந்தது

# ஐ.நாவும் இலங்கையும்

இந்துமதி

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்துக்கு தெற்கில் கிளம்பியுள்ள எதிர்ப்பு அலை இனவாதிகளுக்கு உற்சாகமூட்டுவதாக அமைந்துள்ளது.

நாட்டின் தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச ஆகியோர் இந்தத் தீர்மானத்தில் அடங்கியுள்ள விடயங்களுக்குத் தமது எதிர்ப்புக்களை பகிரங்கமாகவே வெளியிட்டுள்ளார்கள். இந்த அணியுடன் ஜே.வி.பியும் இணைந்துள்ளது.

**நீதி கிடைக்கக்கூடாது**

தமிழர்களுக்கு நீதி கிடைத்துவிடக்கூடாது என்பதே இந்த எதிர்ப்புகளுக்கான பிரதான நோக்கமாகும். தமிழர்களுக்கு எதிரான உணர்வுகள் தீவிரமாக எழுந்துள்ளதையும் இது எடுத்துக்




காட்டுகின்றது. பன்னாட்டு நீதிபதிகள் இலங்கை விவகாரத்தில் தலையிடுவதற்கான சூழல் உருவாகுமானால் பிறிதொரு கறுப்பு ஜூலை இங்கு உருவாகிவிடுமென எச்சரிக்கும் அளவுக்கு நிலைமை மோசமான கட்டத்தை எட்டிவிட்டது.

ஐ.நாவின் புதிய தீர்மானத்துக்கு இணை அனுசரணையை வழங்கிவிட்டு உள்நாட்டில் அதற்கு எதிராகக் குரல் கொடுத்து வருகின்றமை நியாயத்தின் வழிப்பட்டதல்ல. பன்னாட்டுச் சமூகத்தை மட்டுமல்லாது உள்நாட்டு மக்களையும் ஏமாற்றுகின்றதொரு செயற்பாடாவே இதைப் பார்க்க முடிகின்றது.

**தாமதம் கூடாது**

ஐ.நா. ஒரு பலமான அமைப்பாக இயங்கியிருக்குமானால் போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற படுகொலைகளைத் தடுத்து நிறுத்தியிருக்க முடியும். வெள்ளைக் கொடிகளுடன் படையினரிடம் சரணடையச் சென்றவர்களைக்கூட காப்பாற்ற முடியாத நிலையில்தான் ஐ.நா. இருந்திருக்கின்றது. ஐ.நாவின் பொதுச் செயலாளராகவிருந்த பான்கீ மூனின் நம்பகத்தன்மை கேள்விக்குரியதாகவே அப்போது மாறிவிட்டிருந்தது.

அவரால் தமது கடமைகளைச் சரிவர ஆற்ற முடியவில்லை என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

ஐ.நாவில் ஏகமனதாக நிறைவேறிய ஒரு தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் எவ்வித தாமதமும் இருக்கக்கூடாது. ஆனால் இதற்கான தற்துணிவு ஐ.நாவிடம் உள்ளதா? என்பதுதான் கேள்விக்கு உட்பட்டது.

**ஆளுநர்**

ஜெனிவாவில் தமிழர் குழுக்கள் ஓரணியாக செயற்படவில்லையென்ற வடக்கு ஆளுநரின் கருத்து ஏற்கத்தக்கது. அரசியல் ரீதியாக ஒருவருடன் ஒருவர் இங்கு முரண்பட்டு நின்றதைப் போன்றே அவர்கள் ஜெனிவாவிலும் காணப்பட்டதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தமிழர்கள் அனைவரும் ஓர் அணியில் திரண்டு நிற்காத வரையில் இவர்களால் எதையும் சாதித்துவிட முடியாது. பன்னாட்டு நீதிபதிகளைக் கொண்ட விசாரணையைத் தாம் எதிர்ப்பதாக ஆளுநர் தெரிவித்துப் பாதிக்கப்பட்ட தமிழர்களின் வெறுப்பைச் சம்பாதித்துக்கொண்டார். அரசுக்கு வக்காலத்து வாங்குவதாகவும் இவர்மீது குற்றம் சுமத்தப்பட்டது. பின்னர் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தாம் கூறியதை வடக்கு ஆளுநர் தவறாகப் புரிந்துகொண்டதாகக் குற்றம் சுமத்தினார். ஆளுநரின் தேசியப் பாடசாலைகள் தொடர்பான கருத்து மற்றும் யாழ். மாநகர சபைக்குள் சட்டவிரோதமாக நடப்பட்ட கம்பங்களை அகற்றுவதற்கு ஆளுநர் தடையாகவிருப்பதாக மாநகரசபையினர் தெரிவித்துள்ளமை ஆகியனவும் ஆளுநருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தவல்லன.


**சிங்கள விசுவாசி**

வடக்கு ஆளுநராக தமிழர் ஒருவரை நியமித்து அவர் ஊடாகவே வெளிநாட்டு நீதிபதிகள் தேவையில்லை என்ற கருத்தை உலக அரங்கில் சொல்ல வைத்துள்ளது அரசு. ஆளுநர் என்ற பதவியில் தமிழர் ஒருவர் அமர்ந்தால் என்ன, சிங்களவர் ஒருவர் அமர்ந்தால் என்ன, அந்தப் பதவியின் இருக்கை அவர்களை சிங்கள விசுவாசியாக மாற்றிவிடும்.

ஐ.நா. தீர்மானத்தை எதிர்ப்பதில் தென்னிலங்கை தலைவர்கள் ஓரணியில் திரண்டுள்ள இந்தத் தருணத்தில், அவர்களுக்கு ஒத்து ஊதும் விதத்திலேயே வடக்கு ஆளுநர் செயற்படுகின்றார் என்பதும் துரதிஷ்டமானதே.

# ஆரிய குளத்துக்கு பாதுகாப்பு வேலி

**யாழ்ப்பாணம்,ஏப்.1**
**ஆரியகுளத்தைப் பாதுகாக்கும் வகையில் குளத்தைச் சூழ தற்போது பாதுகாப்பு வேலி அமைக்கும் பணியை மாநகர சபை ஆரம்பித்துள்ளது.**



ஆரிய மன்னரால் அமைக்கப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த குளம் அழிவடையாமலும் ஆக்கிரமிக்கப்படாமலும் இருப்பதை உறுதி செய்யும் வகையில் உடனடியாகக் குளத்தைச் சுற்றி பாதுகாப்பு வேலி அமைத்து முழுமையாகச் சபையின் ஆளுகையில் கொண்டு வர வேண்டும்.
என்று என்று மாநகர சபையில் கடந்த பெப்ரவரி மாதம் இடம்பெற்ற சபை அமர்வில் உறுப்பினர் ந.லோகதயாளனால் தீர்மானம் முன்வைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.
இதன் அடிப்படையில் தற்போது மாநகர சபை சுற்றிப் பாதுகாப்பு வேலியை அமைப்பதோடு அடுத்த கட்டமாகக் குளத்தை துப்புரவு பணியும் முன்னெடுக்கப்படவுள்ளது.
இவ்வாறு இடம்பெறும் பணியின் மூலம் குளம் , குளத்தின் தண்ணீர் நிலையும் அயல்புறம் நீரும் பாதுகாக்கப்படுவதோடு பாதுகாப்பு வேலியில் விளம்பர நிறுவனங்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்கும் வாய்ப்பும் கிட்டியுள்ளது.
இதன் மூலம் பிறரின் ஆக்கிரமிப்பு தடுக்கப்படுவதோடு இந்தப் பிரதேசத்தையும் அழகுபடுத்தும் வாய்ப்பு கிட்டியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. (ஜ -105)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம், ஏப்.1
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் வழங்கல் மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று திங்கள் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை மின்தடை ஏற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. வவுனியா பிரதேசத்தில் லக்ஸபானா வீதியிலும் மன்னார் பிரதேசத்தில் நானாட்டான் ஆகிய பிரதே சங்களி லும் ஏப்ரல் 2 செவ்வாய் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை யாழ்ப்பாணம் பிரதேசத்தில் அக்கரை.வளலாய், அண்ணாசிலையடி, மண்டான் ஆகிய இடங்களிலும், வவுனியா பிரதேசத்தில் லக்ஸபானா வீதி, பொற்கோவில் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் வங்காலைப்பிரதேசம், பிடாரிக்குளம், மாவிலங்கேணி, பூவர சங்குளம், அளவாக்கை, நானாட்டான், பல்லாங்கோட்டை, நொச்சிக்குளம், செம்மண் தீவு, முருங்கன் பிட்டி, செம்மண்தீவு டொன் பொஸ்கோ ஆகிய பிரதேசங்களிலும், ஏப்ரல் 3 புதன் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்ப்பாணம் பிரதேசத்தில் வறுத்தலைவிளான், வீமன்காமம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் லக்ஸபானா வீதியிலும் மின்தடை ஏற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஈருருளி கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஏப் 1
இளவாலை வருத்தபடாத வாலிபர் சங்கத்தின் 'உயர்த்தும் கரங்கள்' செயற்திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் பகுதியில் கால்கள் இயங்க முடியாத தந்தையுடன் பொருளாதார நலிவான குடும்பச் சூழலில் வாழ்ந்துவரும் மாணவனுக்குப் பாடாசலைக்குச் செல்லத் தேவையான ஈருருளி ஒன்று வழங்கப்பட்டது.
இதற்கான நிதியை ஆஸ்திரேலியா வாழ் அன்பர் ஒருவர் வழங்கியிருந்தார் . (க)



## வீதி விளக்கு பொருத்தல்

யாழ்ப்பாணம்,மார்ச் 31
யாழ்ப்பாணம்மாநகர பிரதேசத்தில் வீதி விளக்குகள் பொருத்தும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.
அனைத்து பிரதான வீதிகளுக்கும் வலுக்கூடிய மின்விளக்குகள் பொருத்தப்பட்டும் வருகின்றன.
மாநகராட்சி மன்றத்தின் 27 வட்டாரங்களுக்கும் இதற்கென ஒதுக்கப்பட்ட நிதி ஊடாக இந்த வீதி விளக்குகள் பொருத்தப்பட்டு வருவதாக மாநகர பிரதி முதல்வர் து.ஈசன் தெரிவித்தார். 1ஆம்,2 ஆம்,3 ஆம், 4 ஆம், 27ஆம், 26ஆம், 20ஆம் வட்டாரங்களுக்கு இந்த வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.
வீதி விளக்குகள் பொருத்தப்படாத ஏனைய வட்டாரங்களின் வீதிகளுக்கு வீதி விளக்குகள் பொருத்தப்படவும் உள்ளன. (க-17)

## வீட்டுத்திட்டத்துக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம்,ஏப் 1
'நாடு முழுவதும் 150 மாதிரிக்கிராமங்கள்' எனும் தொனிப் பொருளில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் ஆளுகைக்குட்பட்ட அளவெட்டி மேற்கு, விசவெட்டிப் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட 11 வீட்டு திட்டப் பயனாளிகளுக்கான வீட்டுத் திட்ட அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று ஜே/220 கிராம அலுவலர் க.பூபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.



இந்த நிகழ்வில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் உதவிப்பொறியியலாளர் எஸ்.நாகேஸ்வரன், தெல்லிப்பழைப் பிரதேச செயலக தேசிய வீடமைப்பு அதிகாரசபை அலுவலர் க.கனகவாசன், பொருளாதார அபிவிருத்தி அலுவலர் இ.பிரகாஸ், சமுர்த்தி அலுவலர் ச.கோபிக்கண்ணன் ஆகியோரும் வீட்டுத் திட்ட பயனாளிகள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க)

++++

யாழ்ப்பாணம்,ஏப். 1
யாழ்ப்பாணம் அளவெட்டி தெற்கு ஜே/119 கிராம அலுவலர் பிரிவு சூசையப்பர் ஆலயத்தருகில் நாடு முழுவதும்150 'மாதிரிக்கிராமம்' எனும் தொனிப்பொருளில் தெரிவுசெய்யப்பட்ட 12 பயனாளிகளுக்கான அடிக்கல் நேற்று இடம்பெற்றது.



கிராமா அலுவலர். எஸ்.ஜெயந்தினி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் உதவிப்பொறியியலாளர் எஸ்.நாகேஸ்வரன்,வலி.வடக்குப் பிரதேசத்துக்குப் பொறுப்பான தேசிய வீடமைப்பு அதிகார சபையின் உதவிப் பொறியியலாளர் கனகவாசா, பொருளாதார அபிவிருத்தி அலுவலர் ரீ .தயாநிதி, சமுர்த்தி அலுவலர் ரீ.தர்சிகா மற்றும் வீட்டுத் திட்டப் பயனாளிகள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-63)

## மின்சாரம் வழங்க 90 இலட்சம் ரூபா

சாவகச்சேரி, ஏப்.1
தென்மராட்சிப் பிரதேசத்தில் வீடற்ற குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்து வழங்க 5 மில்லியன் ரூபாவையும் மின்சாரம்இல்லாத குடியிருப்புகளுக்கு மின்சாரம் வழங்க 90 இலட்சம் ரூபாவையும் பிரதேச செயலகம் மூலம் மேற்கொள்ள யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் துரித கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்துள்ளார் எனத் தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கு அறிவித்துள்ளார்.
அத்துடன் பிரதேச கலாசார திணைக்களத்தின் ஊடாக மேற்கொள்ள சங்கத்தானை இயக்கச்சி அம்பாள் கோவில், மந்துவில் ஆதிசிவன் வீரபதீஸ்வரன் கோவில் ஆகியவற்றுக்குத் தலா 5 லட்சம் ரூபாவும் சாவகச்சேரி பெருங்குளம் பிள்ளையார் கோவிலுக்கு 2 லட்சம் ரூபாவையும்,
விவசாயத் திணைக்களத்தின் ஊடாக நுணாவில் கிழக்கு கற்குளிவயல் குளம், நுணாவில் கிழக்கு ஆரைக்குளம் ஆகியவற்றின் சீரமைப்புக்குத் தலா 2 இலட்சம் ரூபாவையும் சரசாலை பெரிய ராமாவில் குளம் சீரமைப்புக்கு 5 இலட்சம் ரூபாவையும் ஒதுக்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.
(க-9)

## வாகனச் சாரதிகளுக்கு தண்டம்

சாவகச்சேரி, ஏப்.1
அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய இரு வாகனச் சாரதிகளுக்குச் சாவகச்சேரி நீதிமன்றில் 2 லட்சத்து 75 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
அனுமதிப் பத்திரமின்றி வாகனங்களில் மணல் ஏற்றினர் என்ற குற்றச்சாட்டுகளுடன் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.
விசாரணையின்போது சாரதிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து ஒருவருக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் மற்றவருக்கு ஒரு.லட்சத்து 25 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது.
இதேவேளை, மதுபோதையில் சாரதிய அனுமதிப் பத்திரம், வாகன வரிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம் ஆகியவையின்றி பதிவு செய்யப்படாத வாகனம் செலுத்தினார் என்ற5குற்றச்சாட்டுக்களுடன் வரணி வடக்கைச் சேர்ந்த நபருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.
இதன்போது குற்றச்சாட்டுக்களை நபர் ஒப்புக் கொண்டதையடுத்து ஐந்து குற்றங்களுக்குமாக 23 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

## ஈழத்தின் தமிழிசை அரங்கேற்று நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.1
சங்கப் புலவர் ஈழத்துப் பூதந்தேவனார் முதல் இற்றைவரை இசைபடக் கவி புனைந்த ஈழத்துக் கவிராயர்களின் பாடல்களில் தெரிவு செய்யப்பட்ட நூறு பாடல்களுக்கு இசைவடிவம் கொடுத்து ஒரே அரங்கில் - ஒரே நாளில் 10 பாடகர்களால் அரங்கேற்றம் செய்யப்படவுள்ளது.
இந்த இசை தமிழிசை அரங்கேற்ற நிகழ்வு எதிர்வரும் 21ஆம் திகதி இலங்கை வேந்தன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.
யாழ்ப்பாணம் பல்கலைக் கழக இசைத் துறை முதுநிலை விரிவுரையாளர் தவநாதன் றொபேட்டின் நெறிப்படுத்தலில் நடக்கும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தமிழிசை வாக்கேயக்காரர் பொன். ஸ்ரீவாமதுவனும், சிறப்பு விருந்தினராக கலைஞர் வேல் ஆனந்தனும் கலந்து கொள்ளவுள்ளனர்.
நல்லைஆதீனக் குருமுதல்வர் சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள், திருமறைக் கலாமன்ற இயக்குநர் நீ.மரியசேவியர் அடிகள், தென்கயிலை ஆதீன குரு முதல்வர் அகத்தியர் அடிகள் ஆகியோர் ஆசி வழங்கஉள்ளனர்.
விபுலானந்தர், ஆறுமுகநாவலர், யோகர் சுவாமிகள், விநாசித்தம்பிப் புலவர், வீரமணி ஐயர் போன்ற 30க்கும் அதிகமாக கவிராயர்களின் பாடல்களுக்கே இசை வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. இரு ஆண்டுகள் தொடர் பயிற்சிகள் வழங்கப்பட்டு இந்த தமிழிசை அரங்கேற்ற நிகழ்வு நடத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
விரிவுரையாளர் றொபேட்டுடன் அவரது மாணவர்களான க.ரஜீவன், மு.துஸ்யந்தன், ஸ்ரீ.மதுராங்கி, அ.அமிர்தசிந்துஜன், சி.மதுஜா, ந.சங்கீதவாணி, மு.அனுச்சித்திரா, ப.சாரங்கள், க.சுடரோன் ஆகியோரும், ஈழத்தின் புகழ்பெற்ற பக்க வாத்தியக் கலைஞர்களின் துணையுடன் இந்த நிகழ்வை நடத்தவுள்ளனர்.
இந்த நிகழ்வு குரலோசை-நுண்கலைகளின் தாயகம் என்னும் அமைப்பினரால் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. (எ)

# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள்

2018ஆம் ஆண்டு ஜி.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சைப்பெறுபேறுகள் நேற்றுமுன்தினம் வெளியாகின. இதன்படி மாணவர்களின் பெறுபேறுகள் பாடசாலைகளால் வெளியிடப்பட்டுள்ளன.

**விடத்தற்பளை**
**கமலாசனி வித்தியாலயம்**
சி.நிரஞ்சன்- 8ஏ.சி, நா.செந்துஜா- 8ஏசி, ஐ.விதுரன்- 6ஏபி2சி, தே.சோபிதன் - 3ஏ4பி2சி, சு.விதுர்சனா-3ஏ2பி2சி2எஸ், லோ.மோகிதன் - ஏ3பி4சிஎஸ், இ.சுவேதிகா- ஏ2பி2சி2எஸ், யோ.பிந்துசன்- ஏ2பி4சிஎஸ், சே.லாவண்ஜா-ஏ2பிசி3எஸ், கி.கனிஸ்ரா- ஏ4சிஎஸ், ம.நிக்சனா- ஏபி2சி3எஸ், வி.சர்மினி- 2பி3சி3எஸ், ந.அஜந்தன்- 5சி2எஸ், சி.தனுசாந்தன்- 4சி3எஸ், சா.ரேணுகா- பி2சி3எஸ், அ.சுஜீவன்- 4சி3எஸ்.

**தெல்லிப்பழை யூனியன் கல்லூரி**
ஜெ. பபிஜனா-9ஏ , ஆர், பிரதாப்-5ஏ 4பி, எஸ்.மிதுசாலினி-5ஏ 4பி, பி.லதன்ராஜ்- 5ஏ பி 3சி.

**தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி**
க.வித்தகன்-9ஏ, சி.சிவோதயன்-9ஏ, செ.கஜநிலானி-9ஏ, த.தனுஜா-9ஏ (ஆங்கிலமொழி மூலம்), சி.தேனுஜா- 9ஏ(ஆங்கிலமொழி மூலம்), பு.சங்கவி-8ஏ பி, க.சோபிகா-8ஏ.பி, ஞா.கோபிதா-8ஏ.பி, சு.சுபிலாஸ்-8ஏ.பி (ஆங்கிலமொழிமூலம்), அ.டிலக்சி-8ஏ.சி, தி.சுகிதன்-7ஏ.2பி, சி.பிரதீஸ்-7ஏ.2பி, உ.கம்சாயினி- 7ஏ.2பி, லி.தீபிகா-7ஏ.2பி(ஆங்கிலமொழி மூலம்), சு.டிசாந்தினி-7ஏ.பி.சி (ஆங்கில மொழிமூலம்), வி.பிரமிளன்-7ஏ.பி.சி, த.சுஜிந்-6ஏ.3பி, ர.மதுமிதா-6ஏ.3பி, ஜெ.லாவண்ஜா-6ஏ. 3பி,
சி.கிருஜசனா- 6ஏ.3பி, ஜெ.அபிராமி, 6ஏ. 3பி, பு.கரிஸ்னி- 6ஏ.3பி, கி.சாகிதியா- 6ஏ.3பி (ஆங்கிலமொழிமூலம்), ஜெ.ரேகா-6ஏ.2பி.சி, சி.நிகிதன்-6ஏ.2பி.சி, உ.பிரஸ்தனா-5ஏ. 4பி, ச.டிலானி- 5ஏ.3பி.சி, யூ.விசாக்கா மிலேனியா-5ஏ. 3பி.சி(ஆங்கிலமொழிமூலம்). வே.அஜீபன்-5ஏ.2பி.சி.எஸ், சி.பவித்தா-5ஏ.2பி. சி.எஸ், சி.அனோஜா-5ஏ.2பி.சி.எஸ், சி.ஜனோசிகா-5ஏ.பி.3சி.

**யாழ்ப்பாணம் சென்ஜேம்ஸ்**
**மகா வித்தியாலயம்**
தே.பிரியங்கன்-2ஏ 2பி 4சி எஸ்.லி.அன்ரனி - ஏ 3பி 3சி 2சி,த.அபிஷாக் - பி 3சி 3எஸ்,யோ.நிதர்சன் - பி 3சி 2எஸ்,டெ. யக்ஷன் - 3சி 2எஸ்.

**முல்லைத்தீவு விசுவமடு மகா வித்தியாலயம்**
சி.அருண்குமார் - 9ஏ.ற.சுரபி - 9ஏ.ச. துவாரகன் - 8ஏ பி,இ.லிதுசன் - 7ஏ பி சி, அ.மதியழகன் - 7ஏ பி சி, ம.பவித்திரன் - 7ஏ பி சி, மு.சஞ்சிகா-6ஏ 3பி, க.தனுசியன் -6ஏ 2பி சி, அ.சரவண்ஜா - 6ஏ 2பி சி, வி.டனுஸ்ரிகா - 6ஏ 2பி சி, சு.துசான் - 6ஏபி2சி,ச.புங்கவி-5ஏ 4பி,
ச.கலைநிலா - 5ஏ 2பி 2சி,சி.நிவேதிகா - 5ஏ பி 3சி,சி.லிந்துஜன் - 5ஏ 4சி.

**சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி**
ப.கேஷானி - 9ஏ, சி.சுவேந்தினி - 9ஏ, நா.நிறோஜிகா - 9ஏ.பி.வித்தகி - 9ஏ, வ.கபீசன் - 8ஏ பி, இ.சிந்துஜன் - 8ஏ சி,ர. சுபாங்கன் - 7ஏ பி சி,ஜீ.கஜீவன்- 7ஏ பி சி.

**முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரி**
என்.ஹானுசா- 6ஏ 2பி சி, எஸ்.பிரியங்கா- 6ஏபிசி, கபின்சா- 4ஏ 2பி சி எஸ், ஜே.டினோஜா- 3ஏ2பி3சி, ஐ.சதுஜா- 2ஏ3சி3எஸ், எம்.பூலோகநாயகி- ஏ 3பி 3சி எஸ், கே.சங்கீர்த்தனா- ஏ பி 3சி 3எஸ், ஜே.சிமித்திரா-ஏபி3சி3எஸ், ஜே.லோகிகா- ஏபி2சி3எஸ், வை.லோகசர்வி- ஏபிசி 3எஸ், பி.கம்சிகா- 2பி3சி 3எஸ், வி.கிஷோபா- 4சி4எஸ், கே.பிருந்தா- 2சி 5எஸ், எம்.மகிந்தினி- சி4எஸ், .

**வவுனியா தமிழ்மத்திய**
**மகாவித்தியாலயம்**
எ.கொகின் 9ஏ,ஆர்.பவர்சன் 9ஏ.எ.சன்யில்ராச் 9ஏ, எஸ்.சாருண்யன் 9ஏ,ரி. தயாநந்தன் 9ஏ,உ.சாதித்தியன் 9ஏ ,எஸ். யதீஸ் 9 ஏ,கே.கரிசோபனசர்மா 9 ஏ,எம். விகர்ணன் 9 ஏ.பி.அருள்நேசசர்மா 9 ஏ.ஐங்கரன் 9 ஏ,எம்.யாகவன் 9 ஏ,யே. சிவசுதன் 9 ஏ.எஸ்.சருக்சன் 9 ஏ.எஸ். திவ்வியா 9 ஏ,வி.சர்விதன் 9 ஏ
எஸ்.விதுர்சன் 8 ஏபி,ஆர்.வேணுகாந் 8ஏ பி,வி.துளசியன்8ஏ பி,என்.கவின்சா 8ஏ பி,எஸ்.கிசாளன்8ஏ பி ,வி.சூர்யையன் 8ஏ பி,கே.சகோவிதசர்மா 8ஏ பி.

**வவுனியா நெளுக்குளம்**
**கலைமகள் வித்தியாலயம்**
ரா.சுலோயன் 9ஏ ,வி.துசானிகா 9ஏ,தி. நிகாருண்யா 9ஏ,தி.டில்சியா 9ஏ, ஏ. யாவேஸ்ட்டா 8ஏ பி,ரா.வத்சனா 7ஏ 2பி,சு.கலைய ருவி 7ஏ 2பி,ரா.டினோசிகா 7ஏ 2சி.

**பண்டாரிக்குளம் விபுலாநந்தா கல்லூரி**
மு.கேசிகன் 9 ஏ,யெ.தனுக்சன் 9ஏ ,சி. கணேசன் 9ஏ ,பி.சகீதரன் 9ஏ, தி.தனுயன் 8ஏ 2பி, சுதா அருள்வாசன் 8ஏ 2பி, சி.அனுசிகா 8ஏ சி.

**இலங்கை திருச்சபை தமிழ்கலவன்**
**வித்தியாலயம்**
ஆ.அதிசயா 8ஏ பி, செ.யாணுஜா 7ஏ பி, ச.சனோயன் 4ஏ 4பி, க.கிருத்திகன் 5 ஏ 3பி.

**வவுனியா முஸ்லீம் மகாவித்தியாலயம்**
எம்.யாசித் 7ஏ 2பி, எம்.சம்ரி 7ஏ பி, ரி. யமீன் 7ஏ 2சி, யே.அப்றினா 7ஏ 2சி.

**அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தி**
பா.டிலானி 6ஏ 2சி எஸ், சு.கார்திகா 4ஏ 3பி 2சி, கே.துஸ்யந்தி 3ஏ 4பி சி எஸ்.

**ஓமந்தை மத்திய கல்லூரி**
பி.பிரியங்கா 7ஏ 2பி, ஆர்.யசோதா 6ஏ 3பி, வி.யதுரன் 4ஏ 4பி.

**நெடுங்கேணி ஒலுமடு**
**தமிழ்மகாவித்தியாலயம்**
ந.டயந்தன் 8ஏ பி ,சு.டனுயா 7ஏ 2பி, க.சமர்வாணன் 7ஏ 2சி.

**வீரபுரம் மணிவாசகர் மகாவித்தியாலயம்**
க.பேரெழினி 7ஏ 2பி, போ.றீவா 5ஏ 3பி சி, ல.நிக்சலா 5ஏ பி சி 2எஸ், யே.யோய்பாயன் 5ஏ 3பி சி.

**வவுனியா கனகராயன்குளம்**
**மகாவித்தியாலயம்**
மா.பேவிசாளினி6ஏ 3பி ,சி.பிரனவன் 6ஏ 2பி சி,த.முரளிதரன் 6ஏ 2பி சி.

**வவுனியா பூந்தோட்டம்**
**மகாவித்தியாலயம்**
நிலுக்சன் 5ஏ 3பி சி, சாரோன் 5ஏ 3பி சி.

**நெடுங்கேணி மகாவித்தியாலயம்**
நா.நாதவாணி 7ஏ பி சி,ச.பாணுயா5ஏ 2பி சி எஸ், தீ.சுதர்சன் 3ஏ 4பி சி எஸ்.

**தரணிக்குளம் கணேஸ்வித்தியாலயம்**
கே.கேசனி 4ஏ 2பி 3சி, கு.திருனேஸ்வரி 4ஏ 2பி 3எஸ்,அ.அலஸ்ரினா 3ஏ 2பி 3சி எஸ், டி.அனோயன் 3ஏ பி 3சி 2எஸ்.

**கோமரசங்குளம் மகாவித்தியாலயம்**
ம.சர்வன் 9 ஏ, மோ.சயந்தன் 8ஏ பி,இ. யூட்சன் 8ஏ பி ,கா.டிலக்சன் 7ஏ 2பி.

**மறவன்குளம் பாரதிதாசன் வித்தியாலயம்**
ரா.லிவின்சிகா4ஏ 3பி 2சி ,ரா.லுவின்சிகா 4ஏ 3பி 2சி, கி.யாழினி 2ஏ் பி 3சி 3எஸ்.
(ஐ-110)

**சுன்னாகம் இராமநாதன் கல்லூரி**
பா.தர்மிலா-7ஏ.2பி. தி.தனுஸ்கா-7ஏ.பி. சி. ர.ரஜீக்கா-6ஏ.பி.சி.எஸ், த.விவசிவ்- 5ஏ.4பி, சி.சுரேக்கா-5ஏ.3பி.சி, ஆ. கஜந்தா-5ஏ.3பி.சி, ர.சோபிதா-4ஏ. 3பி.சி,எஸ், சி.சிவன்சிகா-4ஏ.3பி.சி, ந. ஒளிநிலா-3ஏ,3பி.2சி.எஸ், கு.சரணியா- 3ஏ.3பி.2சி.எஸ், சி.நிலாஜினி- 2ஏ.3பி. சி,2எஸ், ம.தர்சினி-2ஏ.2பி, 3சி,2எஸ், கி.நிசாளினி-2ஏ.3பி.3சி,எஸ், ஞா.கவர்ணா- 2ஏ.2பி,3சி,எஸ், பி.கலைவாணி-2ஏ.3பி. சி.எஸ், ச.கதுஸ்ரிகா-2ஏ.பி. 5சி.எஸ், தே.கஜானா-2ஏ.பி.3சி, 3எஸ், தே. சாளினி-2ஏ.5சி,2எஸ், செ.லோக்சனா- ஏ.5பி, 2சி,எஸ், இ.ரிசானா- ஏ,3பி,3சி, 2எஸ், உ.கனுசிகா- ஏ.3பி,2சி,3எஸ், வி.ரியுசியா-ஏ,3பி, 2சி,3எஸ், ச.சானுஜா-ஏ, 6சி, எஸ், கி.கிருஷாந்தினி-ஏ, 4சி, 3எஸ், பு.வதனரூபி-ஏ,3சி,5எஸ், செ.சர்மினி-ஏ. 3சி,4எஸ்.



## மன்னார் புனித சவேரியார் பெண்கள் பாடசாலையில் 6 பேர் '9 ஏ' சித்தி

கா.பொ.த சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் மன்னார் கல்வி வலயத்துக்குட்பட்ட மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையைச் சேர்ந்த 6 மாணவிகள் 9 ஏ சித்தியைப் பெற்று சாதனை படைத்துள்ளனர். 2018ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கான பெறுபேறுகள் கடந்த வியாழக்கிழமை இரவு வெளியாகின.

யஸ்ரின் ஜெனிக்கா சனோலின், இரவீந்திர குமார் சுவேதா, ஜெனிங்ஸ் ஜெனுசா, அமல்ராஜ் இம்மனுவலி, பற்றிக் ஆனந்தகுமார் மெற்றில் பியூலா,சிந்தாத்துரை சஞ்சோனிக்கா ஆகிய 6 மாணவிகளே 9 ஏ சித்திகளை பெற்றுள்ளதாகப் பாடசாலை அதிபர் அருட்சகோதரி கில்டா சிங்கராயர் தெரிவித்தார். (ஐ-56)

## மாற்றுத்திறனாளி மாணவர்கள் சாதனை

வவுனியா,ஏப்.1

இனிய வாழ்வு இல்லத்தில் வசிக்கும் கண்பார்வை அற்ற மாற்றுத்திறனாளியான இரு மாணவர்கள் க.பொ.த சாதாரண தர பரீட்சையில் தோற்றி சித்தியடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு - வள்ளிபுனம் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் அ.அபிசேக், ச.அரவிந்தன் ஆகிய இருவருமே பிரெயில் எழுத்து முறை மூலம் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்துள்ளனர்.

இது தொடர்பில் சித்தியடைந்த மாணவர்களின் ஒருவரான அருள்பிரகாசம் அபிசேக் கருத்து தெரிவிக்கையில்:

இனிய வாழ்வு இல்லத்தின் சிறப்புக் கற்றல் செயற்பாடுகள், ஊக்கத்துடன் முல்லைத்தீவு வள்ளிபுனம் மகாவித்தியாலயத்தில் கடந்த மூன்று வருடங்களாக கல்வி கற்று வருகின்றேன்.

2018 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.சாதாரணபரீட்சையில் பிரெயில் எழுத்து முறை மூலம் பரீட்சை எழுதி சித்தியடைந்துள்ளேன்.

2018 க.பொ.த சாதாரண தரப் பரீட்சை கடினமாக இருந்த போதும் இனியவாழ்வு இல்லத்தில் அனைவரதும் ஊக்கம் காரணமாகவும் எனது ஆசிரியர்களின் வழிகாட்டலுக்கு அமைய நான் நிறைவாக படித்து அவர்களின் பெயரையும், பெருமையும் காப்பாற்றியுள்ளேன்.

மேலும் எனது அம்மா, அப்பா சிறுவயதில் இருந்து எனக்கு மிகவும் சிரமப்பட்டு கல்வி கற்பித்துள்ளனர். அவர்களின் எதிர்பார்ப்பையும் நான் நிறைவேற்றியுள்ளளேன்.

இதன் மூலமாக எனக்கு மிகவும் சந்தோசமாக உள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (ஐ-222)

## வவுனியா மாவட்டத்தில் இறம்பைகுளம் மகளிர் வித்தி. முதலிடத்தில்

வவுனியா, ஏப்.1

வவுனியா மாவட்டத்தில் சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின் படி அதிகூடிய சித்திகளை இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம் பெற்றுக்கொண்டது.

வெளியான க.பொ.த சாதாரணதரப் பரீட்சையின் முடிவுகளின் படி வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தின் 22 மாணவர்கள் 9 பாடங்களிலும் 'ஏ' தரச் சித்திகளைப் பெற்றுள்ளனர்.

அத்துடன் ஒன்பது மாணவர்கள் 8ஏ,பி தரச் சித்திகளையும்,நூன்கு மாணவர்கள் 8ஏ ,சி தரச் சித்திகளையும் பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-110)

## புரவுப் பெருமக்களுக்கான வருடாந்த விருது நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப். 1

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வரி செலுத்தும் வட பிராந்திய எல்லைக்குட்பட்ட புரவுப் பெருமக்களுக்கான வருடா வருடம் நடத்தப்படும் விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 6 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இல.10.12 பூநாறி மரத்தடி, கொக்குவில் கிழக்கு கொக்குவில் 'செல்வா பலஸ்' மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்று உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார். (க)

# மத்திய வங்கி தடை செய்த நிறுவனம் யாழ்ப்பாணத்தில் இயங்குவது எப்படி?

## பொலிஸ் நிலையத்தில் வழக்கு பதிவு

யாழ்ப்பாணம், ஏப் .1

**2013** ஆம் ஆண்டு மத்திய வங்கியால் தடை செய்யப்பட்ட நிறுவனம் ஒன்று தற்போதும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் தனது கிளையைத் தொடர்ந்து நடத்துகின்றது என யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரமிட் வியாபாரத்தை ஒத்த வர்த்தக நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளும் இந்த நிதி நிறுவனம், 2013 ஆம் ஆண்டு மத்திய வங்கியால் தடை செய்யப்பட்டது. தடை செய்யப்பட்ட நிறுவனம் சிறிது காலத்தில் யாழ்ப்பாணம் தென்மராட்சிப் பகுதியில் அதன் கிளை நிறுவனம் ஒன்றை ஆரம்பித்திருந்தது. அந்த நிறுவனத்துக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கின் அடிப்படையில் 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி நீதிபதி சிறிநிதி நந்தசேகரன் நிறுவனம் இயங்குவதற்கு தடை விதித்திருந்தார்.

தடைவிதிக்கப்பட்டதையடுத்து, சாவகச்சேரியில் இயங்கிய கிளை மூடப்பட்டது. இந்த நிலையில் அதே நிறுவனம் தற்போது யாழ். நகரில் தனது கிளையை ஆரம்பித்துள்ளது.

இதனால் இந்தக் கிளையை மூட வேண்டும் என பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்கு மின் அஞ்சல் மூலம் தகவல் கொண்டு செல்லப்பட்டது. பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்ட மின் அஞ்சல் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பொலிஸ் அத்தியட்சகருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இந்த முறைப்பாட்டாளரை அழைத்த பொலிஸ் அத்தியட்சகர் பொது மக்கள் நன்மை கருதி முறைப்பாட்டை பதிவு செய்து ஏமாற்று மோசடி வழக்காக பதிவு செய்ய ஏற்பாடுகளை மேற்கொண்டார்.

மத்தியவங்கியால்தடைசெய்யப்பட்ட விவரம், சாவகச்சேரி நீதிமன்றால் தடை செய்யப்பட்ட விவரங்களின் பிரதிகளையும் பெற்றுக்கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த விடயம் தொடர்பில் முறைப்பாட்டாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது: நீதிபதி சிறிநிதி நந்தசேகரன் நீதிவான் அன்றி அவர் ஓர் நீதிபதியாவார். அவரது உத்தரவு மாவட்டம் முழுமையாக செல்லுபடியானதாகவே கருத முடியும். அதனை உறுதி செய்யவும் இவ்வாறான மோசடியை தடுக்கும் வகையிலும் இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்த முறைப்பாட்டாளர், நிறுவனத்துக்கு எதிராகவிதிக்கப்பட்ட தடை உத்தரவுகள் தொடர்பான ஆதாரங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார். (க-105)

## உந்துருளி விபத்தில் முதியவர் காயம்

சாவகச்சேரி, ஏப் 1

வீதியோரம் நடந்து சென்ற முதியவரை எதிரே வந்த உந்துருளி மோதியதில் முதியவர் காயங்களுக்கு இலக்கான நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நகரப் பகுதியில் இடம்பெற்றது.

இதில் சாவகச்சேரி கற்குளியைச் சேர்ந்த சுப்பையா கிருஷ்ணமூர்த்தி (வயது 60) என்ற முதியவரே காயமடைந்தார்.

குறித்த முதியவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)



## சமூகசேவைக்கான அப்துல்கலாம் விருது

யாழ்ப்பாணம், ஏப் 1

யாழ்ப்பாணம் துன்னாலை வடக்கைச் சேர்ந்த சமூக சேவைக்கான மருத்துவர் சின்னையா அருளானந்தத்துக்கு சமூக சேவைக்கான இந்திய முன்னாள் அரச தலைவர் அப்துல் கலாம் நினைவு விருது அண்மையில் கொழும்பில் வைத்து வழங்கப்பட்டது.

லங்கா சாதனையாளர் மன்றம் மற்றும் விஸ்வம் கம்பஸ் ஆகியோர் இணைந்து நடத்திய விழாவில் சமூக சேவைக்கான அப்துல் கலாம் விருதை விஸ்வம் பல்கலை தலைவரும் டாக்டர் அப்துல் கலாம் கல்லூரியின் முகாமைத்துவ தொழில்நுட்ப பிரிவு தலைவருமான பேராசிரியர் மருத்துவர் ஏ.டெக்ஸ்டர் பெர்ணாண்டோவினால் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக இலங்கை நாடாளுமன்ற சபாநாயகர் கரு ஜெயசூரிய, மருத்துவர் விஜயகுமார், எஸ். சாஹ் சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர் வித்யஜோதி எம்.எச்.றிஸ்வி ஷெரிப், பேராசிரியர் மருத்துவர் எம்.எல்.றியாஸ், பேராசிரியர் லக்ஸ்மன் மதுரசிங்க அமைதியான உள்ளம் மன்ற நிறுவுநர் பேராசிரியர் மருத்துவர் நப்ஹிட் கபூர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சின்னையா அருளானந்தத்துக்கு சமூக சேவைக்கான மருத்துவர் விருது கடந்த வருடம் இந்தியாவில் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-9)

## கண்காட்சியும் சிறுவர் சந்தையும்

கொடிகாமம், ஏப் 1

மந்துவில் வடக்கு வள்ளுவன் முன்பள்ளியின் ஆக்கப்பொருள் கண்காட்சியும் சிறுவர் சந்தையும் முன்பள்ளியில் கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்றன.

முன்பள்ளி தலைவர் திருமதி பா.புஸ்பலீலா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினராக தென்மராட்சி முன்பள்ளி இணைப்பாளர் செல்வி ஆர் தர்மிலா, சனசமூக நிலையத் தலைவர் மார்க்கண்டு கனகலிங்கம், முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ-159)





## திறன் வகுப்பறை திறப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்.ஏப் 1

யாழ்ப்பாணம் சித்தன்கேணி சிறிகணேச வித்தியாலயத்தில் முதலாவது திறன் வகுப்பறை கடந்த செவ்வாய்க் கிழமை திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலையின் அதிபர் பா.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வகுப்பறையை வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

இந்தத்திறன் வகுப்பறை அமைப்பதற்கான நிதியுதவியை பாடசாலையின் பழைய மாணவரும் ரட்ணம் பவுண்டேசன் நிறுவனத்தின் தலைவருமாகிய இ.நித்தியானந்தன் (இலண்டன்) வழங்கியிருந்தார்.

நிகழ்வில் முதன்மை விருந்தினர் கருத்துத் தெரிவிக்கையில்:

95 மாணவர்களைக் கொண்ட 101 வருடம் பழைமை வாய்ந்த இந்தப் பாடசாலையானது பல்வேறுபட்ட பௌதீக வளக் குறைபாடுகளுடன் இயங்கி வருகின்றது. இவற்றை நிவர்த்தி செய்யும் நோக்கில் பாடசாலைக்கு இருமாடிக்கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அத்துடன் கிராம எழுச்சி வேலைத்திட்டத்தின் கீழ் சுகாதாரம் மற்றும் குடி தண்ணீர் வசதிகளை நிவர்த்தி செய்யும் முகமாக 10 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

நிகழ்வில் சங்கானைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சூ.நோபேட் உதயகுமார், அயல் பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழையமாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)



## ஆறு முன்பள்ளிகளுக்கு கற்றல் உபகரணம் வழங்கல்

யாழ்ப்பாணம், ஏப்.1

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிப முன்னணி தீவக கிளையின் தலைவர் கருணாகரன் குணாளனின் ஏற்பாட்டில் ஊர்காவற்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஆறு முன்பள்ளிகளில் கற்கும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார்.

புங்குடுதீவு குறிகாட்டுவான் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தர்மவர்த்தன , தீவக சிவில் சமூக உப செயலர் சபா. பரமேஸ்வரன் , தமிழ் அரசுக்கட்சியின் ஊர்காவற்துறை மூலக்கிளையின் தலைவர் கனகையா , செயலர் பெனடிக்ற், பொருளாளர் வரதராசன், தீவக வாலிப முன்னணியின் பொருளாளர் காவலூர் றமில்டன், சங்கானை பிரதேச சபை உறுப்பினர் மற்றும் சனசமூக நிலைய பிரதிநிதிகள், விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிகள் உட்பட பலரும் நிகழ்வில்கலந்து மாணவர்களுக்குக்கற்றல்உபகரணங்களை வழங்கிவைத்தனர்.

பருத்தியடைப்பு முனியப்பர் முன்பள்ளியின் 24 மாணவர்களுக்கும், ஊர்காவற்துறை புனித திரேசா முன்பள்ளியின் 10 மாணவர்களுக்கும், ஊர்காவற்துறை தம்பாட்டி காந்திஜி முன்பள்ளியின் மாணவர்களுக்கும், ஊர்காவற்துறை அண்ணா முன்பள்ளியின் 12 மாணவர்களுக்கும், மெலிஞ்சி முனை இருதயராசா முன்பள்ளியின் 55 மாணவர்களுக்கும், கரம்பொன் செபஸ்தியார் முன்பள்ளியின் 10 மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

முன்பள்ளிகளுக்கான தேவைகள் குறித்து கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், விரைவில் அவற்றை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வேனென்று கூறியதுடன், தனது பன்முகப்படுத்தப்பட நிதி ஒதுக்கீடு ஊடாக மெலிஞ்சிமுனை கிறிஸ்து அரசர் முன்பள்ளிக்கு ஒரு இலட்ச ரூபாய் வழங்குவதாகவும் உறுதியளித்தார் .

சங்கானை பிரதேச சபை உறுப்பினர் விசாகப்பெருமாள் உமாபதி 10 ஆயிரம் ரூபாவை முன்பள்ளிக்கு வழங்கி வைத்தார். (க)

## பங்குனி திங்கள் உற்சவம்

யாழ்ப்பாணம், ஏப்.1

நீர்வேலி தெற்கு மனோன் மணி அம்மன் ஆலயத்தில் பங்குனி திங்கள் உற்சவத்தை முன்னிட்டு இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு சிறப்பு அபிசேக, மற்றும் பூசை வழிபாடுகள் இடம்பெறும். தொடர்ந்து பொங்கல் மற்றும் நீர்க் கஞ்சி வழங்கல் என்பன நடைபெறும். (க-17)

## நீர்வைக் கந்தனுக்கு இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஏப் 1

நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா இன்று திங்கட்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 22 நாள்கள் திருவிழா இடம்பெறும்.

6 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 6 மணிக்கு வசந்த உற்சவமும், 8ஆம் திகதி திங்கட்கிழமை கார்த்திகை திருவிழாவும், 10ஆம் திகதி புதன்கிழமை மஞ்சத் திருவிழாவும், 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வேட்டைத் திருவிழாவும், 17ஆம் திகதி புதன்கிழமை சப்பறத் திருவிழாவும் இடம்பெறும்.

18 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். 20 ஆம் திகதி சனிக்கிழமை திருக்கல்யாண உற்சவமும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சண்டேஸ்வரர் உற்சவமும், 22 ஆம் திகதி திங்கட்கிழமை பிராயச்சித்த அபிசேகத்துடன் திருவிழா நிறைவுபெறும். (க-17)

# நிலைமாறுகால நீதிக்காக வடக்குப் பெண்களின் குரல்





யாழ்ப்பாணம், ஏப்.1

**நிலைமாறுகால நீதிக்காய் எங்களின் குரல் என்ற தொனிப்பொருளில் போரால் பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்வாதாரம், நீதி மற்றும் இதர சவால்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வடமாகாண பெண்கள் சமாசத்தால் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஒத்துழைப்புடன் நேற்று நடத்தப்பட்டது.**

முற்பகல் 11 மணியளவில் இந்தக் கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் உள்ள விருந்தினர் விடுதியில் நடத்தப்பட்டது.

அதில் பெண்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள், பெண் மாற்றுத் திறனாளிகள் மற்றும் முன்னாள் பெண் போராளிகளின் பொருளாதார வாய்ப்பளித்தல் மற்றும் சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள் போன்ற பல்வேறு பிரச்சினைகள் சுட்டிக் காட்டப்பட்டு, அவை தொடர்பான ஆலோசனையும் முன்வைக்கப் பட்டன

இந்தக் கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சோ.சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், சி.சிறீதரன் ஆகியோரும், பல்வேறு அரசியல் கட்சி உறுப்பினர்களும், கலந்து கொண்டனர்.

அவர்களும் பெண்களை வலுப்படுத்துவது, பாதிக்கப்பட்ட பெண்களுக்கான நீதியை எவ்வாறு பெற்றுக் கொள்வது தொடர்பான ஆலோசனைகளை வழங்கினர். (எ-ரி)



# பொருள்கள் கையளிப்பு

மன்னார்.ஏப். 1

நானாட்டான் பிரதேச கிராம மட்டத்தில் உள்ள 33 அமைப்புக்களுக்கு சுமார் 10 இலட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் நேற்று முந்தினம் மாலை நானாட்டான் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

நானாட்டான் பிரதேச செயலரின் பிரதி நிதியாக பிரதேச செயலக கணக்காளர் தலைமையில் குறித்த நிகழ்வு இடம் பெற்றுள்ளது.

வர்த்தக கைதொழில் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் நிதி ஒதுக்கீட்டில் இந்த தளபாடங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் அமைச்சரின் பிரத்தியே செயலரும், வடக்குமாகாண சபை முன்னாள் உறுப்பினருமான றிப்கான் பதியுதீன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு வழங்கி வைத்தார்.

இதன் போது மீள் குடியேற்ற செயலணியின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் முஜீப்பு ரஹ்மான், மாந்தை உப்பு கூட்டுத்தாபன பணிப்பாளர் றாஜன், பிரதேச சபை உறுப்பினர்களான, மரியதாசன் ஞானராஜ் சோசை, சந்திரிக்கா, ஜீ.எம். சீலன், ஜென்சி, மற்றும் மீள்குடியேற்ற செயலணி அதிகாரிகள், பிரதேச செயலக அதிகாரிகள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதி நிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டு பொருள்களை கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-56)

## பங்குனி திங்கள் மூன்றாம் நிகழ்வு இன்று

வவுனியா.ஏப்.1

வவுனியா சிறிநகர் சிறிதுர்க்கை அம்மன் ஆலயத்தின் பங்குனித் திங்கள் நாளின் மூன்றாவது கிழமை நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை, முற்பகல் 10 .30 மணிக்கு ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

சோமசிறிஸ்கந்தராயக் குருக்கள் தலைமையில் விசேடபூசை, வழிபாடுகள் நடைபெற இருப்பதனால் அனைவரையும் கலந்து கொண்டு அம்பாளின் அருளை பெறுமாறு ஆலய பரிபாலனசபையினர் வேண்டுகோள் விடுக்கின்றனர். (க-110)

## உதவி வழங்கல்

கரடிப்போக்கு மக்கள் நலன் காப்பகம் தனது ஓராண்டு நிறைவை முன்னிட்டு 25 பேருக்கு உணவுப் பொதிகளும் மாணவி ஒருவருக்கு ஈருருளியும், ஒருவருக்கு விவசாய நடவடிக்கையின் பொருட்டு நீர்ப்பம்பியும். இரண்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக ஒரு தொகைப் பணமும் வழங்கி உதவியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த நிகழ்வில் இயக்குநர் திருமதி. உதயகுமாரி, தலைவர் அருட்தந்தை செபமாலை, வருமானப்பகுதி பணிப்பாளர் கர்த்தகன். செயலர் திருமதி. செல்வராணி, மாவீரரின் தாயார் பரமேஸ்வரி ஆகியோர் கலந்து கொண்டனர். (க-222)

# இலங்கையில் இருந்து இருவர் பாங்கொங் நாட்டுக்குப் பயணம்

வவுனியா.ஏப். 1

இலங்கை சிக்கன கடனுதவி கூட்டுறவு சாங்க சம்மேளனத்தின் ஊடாக இலங்கையிலிருந்து இருவர் தாய்லாந்தில் நடைபெறும் பயிற்சிக் கருத்தரங்குக்குச் செல்லவுள்ளனர்.

பயிற்சிக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளும் பொருட்டு புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் தென்பகுதியிலிருந்து ஒருவரும், வடபகுதியிலிருந்து வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவுச்சங்க சமாசத்தின் செயலர் நி. சுரேஸ் தாய்லாந்தில் நடைபெறும் இந்தப் பயிற்சிக் கருத்தரங்கில் கலந்துகொள்ள நாளை பாங்கொங் செல்கின்றார்.

எதிர்வரும் 6 ஆம் திகதி வரையும் தாய்லாந்தில் இந்தக் கருத்தரங்கு இடம்பெறுவதுடன், உலகின் பல பாகங்களிலிருந்தும் இந்தக் கருத்தரங்கில் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (க)



## புத்தகப்பைகள் வழங்கல்

வவுனியா,ஏப். 1

வவுனியா வடக்குக்கல்விவலய மூன்று பாடசாலைகளின் 101 மாணவர்களுக்கு புத்தகப்பைகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

கரவெட்டி ஞானம் விளையாட்டுக்கழகத்தினரின் ஒழுங்கு படுத்தலில் வவுனியா வடக்கு கல்விவலய பாடசாலைகளான நொச்சிமோட்டை கனிஷ்ட வித்தியாலயம், தவசியார்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, கிடாய்ச்சூரி கருவேப்பங்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளின் 101 மாணவர்களுக்கு புத்தகப்பைகள் வழங்கி வைக்கப்பட்டன. (க-222)

## காலணி உற்பத்தி செய்யும் கைத்தொழிலுக்கான உதவி

முல்லைத்தீவு,ஏப். 1

மக்கள் நலன் காப்பகம் உடையார்கட்டு மூங்கிலாறு பிரதேசத்தில் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு காலணி உற்பத்தி செய்யும் சிறு கைத்தொழிலுக்கான உதவியை வழங்கியுள்ளது. மக்கள் நலன் காப்பக இயக்குநர் திருமதி.பிரபாகரன் உதயகுமாரி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். (க-222)





# மரக்காலையில் தீ விபத்து பொருள்கள் எரிந்து நாசம்

வவுனியா, ஏப். 1

வவுனியா மன்னார் வீதி பட்டானிசூர் பகுதியில் அமைந்துள்ள மரத்தளபாடம் விற்பனை நிலையம் ஒன்றில் நேற்று முன்தினம் மதியம் ஏற்பட்ட தீ விபத்தில் பெறுமதியான பொருள்கள் எரிந்துள்ளன என்று கூறப்படு கின்றது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

நேற்று மாலை 3 மணியளவில் மரக்காலை விற்பனை நிலையம் தீ பிடித்து எரிந்துள்ளது. உடனடியாக வவுனியா நகரசபை தீயணைப்பு பிரிவினர் மற்றும் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்பு பிரிவினர் தீயை அணைக்க கடுமையாக முயன்றபோதும், தீ முற்றாக பரவி வர்த்தக நிலையம் முழுமையாக எரிந்துள்ளது. வர்த்தகநிலையத்தில் இருந்த பல பொருள்கள் முற்றாக தீயில் எரிந்துள்ளன. மரத்தளபாடங்கள், வெட்டுமரம் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய இயந்திர சாதனங்கள் என்பன எரிந்து நாசமாகியுள்ளன, அவற்றின் பெறுமதி 50 இலட்சம் ரூபாவுக்கும் அதிகம் என வியாபார நிலைய உரிமையாளர் தெரிவித்தார் . சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்தச் சம்பவத்தால் மன்னார் வீதியில் பதட்டம் நிலவியிருந்ததுடன் மன்னார் வீதியுடனான போக்குவரத்தும் ஒரு மணிநேரம் தடைப்பட்டிருந்தது. (க-110)

# மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள் காதர் மஸ்தான் வழங்கி வைத்தார்



மன்னார், ஏப். 1

மன்னார் பேசாலை, பள்ளிமுனை, எருக்கலம்பிட்டி, தலைமன்னார் பகுதி மீனவர்களின் கடற்றொழிலை ஊக்குவித்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் உயரிய நோக்கத்துடன் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மீள் குடியமர்வு மறுவாழ்வு வடக்கு அபிவிருத்தி முன்னாள் பிரதி அமைச்சருமான காதர் மஸ்தானின் பதினெட்டு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் மீன்பிடி வலைகள் இன்று வழங்கி வைக்கப்பட்டன.

மன்னார் கடற்றொழில் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே காதர் மஸ்தான் வலைகள் வழங்கினார். (க)



## பொலிஸாரால் துப்புரவு

வவுனியா,ஏப்.1

வவுனியா புதிய பேருந்து நிலையம் மற்றும் அந்தப் பகுதியைச் சுற்றிய இடங்களை துப்புரவு செய்யும் பணி வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மகிந்த வில்லுவராட்சி தலைமையில் நேற்று காலை 8.30மணி தொடக்கம் 10 மணி வரை இடம்பெற்றது.வவுனியா பொலிஸார், சுகாதார திணைக்களத்துடன் இணைந்து மேற்கொண்ட டெங்கு ஒழிப்பு துப்புரவுப் பணியில் சுமார் நாற்பதுக்கும் மேற்பட்ட பொலிஸார் கலந்து கொண்டனர்.

வவுனியா புதிய பேருந்து நிலையம் மற்றும் அப்பகுதியை அண்டிய பகுதிகளில் டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகரித்துக்காணப்படுவதாகவும் இதன் காரணமாக மார்ச் மாதம் ஏழுக்கும் மேற்பட்ட நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும், தொடர்ந்தும் இனி வரும் நாள்களில் பொலிஸாருடன் இணைந்து இவ்வாறான சிரமதானப் பணியை மேற்கொள்ளவிருப்பதாக வவுனியா பொதுச்சுகாதாரப்பரிசோதகர் க.தியாகலிங்கம் தெரிவித்தார். (க-110)

# மன்னார் எலும்புகளை மீளப் பரிசோதியுங்கள்

## வடக்கு முன்னாள் முதலமைச்சர் கோரிக்கை

*யாழ்ப்பாணம், ஏப். 1*

மன்னார் புதைகுழியில் மீட்கப்பட்ட எலும்புக் கூடுகள் தொடர்பில் வெளிவந்திருக்கும் அறிக்கை பலவிதமான சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது என்று தெரிவித்திருக்கும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன், அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்ட எலும்புக் கூடுகள் தொடர்பில் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் நேற்று முந்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் புதைகுழி தொடர்பான முழுமையான அறிக்கைகளைப் பார்க்காமல் பதில் கூறுவது எங்களுக்குக் கடினம். இந்தியாவிலிருந்து வந்த தடயவியல் ஆராய்ச்சியாளர் ஒருவர் அந்தப் பகுதிக்குச் சென்று அங்கு மீட்கப்பட்ட எலும்புக் கூடுகளைப் பார்த்து அவை கடந்த 50 வருடங்களிலே நடைபெற்ற இறப்புக்களாகத்தான் இருக்க வேண்டுமென்று கூறியிருக்கின் றார். அவர் கூறிய 50 ஆண்டுகளுக்கும் ஆய்வின் பின்னர் வந்திருக்கும் காபன் அறிக்கையின் 500 ஆண்டுகளுக்கும் இடையில் பலவிதமான வித்தியாசங்கள் இருக்கின்றன. இங்கு 50 வருடங்கள் என்று ஒரு விடயத்தைப் பரிசீலித்துக் கொண்டிருக்கும் பொழுது அமெரிக்காவுக்கு 500 வருடங்களுக்கு முன்னையதை அனுப்பினால் அவர்கள் 500 வருடங்களாக இருக்கத்தக்கதாகத் தான் அறிக்கையைத் தருவார்கள் என்பது ஒன்று. நாங்கள் ஒரு முக்கியமான விடயத்தைப் பார்க்க வேண்டும்.

எங்களுடைய அரசியல்வாதிகளில் ஒருவர் இவற்றை அமெரிக்காவுக்கு அனுப்புவதற்கு முன்னரே இது தமிழ் மக்களுக்கு அதிர்ச்சியூட்டும் வகையிலான சில விடயங்கள் அமெரிக்காவில் மேற்கொள்ளப்படும் இந்தப் பரிசோதனைகளில் இருந்து தெரியப்படுத்தப் போகின்றது என்று கூறியிருந்தார்.

அவருக்கு எப்படி இதைப்பற்றித் தெரியும். அதாவது எலும்புகள் அமெரிக்கா போக முன்னரே இதைப்பற்றிச் சொல்லியிருக்கின்றார். அவர் அப்படிச் சொல்வதற்கு என்ன காரணம் என்பதை நாங்கள் அறிய வேண்டும். ஏனென்றால் இவ்வாறான ஒரு சதி அல்லது பிழையான நடவடிக்கை நடந்திருந்தால் அவ்வாறு நடக்கப் போகின்றதென ஏற்கனவே உணர்ந்து அல்லது அறிந்து கொண்டு தான் அவ்வாறானதொரு பேச்சைப் பேசியிருக்க வேண் டும்.

அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டவையை மீண்டும் பரிசோதித்துப் பார்க்க வேண்டும் - என்றார். (து)

## தவக்கால தியானங்கள்

## உபவாசத்தில் மனமாற்றம்

இந்தத் தவக்காலத்தில் எம்முடைய வாழ்க்கையை மாற்றவும், கடவுளுக்கு ஏற்றதாக எம்முடைய இதயத்தை மாற்றவுமே இந்த நாள்கள் எமக்குக் கொடுக்கப்பட்டுள்ளன என்பதை நாம் மறந்து போகக்கூடாது. கடவுளுக்கும் எமக்கும் மிக நெருக்கமான உறவு ஏற்பட்டு மனமாற்றத்தை நாம் பெற வேண்டி தங்களையே தயார்படுத்திக்கொள்ளக்கூடிய காலம்தான் இந்தத் தவக்காலம். இந்த மனமாற்றத்தை பெற நாம் என்ன செய்யவேண்டும் என்று சற்றுத் தியானித்துப் பார்ப்போம். இந்தத் தவக்காலத்தில் சிலர் நான் சாப்பிடாமல் உபவாசம் இருக்கிறேன். நீங்கள் எப்படி? என்று கேள்வி கேட்டுக்கொள்வார்கள். இன்னும் சிலர் நான் பல்வேறு கெட்ட பழக்கங்களை விட்டு விட்டேன். இந்த 40 நாள்களிலாவது அதை செய்யாமல் இருக்கிறேன் என்று சொல்வார்கள். இப்படியெல்லாம் பேசிவிட்டு பின்னர் நாள்கள் முடிந்தவுடன் தீய பழக்கங்களை மீண்டும் ஆரம்பித்து விடுவார்கள்.

எனவே உபவாசம் இருப்பது என்றால் 3 வேளை உணவை ஒருமுறை, இரண்டு முறை அல்லது மூன்று முறையும் சாப்பிடாமல் இருப்பது, இன்னும் சிலர் தீய பழக்கங்களில் இருந்து விலகி இருப்பது மட்டுமல்ல, ஆத்ம தியாகத்துடன் உபவாசம் இருக்க வேண்டும். இதைத்தான் இயேசுவும் கல்வாரிசிலுவையில் பாடுகளை அனுபவிக்கும் முன்பு உபவாசம் இருந்து தன் ஆன்மாவை தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்தார் என்று வேதாகமத்தில் கூறப்பட்டு உள்ளது. எனவே ஆத்ம தியாகம் என்றால் தினமும் வேதாகமத்தை வாசிக்க வேண்டும். கடவுளிடம் தினமும் நம்முடைய வேண்டுதல்களை ஜெபம் செய்ய வேண்டும். அவர் எமக்காக கல்வாரிச் சிலுவையில் பட்ட துன்பங்கள் குறித்து ஆராய வேண்டும். எம்முடைய இதயத்தை கடவுளுக்கென்று மாற்ற வேண்டும். இப்படி ஒவ்வொரு நாளும் நாம் கடைபிடித்தால் கடவுள் எமக்கு நல்ல மனமாற்றத்தைத் தர வல்லவராய் இருக்கிறார்.

இப்படி செய்யாமல் நான் இந்த 40 நாள்கள் மட்டும்தான் உபவாசம் இருப்பேன், தீய பழக்கங்களை விட்டு விடுவேன். பின்னர் திரும்பவும் பழைய மனிதாக மாறி விடுவேன் என்பது அல்ல. இந்த தவக்காலத்தில் எம்முடைய வாழ்க்கையை மாற்றவும், கடவுளுக்கு ஏற்றதாக நம்முடைய இதயத்தை மாற்றவுமே இந்த நாள்கள் எமக்கு கொடுக்கப்பட்டுள்ளன என்பதை நாம் மறந்து போகக்கூடாது. எனவே எம்முடைய மனதில் மாற்றம் அடைந்து கிறிஸ்துவுக்குள்ளாய் வாழ தேவன்தாமே எமக்கு கிருபை செய்வாராக.

## இலஞ்சம் ஊழலை முற்றாக ஒழித்தல் முல்லைத்தீவில் பயிற்சிப் பட்டறை

முல்லைத்தீவு,ஏப்.1

ஊழல் இல்லாத நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கும் செயற்திட்ட கருத்தமர்வு ஒன்று முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டச் செயல மண்டபத்தில் மாவட்ட செயலர் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றுள்ளது.

வடக்கில் இலஞ்சம் மற்றும் ஊழல் இல்லாமல் சேவையாற்றுகின்ற அலுவலர்களாக சேவையாற்றும் வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவனின் நோக்கத்துக்கு அமைவாக வடக்கில் உள்ள மாவட்டங்களில் சேவையாற்றும் அரச அலுவலர்களுக்கு இந்த கருத்தமர்வு நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-ரி3)



## சட்டவிரோத மண் அகழ்வு இருவர் கைது

வவுனியா,ஏப் 1

வவுனியா சின்னப்புதுக்குளம் பகுதியில் சட்டவிரோதமாக கருங்கல் மற்றும் மண் அகழ்வில் ஈடுபட்ட இருவரை கைதுசெய்துள்ளதாக மடுகந்தை சிறப்பு அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்

கொக்குவெளி, சின்னப்புதுக்குளம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் காடுகளை வெட்டி நீண்ட நாள்களாக மண் அகழ்வை மேற்கொண்டு வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாக கிடைத்த இரகசிய தகவலையடுத்து, நேற்று முன் தினம் அந்தப் பகுதியை மடுகந்தை சிறப்பு அதிரடிப் படையினர் சுற்றிவளைத்தனர்.


சுற்றிவளைப்பின் மூலம் அனுமதிக்கு மேலதிகமாக சட்ட விரோதமாக மண் அகழ்வில் ஈடுபட்டமைக்காக. இருவர் கைது செய்யப்பட்டதுடன், மண் அள்ளப் பயன்படும் பெக்கோ வாகனம் இரண்டும் மீட்கப்பட்டன.

கைப்பற்றப்பட்டவாகனம், மற்றும் ஷ்கது செய்யப்பட்டவர்களை மடுகந்தை பொலிஸ் நிலையத்தில் முற்படுத்த உள்ளதாக மடுகந்தை சிறப்பு அதிரடிப்படையினர் தெரிவித்தனர். (க-110)

## மைதானங்கள் சீரமைக்க உதவி

தென்மராட்சி கல்வி வலயத்தில் உள்ள முன்பள்ளி உட்பட ஆறு பாடசாலைகளின் விளையாட்டு மைதானங்கள் சீரமைக்க நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் துரித கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் 4 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளார் எனப் பிரதேச செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆறு விளையாட்டு மைதானங்களைச் சீரமைக்கவும் கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப வித்தியாலயத்தில் மலசலகூடம் அமைக்க வும் நிதி ஒதுக்கியுள்ளார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க -9)



## மன்னார் எருக்கலம்பிட்டியில் கண்டல் தாவரங்கள் நடப்பட்டன

மன்னார்,ஏப் 1

மன்னார் மாவட்ட கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் ஏற்பாட்டில் இலங்கை உயிர் காப்புச் சங்கம் மற்றும் பீப்பிள் லீசிங் நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் எருக்கலம்பிட்டி கல்லடி களப்பு பகுதியில் கடந்த 27ஆம் திகதி ஆயிரம் கண்டல் தாவரங்கள் நடப்பட்டன.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட மேலதிக மாவட்ட செயலர் சி.குணபாலன்,மன்னார் பிரதேச சபை தவிசாளர் முஜாஹிர், இலங்கை உயிர்காப்புச் சங்கத்தின் பணிப்பாளர், பீப்பிள் லீசிங் முகாமையாளர், ஊழியர்கள், கிராம அலுவலர்கள்,பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள், தப்ரபேன் கடலுணவு ஏற்றுமதி நிறுவனத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டு கண்டல் மரங்களை நட்டு வைத்தனர். (க-213)



வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மீள் குடியேற்றம் மறுவாழ்வு வடக்கு அபிவிருத்தி முன்னாள் பிரதி அமைச்சருமான காதர் மஸ்தானின் வேண்டுகோளின்படி கட்டார் செரட்டி நிறுவனம் வழங்கிய சக்கரநாற்காலிகள் மாற்றுத்திறனாளிகள் ஐவருக்கு வழங்கி வைக்கப்பட்டன. (க-222)

# தமிழர்களை அடக்கியாளவே முஸ்லிம்கள் முற்படுகின்றனர்

*கூட்டமைப்பு சபையில் பகிரங்கக் குற்றச்சாட்டு*

கொழும்பு, ஏப்.1

கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலக விவகாரம், குறித்து நாடாளுமன்றில் தமிழ் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. தமிழர்களை அடக்கும் திட்டமிட்ட சூழ்ச்சியை முஸ்லிம் தலைமைகள் ஏற்படுத்துகின்றனர் என்று நாடாளுமன்றில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றம் சுமத்தினர்.

பாதீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்களை அதிகமாகக் கொண்ட இடம் கல்முனை. 27 பிரிவுகள் உள்ளன. துரதிர்ஸ்டவசமாக நீண்ட காலமாக எந்த அதிகாரமும் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு வழங்கப்படவில்லை. நிதி அதிகாரம், காணி அதிகாரம் தொடர்பிலான பிரச்சினைகள் இங்கு உள்ளன. இந்த அதிகாரங்களை கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவை தீர்க்கப்படக்கூடிய பிரச்சினைகள். மூதூர், தோப்பூரிலும் பிரச்சினைகள் உள்ளன. இவற்றையும் பேச்சு மூலம் தீர்க்க முடியும். சகல இன மக்களின் விருப்பங்களையும் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டுமே தவிர குறித்த ஒரு பகுதி மக்களுக்காக நடவடிக்கைகளை எடுக்கக்கூடாது - என்றார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் மன்சூர் கூறுகையில்:

கல்முனை வடக்கு எனவும் கல்முனை தெற்கு எனவும் இரண்டு பிரதேச செயலகங்கள் குறித்து நெருக்கடி நிலவி வருகின்றது. கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை நிலையான செயலகமாக மாற்றியமைக்கும் முயற்சிகள் நடக்கின்றன. அன்று உப அலுவலகமாக உருவாக்கப்படும் தேவை ஒன்று இருந்தாலும்கூட இன்று தேவை இல்லை. தமிழ் - முஸ்லிம் மக்கள் பின்னிப்பிணைந்து வாழ்கின்றனர்.

தனியாக பிரதேச செயலகத்தை அமைக்க வேண்டும் என்ற அழுத்தம் பிரயோக்கிக்கப்படுவது அறிவுபூர்வமான விடயமல்ல. கல்முனை பிரதேச செயலகம் மட்டும் இருக்கட்டும். அதில் இரண்டு சமூகத்திலும் பகிர்ந்து பதவிகளைக் கொடுக்க முடியும். அதை விடுத்து தனியாக கல்முனை வடக்கு என ஒரு செயலகம் உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவசியம் இல்லை. ஒரு சில பிரதேச சபைகளில் ஒரு இனம் சிறுபான்மையாக இருக்கின்ற காரணத்தினால் அங்கு பிரச்சினை எழப்போவதில்லை. இன ரீதியான பிரச்சினைகளை உருவாக்க வேண்டாம் - என்றார். உரிய பிரதேசசெயலக மக்களின் தலைவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தால் ஆராய்ந்து பார்க்க முடியும். நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும் அனைத்தையும் மறந்துவிடுவோம். தமிழர்களைப் பிழையாக வழிநடத்தும் செயற்பாடுகளை கைவிடுங்கள் என்று எச்சரிக்கின்றேன் - என்றார்.

சிறிதரன் கூறுகையில்,

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் உப செயலகமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனை பிரதேச செயலகமாக தயரமுயர்த்தும் வேலை மட்டுமே செய்யவேண்டும். அதனை தரமுயர்த்துவதன் மூலம் தமிழ் - முஸ்லிம் மக்களின் ஒற்றுமை நிலவும். இல்லாவிட்டால் முஸ்லிம்கள் தமிழர்களை அடக்கும் நிலைமையே உருவாகும். இதனை கருத்தில் கொள்ள வேண்டும் - என்றார்.

யோகேஸ்வரன் தெரிவிக்கையில், இந்த அரசை பல்வேறு நெருக்கடிகளிலிருந்து காப்பாற்றி வந்துள்ளோம். இந்த செயற்பாடு கையாளப்படாதுவிட்டால் இந்த எங்களை ஏமாற்ற முயற்சிக்க வேண்டாம் - என்றார். (த-31)

# தூதரைத் தண்டியுங்கள்

*மைத்திரியிடம் திஸாநாயக்க கோரிக்கை*

கொழும்பு, ஏப்.1

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் இலங்கைக்கான தூதுவரை அரசதலைவர் உடனடியாக நாட்டுக்கு வரவழைத்துத் தண்டிக்க வேண்டும். நிதியமைச்சரின் ஆலோசகர் மனோ தித்தவெலவை கைது செய்து ஜெனிவா விவகாரத்தில் முன்னெடுக்கப்பட்ட சூழ்ச்சிகளை வெளிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். பி. திஸாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பு சுதந்திர ஊடக மையத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்ட புதிய பிரேரணைக்கு அனுசரணை வழங்குவதாக அரசு குறிப்பிட்டுள்ளமையை ஏற்றுக் கொள்ள முடியாது என்று அரசதலைவர் குறிப்பிட்டுள்ளமை தற்போது பல சவால்களை பன்னாடுகள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

ஜெனிவா தீர்மானத்துக்கு அரசு இணையனுசரணை வழங்குவதாகத் தீர்மானிக்கப்பட்ட விடயம் தொடர்பில் நாடாளுமன்றில் அறிவிக்கவில்லை. நிதியமைச்சின் தீர்மானங்களே அரசின் தீர்மானமாகக் காணப்பட்டுள்ளன - என்று மேலும் தெரிவித்தார். (த-31)

# மன்னார் கடற்படுக்கையில் 2020இல் இயற்கை எரிவாயு

## அமைச்சர் கபீர் ஹாசீம் தெரிவிப்பு

*கொழும்பு,ஏப்.1*

*மன்னார் கடற்படுக்கையில் இயற்கை எரிவாயு எடுக்கும் வேலைத் திட்டம் 2020 ஆம் ஆண்டு தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளது எனவும், 2025 ஆம் ஆண்டு முதல் தடவையாக எரிவாயுவை எடுக்க முடியும் எனவும் அமைச்சர் கபீர் ஹாசீம் தெரிவித்தார்.*



வடக்கு - கிழக்குக்கான சிறப்பு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் விரைவில் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இந்த ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சு, மின்வலு, வலுசக்தி மற்றும் தொழிற்துறை அபிவிருத்தி அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையில் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வீதி அபிவிருத்தி விடயங்களில் அரசு அதிக அக்கறை செலுத்தி வருகின்றது. கிராமிய மற்றும் பிரதான வீதிகளை சீரமைக்கவும், மாகாண மத்திய இணைப்பு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவும் நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் 173 பில்லியன் ரூபாய் எமது அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அதேபோல் இதற்கு மேலதிகமாக தலைமை அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரின் ஒத்துழைப்பில் 10 பில்லியன் ரூபாய் ரன் மாவத் வேலைத்திட்டத்துக்காக ஒதுக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன்மூலமாக இலங்கையில் உள்ள சகல தேர்தல் தொகுதிகளுக்கும் முதல் கட்டமாக 60 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படுகின்றது.

இதனைக் கொண்டு தமது பிரதேச பாதைகளை அபிவிருத்தி செய்ய ஒதுக்கப்படுகின்றது. இதற்கு அப்பால் மத தலங்களுக்கும் உப பாதைகளை அமைக்கவும், தோட்ட பகுதிகளை சீரமைக்கவும் வடக்கு - கிழக்கு பகுதிகளை இலக்குவைத்து பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம்.

எண்ணெய் களஞ்சியம் குறித்த சிக்கல் எமக்கு உள்ளது. எம்மால் 10 நாள்கள் மட்டுமே எரிபொருள் களஞ்சியப்படுத்தி வைக்க முடியும். புதிய களஞ்சிய குதங்களை நாம் பெற்றுக்கொள்ளவுள்ளோம். கடந்த 20 ஆண்டுகளில் இருந்தவர்கள் இதுகுறித்து எந்த வேலைத்திட்டமும் முன்னெடுக்கவில்லை. பழைய பழரசம் புதிய போத்தல்களில் அடைத்ததைப் போலவே இவர்களின் செயற்பாடுகள்.

ஆகவே நாம் இவற்றை கருத்தில் கொண்டு புதிய களஞ்சிய குதங்களை பொருத்தி வருகின்றோம். அதனுடன் கூடிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். ஒரு கப்பல் மூலம் ஏழு நாள்கள் எண்ணெய் இறக்குவதை மூன்று நாள்களுக்கு குறைக்க முடியும். பாரிய அளவு நிதி சேமிக்கப்படுகின்றது. இதற்கு முன்னர் இவற்றை கையாண்டிருந்தால் ஒரு ஆண்டுக்கு 8ஆயிரம் கோடி ரூபாய் சேமித்திருக்க முடியும். ஆனால் இதற்கான முதலீடுகளை செய்ய வேண்டும்.

மன்னார் கடற்படுக்கையில் இயற்கை எரிவாயு தளங்கள் இரண்டு கண்டறியப்பட்டுள்ளன. ஆய்வுகளின் படி மன்னார் கடற்படுக்கையில் 9 ட்ரில்லியன் கன அடி ஆழத்தில் இப்போது இயற்கை எரிவாயு இருப்பதும் இரண்டு பில்லியன் பரல் எடுக்கக்கூடிய கனிய எண்ணெய் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. அதேபோல் 350 பில்லியன் கன அடியில் இயற்கை எரிவாயு பெற்றுக் கொள்ள முடியும் என கண்டறியப்பட்டுள்ளது. இதில் தொடர்ச்சியாக பத்து ஆண்டுகளுக்கு 300 மெகாவோட் மின்சாரத்தை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது. அதேபோல் மன்னார் கடலுக்கடியில் 33 ஆயிரம் கிலோ மீற்றர் பரப்பளவான இடத்தில் ஒரு பில்லியன் பீப்பாய்கள் எரிபொருள் வளம் காணப்படுவதாக கடலுக்கடியில் நடத்தப்பட்ட ஆய்வுத் தகவல்களின் மூலம் தெரியவந்துள்ளது. இதனை அபிவிருத்தி செய்ய நாம் நடவடிக்கை எடுக்கவுள்ளோம். இது குறித்த ஆய்வுகளை முன்னெடுக்க வுள்ளோம். இயற்கை வாயு பயன்படுத்தி நீண்டகால எரிபொருள் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியும். என அவர் மேலும் தெரிவித்தார். (க-31)

# ஹேரத் – ஹரிஸ் இடையே சபையில் வாக்குவாதம்

கொழும்பு, ஏப். 1

சாய்ந்தமருது பிரதேசசபை விவகாரம் குறித்து நாடாளுமன்றில் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்துக்கும் பிரதி அமைச்சர் ஹரிஸ்ஸுக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றது.

அனைவரும் இணக்கம் தெரிவித்த ஒரு விடயத்தில் ஹரிஸ், தனிப்பட்ட அரசியல் வாக்குகளை மட்டுமே கருத்தில் கொண்டு பிரச்சினையை உருவாக்குகின்றார். இது தமிழ் முஸ்லிம் இனக்கலவரத்தில் முடியும் என்பதை முன்கூட்டியே எச்சரிக்கின்றேன் என்று விஜித ஹேரத் எச்சரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றில் 28ஆம் திகதி குழுநிலை விவாதம் இடம்பெற்ற போது விஜித ஹேரத் கல்முனை பிரதேசசபை பிரச்சினை குறித்து கருத்துக்களை தெரிவித்தார்.

"அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்களை அதிகமாகக்கொண்ட பிரதேசமாக கல்முனை நகர சபை மூன்று பிரதேசசபை பிரிவுகளைக்கொண்டது. இதில் ஒரு பிரதேச சபையில் தமிழர்கள் அதிகமாகவும் முஸ்லிம்கள் குறைவாகவும், மற்றைய பிரதேசசபையில் முஸ்லிம்கள் அதிகமாகும் தமிழர்கள் குறைவாகவும் வாழ்கின்றனர்.

சாய்ந்தமருது பிரதேச சபை விவகாரத்தில் நீண்டகாலமாக பிரதேச சபையை உருவாக்க வேண்டும் என்ற பிரச்சினை குறித்து பேச்சு நடத்திவருகின்றனர். இதனை உருவாக்கிக்கொடுப்பதில் எவருக்கும் எந்த பிரச்சினையும் இல்லை. இதற்கு ஒருவர் மட்டுமே காரணம் என்று சபையில் உரையாற்றிக்கொண்டிருந்த வேளையில் ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய இராஜாங்க அமைச்சர் ஹரிஸ், "இது குறித்து சாய்ந்தமருது, மருதமுனை பள்ளிவாசல்களின் தலைவர்கள் கல்முனை முஸ்லிம் தலைவர்கள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுடன் பேசுவதற்குத்தீர்மானிக்கப்பட்டுள்ளது" -என்றார்.

அதற்கு விஜித ஹேரத், "நீங்கள் ஒருவர் மட்டும் தான் இதற்கு எதிராக உள்ளீர்கள். அனைவரையும் திருப்திப்படுத்தவே அரசு"-என்றார்.

"அவ்வாறில்லை, இது நெருக்கடிக்குள்ளான பிரச்சினை" என்று ஹரிஸ் கூற, "இதையே தான் நீங்கள் நீண்ட காலமாக கூறுகின்றீர்கள். நீங்கள் தான் இதில் பிரச்சினைக்குரிய நபர். தனி பிரதேச சபை அமைக்காது போனால் தான் பிரச்சினை வரும். தமிழ்-முஸ்லிம் பிரச்சினையை உருவாக்க வேண்டாம்.

உங்களிடம் தெளிவான பதில் இல்லை. உங்களால்தான் பிரச்சின்ன ஏற்பட்டுள்ளது. எல்லை வரம்புப் பிரச்சினை ஒன்றும் இல்லை. இதனை இப்படியே விட்டால் இன மோதலில் முடியும் - என்றார். (த-31)

# அரச சேவையில் மாற்றம் ஏற்படுத்தப்படவேண்டும்

கொழும்பு,ஏப். 1

நாட்டின் முன்னுள்ள சாவல்களை வெற்றிகொள்வதற்கு அரச சேவையில் முக்கிய மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டுமென அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இதற்காக புதிய தொலைநோக்குடன் புதிய திட்டங்களை வகிக்க வேண்டியது மிகவும் அவசியமும் அவசரமுமானதாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த 28 ஆம் திகதி முற்பகல் கொழும்பு தாமரைத் தடாகக் கலையரங்கில் இடம்பெற்ற இலங்கை நிர்வாக சேவை சங்கத்தின் 36 ஆவது வருடாந்த பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

நாடு முகங்கொடுத்துள்ள பொருளாதார பிரச்சினைகளிலிருந்து நாட்டை விடுவிப்பதற்கு நாட்டின் நிர்வாக சேவை, திட்டமிடல் சேவை, கணக்காய்வு சேவை உள்ளிட்ட அரச சேவ்வயின் உயர் துறைகள் முன்னணி வகிக்க வேண்டுமெனசுட்டிக்காட்டிய அவர், வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதார நிலமைகளிலிருந்து நாட்டை கட்டியெழுப்புவதற்கு அரசியல்வாதிகளால் மட்டும் முடியாது என்றும் குறிப்பிட்டார்.

தற்போது 30 வீதமாகவுள்ள நாட்டின் அரச ஊழியர்களின் வினைத்திறனை குறைந்தது 50 வீதமாகவாவது அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டி ,அவ்வாறு இல்லாதபோது நாடு என்ற வகையில் முன்னோக்கிச் செல்லும் பயணத்தை வெற்றிகொள்ள முடியாதென்றும் குறிப்பிட்டார்.

அனைத்து துறைகளுக்கும் அவற்றின் கீர்த்தியையும் உரிமைகளையும் பெற்றுக்கொடுப்பதற்கு அரசு அர்ப்பணிப்புடன் உள்ளதுடன், அனைத்து துறைகளினதும் தொழில்சார்ந்த கோரிக்கைகளை முடியுமானளவு பெற்றுக் கொடுக்க அரசு ஒருபோதும் பின் நிற்காது என்றும் தெரிவித்தார். (க)

# பாதீடு தோற்கவே மாட்டாது: கூட்டமைப்பினர் ஏமாறுவர்

## காமினி லொக்குகே எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 1

மக்களுக்குப் பயன்தராத வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் செயற்படுகின்றோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களிப்பதனால் ஒருபோதும் வரவு - செலவுத் திட்டத்தைத் தோற்கடிக்க முடியாது . இவர்கள் இன்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவால் ஏமாற்றப்படுகின்றார்கள்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

சமகால அரசியல் நடப்பு தொடர்பில் வினவிய போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சிக்குள் காணப்படுகின்ற முரண்பாடுகளை வெளிக் கொண்டு வந்துள்ளார்கள்.

வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டவுடன் ஆட்சி மாற்றம் ஏற்படும். நாடாளுமன்றில் பெரும்பான்மைப் பலம் உள்ள தரப்பு இடைக்கால அரசாகச் செயற்படும். இடைக்கால அரசு மீண்டும் ஏற்படக் கூடாது. வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டவுடன் உடனடியாகப் பொதுத்தேர்தலுக்குச் செல்வதே எதிர்க்கட்சியின் முக்கிய நோக்கம்.

இனங்களுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்தும் அரசியல் தீர்வை அனுமதிக்க முடியாது. ரணில் விக்கிரமசிங்க அரசியல் தீர்வு பெற்றுத்தருவதாகக் குறிப்பிட்டுக் கொண்டு கூட்டமைப்பினரை ஏமாற்றுகின்றார். கூட்டமைப்பினர் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் போலியான வாக்குறுதிகள் வழங்கி தொடர்ந்தும் தமிழ் மக்களை ஏமாற்றித் தமது அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள்கின்றார்கள் - என்றார். (து-31)

# சு.கவிலிருந்து விலகியோரை மீள இணைக்க நடவடிக்கை

## துமிந்த திஸாநாயக்க தெரிவிக்கிறார்

கொழும்பு, ஏப். 1



சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலகிச் சென்ற உறுப்பினர்களையும், பதவியிலிருந்து நீக்கப்பட்ட தொகுதி அமைப்பாளர்களையும் மீண்டும் கட்சிக்குள் உள்வாங்கி அனைவரையும் ஒன்றிணைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

பாதீட்டின் இறுதி வாக்கெடுப்பில் சுதந்திரக் கட்சி எதிர்த்து வாக்களிக்க வேண்டும். அதன் பின்னரே மூன்றாம் கட்ட பேச்சு குறித்து ஆராய முடியும் என்று சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி வட்டாரங்கள் தெரிவித்து வருகின்றமையாலும், அரச தலைவர் சிறிசேனவை வேட்பாளராகக் களமிறக்க அந்தக் கட்சி இணங்காததாலும் இந்த முயற்சி எடுக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகின்றது.

முன்னணியுடன் கூட்டணி அமைப்பதற்கான இரு உத்தியோக பூர்வ கலந்துரையாடல்கள் நிறை வடைந்திருந்தாலும், அரசதலைவர் வேட்பாளர் உள்ளிட்ட விடயங்களில் அவர்கள் வெளியிடுகின்ற கருத்துக்கள் அதிருப்தியை ஏற்படுத்துகின்றன. எதிர்வரும் தேர்தல்களில் சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிட வேண்டிய நிலைமை ஏற்படுமானால், கட்சியை மேலும் பலப்படுத்துவது அவசியம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார். இதன் காரணமாகவே சு.க மீது அதிருப்தியடைந்துள்ள உறுப்பினர்கள் மற்றும் தொகுதி அமைப்பாளர்களை ஒன்றிணைக்கும் முயற்சிகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுதந்திரக் கட்சி வரவு செலவு திட்டத்துக்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என்று பொதுமக்கள் முன்னணி எமக்குக் கூற வேண்டியதில்லை. கட்சித் தலைவர் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன வின் ஆலோசனைக்கிணங்கவே இந்த விடயத்தில் நாம் செயற்படுவோம்.

**ஆதரவளிக்கும் சு.கவின் எம்.பிக்களுக்கு அமைச்சு**

ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு ஆதரவளித்து வரும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சிலருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன என்றும் அதற்கு சிறிசேனவும் இணக்கம் தெரிவித்துள்ளார் என்றும் செய்திகள் வருகின்றன.

அவ்வாறானதொரு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அரசதலைவர் அதற்கு இணக்கம் தெரிவித்தார் என்றும் தகவல்கள் கிடைக்கப் பெற்றன.

சிறிசேனவின் கீழ் அமைச்சுக்கள் காணப்படுவதாலும் அமைச்சரவையின் தலைவராக அவரே காணப்படுவதாலும் தற்போதும் தேசிய அரசே உள்ளது என்பதே எனது நிலைப்பாடு - என்றார்.

(து-31)

# அரசதரப்பின் அலட்சியமே பாதீடு தோற்கக் காரணம்

## அமைச்சர் ரணவக்க விசனம்

கொழும்பு, ஏப். 1

தனது பொறுப்பில் உள்ள பெருநகர் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சுக்கான பாதீடு நிதி ஒதுக்கீடு நாடாளுமன்றில் தோல்வியடையச் செய்யப்பட்டமைக்கு அரச தரப்பின் அலட்சியமே காரணம் என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை அவர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

குறைநிரப்புத் தீர்மானத்தினூடாக அந்த ஒதுக்கீட்டைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று எதிர்பார்க்கின்றேன். எதிர்கட்சியினர் தெரிவிப்பதைப் போன்று ஒன்றும் விபரீதம் நேர்ந்துவிடவில்லை.

அவர்கள் எம்மைக் கண்டு அச்சமடைவதால் அவதானத்துடன் உள்ளனர். அதனை நாடாளுமன்ற விவாதத்தின் போது அவதானிக்கக் கூடியதாக இருந்தது. கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் ஏற்பட்ட அரசியல் சூழ்ச்சி தோல்வியடைந்ததால் ஏற்பட்டுள்ள கவலையையே அவர்கள் இவ்வாறு வெளிப்படுத்துகின்றனர். இதனை ஒரு பெரும் பிரச்சினையாக நான் கருதவில்லை. இது தற்காலிகமாக ஏற்பட்டுள்ள ஒன்று.

ஏப்ரல் 5 ஆம் திகதி வரவு - செலவு திட்டம் நிறைவேற்றப்படுவது உறுதி. என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-61)

# கலப்பு நீதிமன்றம் மூலமாக ஒருபோதும் தீர்வு கிடையாது

## நாணயக்கார எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, ஏப். 1

நாட்டில் கலப்பு நீதிமன்றை நிறுவி ஒருபோதும் தீர்வு காணமுடியாது. பன்னாட்டு அமைப்புக்கள் குறிப்பிடுவதைப் போன்று கலப்பு நீதிமன்றம் உருவாக்கப்பட்டால் நாட்டில் நீதித்துறையின் சுயாதீனத்தன்மை கேள்விக்குறியாக்கப்படும். அனைத்துப் பிரச்சினைகளுக்கும் உள்ளக விசாரணையின் ஊடாகத் தீர்வு காணலாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்குத் தீர்வு காண பன்னாட்டு நீதிப்பொறிமுறையையும் கலப்பு நீதிமன்ற உருவாக்கத்தையும் நாட முற்படுவது நாட்டின் நீதித்துறையைப் பலவீனப்படுத்தும். இறுதிக்கட்டப் போரில் இராணுவத்தினர் சிவில் குற்றங்களை மேற்கொண்டிருந்தால் நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் இந்த விடயத்தில் போரை வென்ற இராணுவத்தினர் விதிவிலக்கல்ல. இராணுவத்தினருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள சிவில் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் அவர்கள் பொதுச்சட்டத்திலும், இராணுவச் சட்டத்திலும் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள் என்று இராணுவ தளபதி குறிப்பிட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. இந்தநிலைப்பாட்டிலே நாங்களும் இருக்கின்றோம். மேற்குலக நாடுகளில் செயற்படும் விடுதலைப் புலிகளின் ஆதரவான அமைப்புகளின் விருப்பங்களை எமது நாட்டின் அரசமைப்பின் ஊடாக ஒருபோதும் செயற்படுத்த இடமளிக்க முடியாது.

பன்னாட்டு நீதிபதிகளின் உள்வாங்கல் தொடர்பில் அரசமைப்பில் குறிப்பிடப்படவில்லை. தற்போது அவ்வாறான ஏற்பாட்டை உருவாக்கவே முயற்சிகள் இடம் பெறுகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் வடக்கு மாகாண தமிழ் அரசியல்வாதிகளும் பல்வேறு தர்க்கங்களை முன்னிலைப்படுத்துகின்றனர். எவ்வித மாற்றங்களும் ஏற்படாது. பல்வேறு காரணிகள் காணப்படலாம். ஆனால் நாட்டின் சுயாதீன தன்மையே எவ்விடத்திலும் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.

அனைத்துப் பிரச்சினைகளுக்கும் உள்ளக விசாரணையின் ஊடாகவே தீர்வு காண முடியும். இந்தவிடயத்தில் அனைத்துத் தரப்பினரும் நாட்டின் இறையாண்மையை மதித்துச் செயற்பட வேண்டும் - என்றார்.

(து-31)

# அரசுக்கு வீழ்ந்தது முதலாவது அடி!

## மகிந்த கூறுகிறார்

கொழும்பு, ஏப். 1

இரண்டு அமைச்சுக்கள் மீதான வாக்கெடுப்பு தோற்கடிக்கப்பட்டமை அரசுக்கு வீழ்ந்த முதலாவது அடி என்று எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பானந்துறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபைகளுக்கான ஆயுட்காலம் நிறைவடைந்துள்ள நிலையில் அவற்றுக்கான தேர்தல் நடத்தப்படாது திட்டமிட்டு இழுத்தடிக்கப்படுகிறது. அரசுக்கு தேர்தல் மீது இருக்கும் அச்சம் காரணமாகவே இழுத்தடிப்புச் செய்கிறது. இன்னமும் எத்தனை வருடங்கள் தாமதப்படுத்தப்படும் என்பதைக் கூறமுடியாதுள்ளது.

மக்களின் வாக்குரிமையை நிலைநாட்டும் வகையில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துமாறு கோரி நாம் நீதித்துறையை நாடியிருந்தோம். நீதித்துறை கூட எமது மக்களுக்கான வாக்குரிமையை வழங்கியிருக்கவில்லை. நான்கரை வருடங்கள் பொறுத்திருக்க வேண்டும் என்றே நீதித்துறை எமக்கு கூறியுள்ளது.

நாடாளுமன்றில் உருவாக்கப்படுகின்ற சட்டங்களுக்கு அமையவே நீதித்துறை செயற்பட வேண்டியுள்ளது. அங்கு உருவாக்கப்படும் சட்டங்கள் தவறாக இருந்தாலும்கூட நீதித்துறை அதற்குக் கட்டுப்பட்டாக வேண்டியுள்ளது. என்னையும் எனது குடும்பத்தையும் பழிவாங்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு 19ஆவது திருத்தச்சட்டம் உருவாக்கப்பட்டது. அரசதலைவரை ஏமாற்றியே 19ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. அரசதலைவர் அதிகாரங்கள்கூட அவரது ஆட்சிக்காலத்தில் சூட்சுமமாகக் குறைக்கப்பட்டுள்ளன என்பதை அவர் அறிந்திருக்கவில்லை. இப்படித்தான் அனைத்தையும் செய்கின்றார்கள் - என்றார். (து-31)

# தூதரங்களுக்கான நியமனங்கள்: உயர்பதவிகளுக்கான குழு ஏற்பு

கொழும்பு, ஏப். 1

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களின் தலைவர்களாக அரசதலைவர் மைத்திரிபாலசிறிசேன முன்மொழிந்த பதினான்கு தொழில் இராஜதந்திரிகளின் நியமனங்களை இலங்கை நாடாளுமன்றின் உயர் பதவிகளுக்கான குழு கடந்த புதன்கிழமை ஏற்றுக்கொண்டிருக்கின்றது.

நாட்டுச் சேவை மற்றும் சங்கங்களுக்கு நியமிக்க ப்பட்ட அல்லது முன்மொழியப்பட்ட நபர்களின் தகுதியைப் பரீட்சிப்பதற்காக அந்தக் குழுவுக்கு பெயர் விவரம் அனுப்பப்பட்டிருந்தது என்று அயலுறவு அமைச்சு தெரிவித்தது.

திருமதி கே.டி.செனவிரத்ன நியூயோர்கிலுள்ள ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி, ரொட்னி எம். பெரேரா ஐக்கிய அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர், திருமதி. கிரேஸ் ஆசிர்வாதம் பெல்ஜியம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கைத் தூதுவர், ஏ.எஸ்.நாகந்தல, நெதர்லாந்துக்கான இலங்கைத் தூதுவர் மற்றும் இரசாயன ஆயுதங்களைத் தடுப்பதற்கான நிறுவனத்தின் நிரந்தரப் பிரதிநிதி, செல்வி. வை.கே. குணசேகர இந்தோனேசியாவுக்கான இலங்கைத் தூதுவர், திருமதி ஜே.ஏ.எஸ்.கே. ஜயசூரிய தாய்லாந்துக்கான இலங்கைதூதுவர், திருமதி. பிரதீபா சாரம் பஹ்ரைனுக்கானஇலங்கைதூதுவர், திருமதி. சோபினிகுணசேகர பிலிபைன்சுக்கான இலங்கைத் தூதுவர், திருமதி. சரோஜாசிரிசேன ஒஸ்ட்ரியாவுக்கான இலங்கைத் தூதுவர் மற்றும் பன்னாட்டு அணுச்சக்தி முகவர் நிலையத்துக்கான நிரந்தரப் பிரதிநிதி ஓ.எல். அமீர்அஜ்வத் ஓமானுக்கான இலங்கைத் தூதுவர், எம்.ஜே.பி. ஜயசிங்ஹ ஐக்கியஅரபு இராச்சியத்துக்கான இலங்கைத் தூதுவர், வருனவில்பாத இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர், செல்வி. சசிகலா பிரேமவர்தன சிங்கபூருக்கான இலங்கைத் தூதர், ரிஸ்விஹஸன் துருக்கிக்கான இலங்கைத்தூதுவர்.

(த)

# பௌத்த மாநாடு நடத்துவது வடக்கில் தேவையற்ற ஒன்று

## வடக்கு முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்ரல் 1

வடக்கு மாகாணத்தில் தீர்க்கமுடியாத பிரச்சினைகள் நிறைய இருக்கும் போது, வடக்கு மாகாண ஆளுநர் பௌத்த மாநாட்டை நடத்தியது ஏற்றுக்கொள்ள முடியாது என வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாணசபை இயங்கிய ஐந்து வருட காலப்பகுதிக்குள் மக்களின் பிரச்சினைகள் பல தீர்வு காண முடியாத அளவுக்கு இருக்கின்றன.

வடக்கு மாகாணத்துக்கு புதிதாக தமிழ் ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட்டதை அடுத்து, நாம் மிகவும் மகிழ்வு அடைந்தோம். வடக்கு மாகாண சபையால் நிறைவேற்றப்படாத விடயங்களை அவர் நிறைவு செய்வார் என்றுநம்பினோம். அவர் பதவியேற்றதன் பின்னர் பௌத்த மாநாட்டுக்கு முன்னுரிமை வழங்கிய விடயமானது எமக்கு வருத்தத்தை அளிப்பதோடு இந்த விடயம் தொடர்பில் எமது கண்டனத்தையும் நான் பதிவிடுகின்றேன் எனவும் குறிப்பிட்டார். (க-106)



# தேர்தலுக்காக ரணிலுடன் சுமந்திரன் நாடகமாடுகிறார்

## அருந்தவபாலன் குற்றஞ்சாட்டுகிறார்

யாழ்ப்பாணம், ஏப். 1

ஐக்கிய தேசியக் கட்சியையும் அதன் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவையும் பாதுகாக்கின்ற செயற்பாடுகளையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொண்டு வருகிறது என்று சாடியிருக்கும் தமிழ் மக்கள் கூட்டணியின் பேச்சாளர் க.அருந்தவபாலன், அதன் வெளிப்பாடாகவே அடுத்த தேர்தலை இலக்கு வைத்து ரணில் விக்கிரமசிங்கவும் சுமந்திரனும் இணைந்து நாடகம் அரங்கேற்றுகிறனர் என்று தெரிவித்தார்.

தென்மராட்சி சாவகச்சேரியிலுள்ள அவரது இல்லத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டமைப்பை குறிப்பாக அதன் பேச்சாளர் சுமந்திரனைப் பொறுத்தவரையில் எப்படியாவது அடுத்து வரும் அரசதலைவர் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவைப் பதவிக்கு அமர்த்துவதே நோக்கமாகவுள்ளது.

ஐ.நா மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு இலங்கை அரசு இணை அனுசரணை வழங்கியது தனக்குத் தெரியாது என்றும் இதனை ஒபோதும் அனுமதிக்கப்போவதில்லை என்றும் அரசதலைவர் கூறியிருப்பது ஒரு அரசியல் நாடகம். இதுஒட்டு மொத்த தமிழ் மக்களையும் பன்னாடுகளையும் ஏமாற்றுகின்ற செயற்பாடு.

மனித உரிமைகள் கூட்டத்தொடர் தொடங்குவதற்கு முன்னதாக பன்னாட்டுக் குற்றவியில் நீதிமன்றுக்கு கொண்டு செல்ல இயலாது என்று கூறியிருந்த சுமந்திரன் கூட்டத் தொடர் முடிந்த பின்னர் பன்னாட்டுத் தீர்ப்பாயத்துக்குக் கொண்டு சொல்வோம் என்று கூறுகின்றார். முன்னர் இயலாது என்று சொன்ன அதே சுமந்திரன் தற்போது கொண்டு செல்வோம் என்று கூறுவதன் நோக்கம் என்ன?

உண்மையில் அதன் உள்நோக்கம் என்னவென்றால், அரசதலைவர் தேர்தல் நெருங்கி வரும் நிலையில் ரணில் விக்கிரமசிங்கவோ அல்லது அவரது தரப்பினரோ அந்தத் தேர்தலில் வெற்றி பெறாமல் கோத்தபாய அல்லது வேறு யாரும் வெற்றி பெற்று வருகின்றபோது அவர்களுக்கு எதிராக முன்னெச்சரிக்கையாகவே அவ்வாறு கருத்துக்களை வெளியிடுகின்றார்.

பன்னாட்டுத் தீர்ப்பாயத்துக்கு ரணில் தரப்பைக் கொண்டு செல்ல மாட்டார். ரணிலின் நெருங்கிய ஆதரவாளர் தான் சுமந்திரன் என்பது வெளிப்படையான உண்மை. ஆகையால் அவரைப் பாதுகாப்பது மட்டுமன்றி அவரைத் தொடர்ந்தும் பதவிக்குக் கொண்டுவருவது தான் அண்மைய அவரது பேச்சின் உள் நோக்கமாக இருக்கின்றது.

### பாடசாலைகளை தேசிய மயமாக்காதீர்

வடக்கு மாகாணப் பாடசாலைகளைத் தேசியப் பாடசாலைகளாக்குகின்றமை முற்றிலும் தவறானது. அத்தகைய செயற்பாடுகள் மாகாணத்துக்கு இருக்கின்ற அதிகாரங்களை மத்தி பறிப்பதாகும். இந்தச் சதியின் பின்னால் வடக்கு ஆளுநரும் விஜயகலா மகேஸ்வரனும் உள்ளனர்.

மாகாண, தேசியப் பாடசாலைகள் எல்லாமே ஒன்றாக சம அளவில் இருக்கின்றன. அரசு முன்னெடுக்கும் இந்தக் கபடத்தனமான சதியிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகளை அனைவரும் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம் - என்றார். (த)

# கோத்தபாய வந்தால் தமிழருக்கு ஆபத்து!

## முன்னணி கூறுகிறது

யாழப்பாணம், ஏப். 1



தமிழ் மக்களுக்கு எதிரான அத்தனை கொடுரங்களையும் முன்னின்று வழிப்படுத்திய கோத்தபாய ராஜபக்ச இந்த நாட்டின் அரசதலைவரானால் தமிழ் மக்களுக்கு ஆபத்து என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எச்சரிக்கை விடுத்துள்ளது.

கட்சியின் யாழ்ப்பாணம் கொக்குவிலிலுள்ள தலைமைஅலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் கட்சியின் பொதுச் செயலர் செ.கஜேந்திரன் மேலும் தெரிவித்ததாவது:

இழைக்கப்பட்ட கொடூரங்களுக்குத் தண்டிக்கப்பட்டிருக்க வேண்டிய கோத்தபாய ராஜபக்ச உள்ளிட்ட குற்றவாளிகளைப் பாதுகாத்ததே கூட்டமைப்புத்தான். அதனால் ஏற்படப் போகும் ஆபத்துக்களுக்கு கூட்டமைப்பினரே பொறுப்பேற்கவேண்டும்.

முன்னைநாள் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலராக கோத்தபாய ராஜபக்ச இருந்தகாலத்தில் தான் தமிழ் மக்கள் ஈவிரக்கமின்றி சித்திரவதைசெய்தும் உயிரோடு எரித்தும் கொல்லப்பட்டிருக்கின்றனர். அவரது நேரடி வழிகாட்டலிலேயே அத்தனை கொடூரங்களும் துன்பங்களும் நடந்துள்ளன.

அவர் மீண்டும் பதவிக்குவந்தால் இன்னும் பலதையும் தமிழ்மக்களுக்கு எதிராகச் செய்யக் கூடிய ஆபத்துக்கள் இருக்கின்றன.

அவரது தலைமையிலும் வழிகாட்டலிலும் இழைக்கப்பட்ட குற்றங்கள் அநீதிகள், கொடுமைகளுக்கு எதிராக பன்னாட்டு குற்றவி யல் நீதி மன்றுக்குக் கொண்டுசென்று விசாரணைகள் நடைபெற்றிருந்தால் அவர் இன்றைக்குத் தண்டிக்கப்பட்டிருப்பார்.

தண்டிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளைக் கூட்டமைப்பினர் செய்திருக்கவேண்டும். அதனைச் செய்யக் கூட்டமைப்பினர் தவறியிருக்கின்றனர். அவர்கள் அரசைப் பாதுகாப்பதையே நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றனர்.

### பொன்சேகாவும் போர்க் குற்றவாளி

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் போர்க் குற்ற வாளிதான். இன்றைக்கு அவர் தன்னைப் பரிசுத்தமானவராகக் காட்டுவதற்கு முயற்சிக்கிறார். போர்க் குற்ற ஆதாரங்கள் இருப்பதாகவும் விசாரணைகள் நடத்தப்படவேண்டுமென்றும் கூறுகின்றார். போர்க் குற்றம் என்ற கோணத்தில் விசாரணை நடத்த பொன்சேகா தயாராக இருக்கின்றாரா? போர்க்குற்றங்கள் தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டால் சரத் பொன்சேகாவும் குற்றவாளியாகத் தண்டிக்கப்படுவார். என்றார். (த)

# குடியுரிமையை மக்கள் விரும்பி ஏற்கவில்லை

## டிலான் எம்.பி தமிழரை அச்சுறுத்துகிறார் எனவும் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 1

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ள எங்களுக்கு குடியுரிமை திணிக்கப்பட்டுள்ளதே அன்றி நாம் விரும்பி ஏற்றுக்கொண்டதல்ல.

நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேராவின் கருத்து, தமிழினத்தை அச்சுறுத்தும் விதத்திலேயே அமைகின்றது என்று அம்பாறை மாவட்ட போராளிகள் கூட்டமைப்பின் இணைப்பாளர் வடிவேல் சசிதரன் தெரிவித்தார்.

அம்பாறை காரைதீவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இறுதிக்கட்டப் போராட்டத்தின் போது முள்ளி வாய்க்கால் பகுதிகளில் மாத்திரம் அல்லாது பல இடங்களில் இராணுவத்தினர் போர்க் குற்றங்களில் ஈடுபட்டனர். தமிழர்கள் கலப்பு நீதிமன்றத்தை நாடக்கூடாது எனவும் தமிழர்கள் இந்த நாட்டின் குடியுரிமையை மறந்து நாட்டுக்கு எதிராகச் செயற்பட முடியாதென்றும் இவ்வாறு செயற்படும் சந்தர்ப்பத்தில் 83 களில் நடைபெற்ற ஜூலைக்கலவரத்தைப் போல் தமிழருக்கு ஏற்படுத்தித் தரும் என்பதை முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டிலான் பெரேரா பதுளையில் ஊடக சந்திப்பில் கூறியுள்ளார்.

இது தமிழினத்தை அச்சுறுத்தும் விதமாகவுள்ளது.

இந்தக் கருத்து சிங்களவர்கள் தமிழினத்தை அழித்தது என்றும் மீண்டும் அழிப்போம் என்றும் நேரடியாக கூறுவதாகவே பார்க்கமுடிகின்றது- என்றார். (த)



# அதிவேக நெடுஞ்சாலையை பயன்படுத்துவோருக்கு அட்டை

கொழும்பு, ஏப். 1

அதிவேக நெடுஞ்சாலையைப் பயன்படுத்துவோருக்கான புதிய இலத்திரனியல் அட்டையை அறிமுகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புதிய கொடுப்பனவு முறை மூலம், அதிவேக நெடுஞ்சாலையை பயன்படுத்துவோர் கட்டணத்தைச் செலுத்தும் பணிகளைச் செயற்திறன் மிக்கதாக மேற்கொள்ள முடியுமென்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஜாஎல, சீதுவ மற்றும் கட்டுநாயக்க இடமாறல் மத்திய நிலையத்தில் இந்த இலத்திரனியல் அட்டையை பதிவு செய்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எதிர்வரும் 11ஆம் திகதி வரையில் இதற்கான பதிவை மேற்கொள்ள முடியும் என்றும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்தது. (த-222)

# மின்சாரத்தை விரயமாக்குவது மக்களா? அரச நிறுவனங்களா?

## டக்ளஸ் எம்.பி. கேட்கிறார்

யாழ்ப்பாணம், ஏப். 1

சிக்கனமாக மின்சாரத்தைப் பயன்படுத்துமாறு கோரிக்கை விடுக்கிறீர்கள். மின்சாரத்தை மிக அதிகளவில் வீண் விரயம் செய்வது, சாதாரண பொது மக்களா? அரச நிறுவனங்களா? என்ற கேள்வியை நீங்களே கேட்டுப் பாருங்கள் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் பாதீடு மீதான விவாதத்தில் அண்மையில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு டக்ளஸ் கேள்வியெழுப்பினார் என்று அவரது ஊடகப் பிரிவு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டில் மின் தட்டுப்பாடு ஏற்படும் எனத் தெரிந்து கொண்டும், அதைப் பற்றிக் கவலை கொள்ளாமல், இப்போது இரண்டு மின் குமிழ்களை அணைத்து விடுமாறு பொது மக்களுக்கு அறிவுறுத்துகின்றீர்கள். மின் வசதி இருக்கின்ற மக்களும் நாளாந்தம் ஒன்று அல்லது, இரண்டு மின் குமிழ்களையே பயன்படுத்தக் கூடிய நிலையிலேயே இருக்கிறார்கள். இதே நிலையில்தான் பெரும்பாலான மக்களின் நிலைமைகள் இருக்குமென்று கூற முடியும். அதையும் அணைத்துவிட்டு, இருட்டில் இருக்கச் சொல்கிறீர்களா?

அரச நிறுவனங்கள் அநேகமானவற்றில் மின் மிக அதிகளவில் வீண் விரயம் செய்யப்படுகின்றது. இதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கிறீர்கள்? - என்றுள்ளது. (த)

# பொலிஸ் அலுவலர் பதவிகளுக்கு இளையோரே விண்ணப்பியுங்கள்

பதுளை, ஏப். 1

இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தால் பயிலுநர் பொலிஸ்கான்ஸ்டபிள் பயிலுநர் பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் மற்றும் பயிலுநர் பொலிஸ் சாரதி ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. எனவே இதனை முறையாகப் பயன்படுத்துமாறு இளையோர் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இந்தப் பதவிகளுக்கான கல்வித் தகைமைகள் மற்றும் தகுதிகள் மலையக இளையோருக்கு அதிகளவில் உள்ளன. எனவே மலையக இளையோர் இதற்கு உடனடியாக விண்ணப்பியுங்கள் என்று பதுளை நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்தகுமார் கோரியுள்ளார்.

**பயிலுநர் பொலிஸ் கான்ஸ்டபிள்**

இந்தப் பதவிக்கு க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் தமிழ், கணிதம் உட்பட ஒரே தடவையில் ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். உயரம் 5 அடி4அங்குலமாக இருத்தல் வேண்டும். மார்பு 30 அங்குலம் (ஆகக் குறைந்தது மூச்சுவிட்டநிலையில்) இருத்தல் வேண்டும்.

18 வயதுக்குக் குறையாதவராகவும் 28 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**பயிலுநர் பெண் பொலிஸ் கான்ஸ்டபிள்**

க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் தமிழ், கணிதம் உட்பட ஒரே தடவையில் ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். உயரம் 5 அடி2அங்குலமாக இருத்தல் வேண்டும். 18 வயதுக்குக் குறையாதவராகவும் 28 வயதுக்குமேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**பயிலுநர் பொலிஸ் சாரதி**

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் தமிழ், கணிதம் உட்பட ஒரே தடவையில் ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். உயரம் 5 அடி3அங்குலமாக இருத்தல் வேண்டும். மார்பு 30 அங்குலம் (ஆகக் குறைந்தது மூச்சுவிட்டநிலையில்) இருத்தல் வேண்டும். 19 வயதுக்குக் குறையாதவராகவும் 29 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

இவற்றுக்கான விண்ணப்பப் படிவத்தின் முடிவுத் திகதி எதிர்வரும் மே மாதம் 22 ஆம் திகதியாகும்.

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் திருமணமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை" பணிப்பாளர் (ஆள்ச்சேர்ப்பு), பயிலுநர் ஆள்ச்சேர்ப்பு அலுவலகம், இல. 375, 1ஆம் மாடி, சம்புத்தத்வ ஜயந்திமாவத்தை, கொழும்பு 06 என்ற முகவரியிடப்பட்டு, விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் மே மாதம் 22 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்புதல் வேண்டும் என்று இளையோர் அறிவுறுத்தப்படுகின்றனர். (த)

# கஞ்சா கடத்திய பொலிஸ் கைது

பதுளை,ஏப். 1 ,

பொலிஸ் கான்ஸ்டாபிள் ஒருவர்,தமது உந்துருளியில் சூட்சுமமாக எடுத்துச் சென்ற பதப்படுத்தப்பட்ட கஞ்சாப் பொதியை,வெள்ளவாயா பொலிஸார் கண்டுபிடித்து,குறிப்பிட்டபொலிஸ் கான்ஸ்டபிள்ளையும் கைதுசெய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முந்தினம் காலை இடம்பெற்றுள்ளது. வெள்ளவாயா பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலொன்றையடுத்தே, பொலிஸார், குறிப்பிட்டபொலிஸ் கான்ஸ்டபிள் செலுத்திய உந்துருளியைத்தடுத்து நிறுத்தி சோதனைகளை மேற்கொண்டனர். சூட்சுமமாகஎடுத்துச் செல்லப்பட்ட பதப்படுத்தப்பட்ட ஒருகிலோவும் 635 கிராமும் கஞ்சா மீட்கப்பட்டது என வெள்ளவாயாபொலிசார் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள்,மீட்கப்பட்ட கஞ்சாவுடன்,மொனராகலை மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுவாரென்று வெள்ளவாயாபொலிஸார் தெரிவித்தனர். (க)

# இனத் துவேசத்தை வளர்க்கமாட்டோம்

## வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

வவுனியா,ஏப். 1

வன்முறையையும், இனத்துவேசத்தையும் வளர்க்கமாட்டோம் என்பதுவே இந்த மாநாட்டில் நாம் எடுத்துகொண்ட பிரகடனம் என்று வடக்குமாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

வவுனியாவில்29 ஆம் திகதி நடைபெற்ற பௌத்தமாநாட்டில் கலந்துகொண்டிருந்ததுடன்,மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இது பௌத்தமாநாடு என்றாலும் அனைத்து மதங்களுடனான பேச்சுவார்த்தையின் ஆரம்பமாக இருக்கும். வடமாகாணம் பல போர்களை கண்டமாகாணமாக இருந்திருக்கிறது.

எத்தனையோ இராணுவங்கள் தமது விருப்பு வெறுப்புகளை செய்தமாகாணமாக இருக்கிறது. இனிமேலும் இந்த மக்கள் எந்தவிதமான கஸ்டத்துக்கும் உட்படகூடாது.

ஆனால் போரின்பின்னர் ஆங்காங்கே சிலசம்பவங்கள் நிகழ்ந்திருப்பது உங்களுக்குத் தெரியும். அதனை உடனடியாக சரிசெய்யமுடியாதமையாலேயும் அதற்கான நீதியை வழங்கமுடியாதமையாலும் தான் அது வளர்ந்துவந்துள்ளது. எனவே சில சம்பவங்கள் தொடர்பாக நாங்கள் கரிசனையுடன் இருக்கின்றோம். இந்த மாநாட்டின் நோக்கம் மதசார்பின்மைமாறாக அனைவரையும் ஒரு இடத்துக்குக் கொண்டுவருவதே. அவர்களுக்கு இருக்கும் கஸ்டங்கள் சவால்களை ஒரு குழுவாக சந்திப்பதுவே.

வடமாகாணத்தில் இருக்கின்ற மொழி, மத,கலாசார வேற்றுமைகளை ஏற்றுகொள்கின்றோம். அடுத்தவர் தம்முடைய மத ,மொழி, கலாசாரத்துக்கு எந்தளவு மரியாதை கொடுக்கிறாரோ அந்தமதிப்பையும், மரியாதையும் கொடுப்பதற்கு நாங்கள் இணங்குகின்றோம். எந்த ஒரு காரணத்துக்கூடாகவேனும் மதத்தை இன்னொருவர் மீது திணிப்பதற்கோ, வலுகட்டாயபடுத்துவதற்கோ நாங்கள் முன்வரமாட்டோம். எந்தவித்திலும் வன்முறையையும், இனத்துவேசத்தையும் வளர்க்கமாட்டோம் என்பதுவே இந்த மாநாட்டில் நாம் எடுத்துகொண்ட பிரகடனம்.

போர்க்களமாய் இருந்த இந்தப் பூமியில் இருதரப்புக்கும் இடையிலான சமாதான பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க முன்வந்தவரே இந்த விகாரையின் பௌத்தபிக்கு. போரின் உச்சகட்டத்திலும் அவரது பணி சிறப்புக்குரியது. வடமாகாணத்தில் நடைபெறும் பௌத்த விடயங்கள் இவரது மேற்பார்வையில் நடக்கவேண்டும். அவர் தமிழ்மக்களையும், பௌத்தத்தையும் நேசிப்பவர் என்று தெரிவித்தார். (க-110)



# நச்சுத் தன்மையற்ற தேசிய கண்காட்சி அரசதலைவரால் திறந்துவைப்பு

கொழும்பு,ஏப் 1

நச்சுத்தன்மையற்ற தேசிய சந்தை மற்றும் கண்காட்சி அரச தலைவர் மைத்ரிபால சிறிசேனவால் நேற்று முன்தினம் முற்பகல் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது.

'நச்சுத்தன்மையற்ற உணவுகளை உண்போம் தாய்நாட்டை பாதுகாப்போம்' என்ற தொனிப்பொருளின் கீழ் இந்தக் கண்காட்சி 3 நாள்களுக்கு இடம்பெறும்.

நச்சுத்தன்மையற்ற தேசிய சந்தை மற்றும் கண்காட்சியின் நோக்கம் நச்சுத் தன்மையற்ற நாட்டையும் பேண்தகு அபிவிருத்தி யுகத்தையும் ஏற்படுத்துவதாகும்.

விவசாய உபகரணங்கள், உற்பத்திகள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான கண்காட்சி கூடங்கள், மருத்துவ சிகிச்சை முகாம்கள், புத்தகக் கண்காட்சி, சிறப்பு துறைசார் உரைகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் கண்காட்சியில் இடம்பெறுகின்றன.

கண்காட்சியை திறந்த வைத்தஅரச தலைவர் அதனை பார்வையிட்டதுடன், பணிக்குழாமினருடனும் சுமூகமாக கலந்துரையாடினார்.

ஆரோக்கியமான சமூகம் நச்சுத்தன்மையற்ற நாட்டை கட்டியெழுப்புவதற்கான உறுதிமொழி பிரகடனமும் இதன்போது இடம்பெற்றன.

சங்கைக்குரிய அத்துரலியே ரத்தன தேரர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (க)

# கமெராவை திருடிய இந்தியப் பெண் கைது

பதுளை,ஏப். 1

உல்லாச பிரயாணியாக வந்திருந்த சீன இளம்பெண்ணொருவரின் பெறுமதியான டிஜிட்டல் கமராவைத் திருடிய, உல்லாச பிரயாணியான இந்திய இளம் பெண், எல்ல பொலிஸாரினால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

சீனா நாட்டிலிருந்து இந்தியாவுக்கு வந்த சீன இளம்பெண், இந்தியாவின் பிரஜையான இளம்பெண்ணொருவருடன் நட்புறவாகி, இருவரும் இலங்கைக்கு உல்லாச பிரயாணிகளாக வந்து, பதுளைப்பகுதியின் எல்ல பிரதேசத்தின் உல்லாச விடுதியொன்றில் தங்கியிருந்தனர்.

அந்த வேளையில், சீன இளம்பெண்ணின் உடைப்பையிலிருந்த பெறுமதிமிக்க டிஜிட்டல் கமெரா காணாமல் போனது குறித்து, அவர் எல்ல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

முறைப்பாட்டு விசாரணையை மேற்கொண்ட எல்ல பொலிஸார், சீன இளம்பெண்ணின் நண்பியான இந்திய இளம்பெண்ணைக் கைது செய்து, காணாமல் போனதாகக் திருடப்பட்ட டிஜிட்டல் கமராவையும் மீட்டனர்.

கைது செய்யப்பட்ட இந்திய இளம் பெண்ணை, பண்டாரவளை மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக, எல்ல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.கே. அலகியவன்ன தெரிவித்தார்.

மீட்கப்பட்ட கமெரா தன்னுடையதென்று, சீன இளம்பெண் பொலிஸாரிடம் ஒப்புக்கொண்டுள்ளார்.

இந்தக் கமெராவின் பெறுமதி 3 இலட்சம் ரூபாவென்று பொலிஸ் முறைப்பாட்டில்குறிப்பிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

# போதை மாத்திரைகளுடன் புத்தளத்தில் ஒருவர் கைது

## மாணவர்கள், இளைஞர்களே இலக்கு என்கின்றனர் பொலிஸார்

யாழ்ப்பாணம், ஏப். 1

பத்தளம், தில்லையடிப் பகுதியில் ஒரு தொகை போதை மாத்திரைகளுடன் சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் தில்லையடி பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய நபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில், மேற்கொண்ட சிறப்புச் சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரின் வீட்டிலிருந்து, 660 கார்ட்டில் அடைக்கப்பட்ட 6 ஆயிரத்து 600 ரெமடோல் எனப்படும் போதை மாத்திரைகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பிலிருந்து எடுத்துச் சென்று, இளைஞர்கள், பாடசாலை மாணவர்கள், முச்சக்கர வண்டி சாரதிகள் உள்ளிட்டோரை இலக்கு வைத்து போதை மாத்திரைகளை சந்தேகநபர் விற்பனை செய்து வந்துள்ளார் என மேலதிக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பான விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளை அடுத்து சந்தேந நபர் புத்தளம் நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது. (க-21)

# பிரபல பாடசாலைகள் தொடர்பில் மாற்றம் ஏற்பட வேண்டியுள்ளது

## அரச தலைவர் தெரிவிப்பு

கொழும்பு,ஏப். 1

நாட்டின் அனைத்துப் பிள்ளைகளும் சம கல்வி உரிமைகளை பெற்றுக்கொள்ள பிரபல பாடசாலைகள் என்ற நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படவேண்டிய காலம் உருவாகியுள்ளது என அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நகர்ப்புற பாடசாலைகளுக்கு மாத்திரம் வளங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டதனால் ஏற்பட்டுள்ள பிரபல பாடசாலைகள் என்ற நிலைப்பாட்டில் மாற்றத்தை கொண்டு வர வேண்டிய காலம் தற்போது உருவாகியுள்ளதாக அரசதலைவர் மைத்ரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாட்டில் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் பேதமின்றி வளங்களை பெற்றுக் கொடுத்து அனைத்து பிள்ளைகளுக்கும் சமமான கல்வி உரிமையை வழங்குவதற்காகவே 'அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' தேசிய நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது என்று அரச தலைவர் தெரிவித்தார். (க)

### நிதி கிடைத்தால்
# 400ஏக்கர் காணிகளை விடுமாம் இராணுவம்

யாழ்ப்பாணம், ஏப். 1

நிதி கிடைத்தால் வலி. வடக்கில் 400 ஏக்கர் காணிகளை விடுவதற்கு இராணுவம் தயார் நிலையில் உள்ளதாக தனக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் ஆளுநரின் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜெனிவா மனித உரிமைகள் அமர்வுக்கு பின்னராக பாதுகாப்பு படையினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகளின் விடுவிப்பு தொடர்பிலான முன்னேற்ற நடவடிக்க்கைகளை மேற்கொள்ளும் பொருட்டும் ஏற்கனவே பாதுகாப்பு படையினரால் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்ட காணிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் மீள்குடியேற்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் அந்தப் பிரதேச மக்களின் தேவைப்பாடுகள் குறித்தும் ஆராயும் நோக்கில் ஆளுநர் வலி. வடக்குப் பகுதிக்கு நேற்றுச் சென்றார்.

வலி. வடக்கின் உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள மயிலிட்டி காணிக்கை மாதா ஆலயம் மற்றும் அதனுடன் இணைந்ததாக காணப்படும் பாடசாலை மயிலிட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலை ஆகியவற்றின் தற்போதைய நிலமைகள் தொடர்பிலும் நேரில் ஆராய்ந்த ஆளுநர், அவற்றின் விடுவிப்பு தொடர்பிலும் உயர் பாதுகாப்பு வலயத்தின் இன்னும் பாதுகாப்பு படையினர் வசமுள்ள பொதுமக்களின் தனியார்கள் காணிகளின் விடுவிப்பு தொடர்பிலும் பாதுகாப்பு தரப்பினரிடம் கேட்டறிந்து கொண்டார்.

இதேவேளை வலி.வடக்கில் பாதுகாப்பு படையினர் வசமுள்ள காணிகளில் சுமார் 400 ஏக்கர் அளவிலான பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக குறிப்பிட்ட பாதுகாப்பு தரப்பினர் இதற்கு தேவையான நிதி கிடைக்கப்பெற்றதும் இவ்விடங்களை பொதுமக்களுக்கு கையளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் ஆளுநரிடம் கூறியுள்ளனர்.

பொதுமக்களிடம் கையளிக்கப்பட்ட மயிலிட்டிக் கரை வடக்கு பிரதேசத்துக்கும் சென்ற ஆளுநர் அவர்கள் அங்குள்ள தற்போதைய நிலமைகளை ஆராய்ந்ததுடன் வலி.வடக்கு மீள்குடியேற்ற சங்க தலைவர் குணபாலசிங்கம் மற்றும் கிராமிய அபிவிருத்திச் சங்க தலைவர் உருத்திரமூர்த்தி ஆகியோர் உள்ளிட்ட பொதுமக்களுடனும் கலந்துரையாடியதுடன் மீளக்குடியேறுபவர்கள் முகம்கொடுத்துவரும் பிரச்சினைகள் மற்றும் அவர்களின் தேவைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

இதனைத் தொடர்ந்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் அடிக்கல் நடப்பட்டு அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டுவரும் மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்துக்குப் பயணம் மேற்கொண்ட ஆளுநர் துறைமுகத்தின் அபிவிருத்திப் பணிகளையும் பார்வையிட்டார். அண்மையில் விடுவிக்கப்பட்ட பலாலி ஆரோக்கிய மாதா ஆலையத்துக்கும் பயணம் மேற்கொண்ட அவர் அங்கு மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்திப் பணிகள் குறித்தும் ஆராய்ந்ததுடன் பொதுமக்களுடனும் கலந்துரையாடினார். (ஓ.5.7)

### தரம் 5
# புலமைப் பரிசில் பரீட்சையை கைவிட்டால் மாற்றுத் திட்டம் தேவை
## மகிந்த ராஜபக்ச கோரிக்கை



கொழும்பு, ஏப். 1

அரசு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையை கைவிடுவதாக இருந்தால் கிராமங்களில் இருக்கும் திறமையான மாணவர்கள் பிரபல பாடசாலைகளில் உள்வாங்க மாற்று வேலைத்திட்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

5 ஆம் ஆண்டில் இடம்பெற்று வரும் புலமைப்பரிசில் பரீட்சையை நிறுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. இந்தப் பரீட்சையை கைவிட வேண்டும் என்று அரச தலைவரும் தெரிவித்திருந்தார். அதற்கான பல்வேறு காரணங்களையும் குறிப்பிட்டிருந்தார். புலமைப்பரிசில் பரீட்சை மூலம் மாணவர்களுக்கு தேவையற்ற அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. பெற்றோர்களும் பிள்ளைகளுக்கு பல்வேறு அழுத்தங்களை கொடுக்கின்றனர்.

என்றாலும் புலமைப்பரிசில் பரீட்சை மூலமாக திறமையான கிராமப்புற மாணவர்களுக்குச் பிரபல பாடசாலைகளுக்குச் செல்லும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. புலமைப்பரிசில் பரீட்சையை இல்லாமல் செய்வதாக இருந்தால் கிராமங்களில் இருக்கும் திறமையான மாணவர்கள் பிரபல பாடசாலைகளுக்கு செல்லும் வேலைத்திட்டம் ஒன்றை மேற்கொள்ளவேண்டும். இல்லாவிட்டல் கிராமப்புற மாணவர்கள் எப்போதும் கிராமத்திலேயே இருக்கவேண்டிய நிலை ஏற்படும் - என்றார். (ஓ,5)

# நீர்வைக் கந்தன் இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப். 1

பண்டிதர் நீ.சி.முருகேசுவால் நீர்வை கந்தனின் பெருமையை நினைவுகூர்ந்து இயற்றப்பட்ட பாடல்களின் இறுவட்டு வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும். ஆலய பரிபாலன சபையின் தலைவர் த.சோதிலிங்கம் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் வரவேற்புரை, ஆசியுரை, வாழ்த்துரை, வெளியீட்டுரை, கருத்துரைகள், கௌரவிப்பு என்பன இடம்பெறும். (ஓ.5.17)

# மானிப்பாய் வாள்வெட்டு சந்தேகநபர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஏப். 1

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நவாலி கொத்துக்கட்டி வீதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் 23 வயதுடைய இளைஞனை உடுவில் பகுதியில் வைத்துக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். கொத்துக்கட்டி வீதியில் உள்ள வீட்டின் மீது நேற்றுமுன்தினம் இரவு 10.15 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டது. இரண்டு உந்துருளிகளில் முகங்களை மூடிக்கட்டியவாறு நுழைந்த 5 பேர் கும்பல் இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது. வீட்டிலிருந்த தொலைக்காட்சி உள்ளிட்ட பொருள்களையும் சேதப்படுத்தியுள்ளது. வீட்டிலிருந்த தந்தையையும், மகனையும் வாளால் வெட்டிக் காயப்படுத்தி விட்டுச் சென்றுள்ளனர்.

காயமடைந்த 46 வயதான தந்தையும், 21 வயது மகனும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், சந்தேக நபரை நேற்று அவரது வீட்டில் வைத்துக் கைது செய்தனர். (ஓ.5.26)

# தந்தை செல்வநாயகத்தின் 121ஆவது பிறந்ததின நிகழ்வுகள்

யாழ்பாணம் ஏப்பிரல் 01

தந்தை செல்வா என அழைக்கப்படும் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகத்தின் 121ஆவது பிறந்ததின நிகழ்வுகள் வடக்கில் பல இடங்களிலும் நேற்று நடைபெற்றன.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணப் பொது நூலகத்துக்கு அருகிலுள்ள அவரது நினைவுத் தூபி அருகே முதன்மை நிகழ்வு நடைபெற்றது. அவரது சிலைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அவ்வாறே மாநகரசபை முதல்வர் இ. ஆனோல்ட், தென்னிந்திய திருச்சபை முன்னாள் பேராயர் கலாநிதி சு.ஜெபனேசன் உள்ளிட்டவர்களும் மலர் மாலை அணிவித்தனர். தந்தை செல்வாவின் சமாதிக்கு மலர்கள் தூவப்பட்டு அதன் பின்னர் தென்னிந்திய திருச்சபை முன்னாள் பேராயரும் தந்தை செல்வா நற்பணி மண்றத் தலைவருமான சு.ஜெபநேசன் தந்தை செல்வாவின் கனவுகள் பற்றி சிற்றுரை ஆற்றினார்.

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் தவிசாளர் சுகிர்தன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பரஞ்சோதி, தமிழ் அரசுக்கட்சியின் முக்கியஸ்தர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள் மற்றும் தமிழ் அரசு கட்சி உறுப்பினர்கள் எனப் பலா நிகழ்வில் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்திலும் தந்தை செல்வாவின் பிறந்ததின நிகழ்வு நடைபெற்றது என்று அந்தக் கட்சியினர் தெரிவித்தனர்.

**வவுனியா**

வவுனியாவில், முதன்மை மணிக்கூட்டுப் கோபுரத்துக்கு அருகிலுள்ள தந்தை செல்வா நினைவுத்தூபியில் செல்வாவின் பிறந்ததின நிகழ்வு, தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா மாவட்டத் தலைவரும் வடக்கு மாகாண சபை முன்னாள் சுகாதார அமைச்சருமான ப.சத்தியலிங்கம் தலைமையில் நடைபெற்றது.



கட்சியின் மாவட்ட உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர். அன்னாரது



நினைவுத் தூபிக்கு மலர் மாலை அணிவித்து நினைவஞ்சலி செலுத்தினர். நிகழ்வில் நகரசபை உறுப்பினர்களான சேனாதிராஜா, சுமந்திரன், பரதலிங்கம், வவுனியா தெற்கு பிரதேசசபை உறுப்பினர் உத்திரியநாதன் உட்பட கட்சியின் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

**மன்னார்**

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மன்னார் கிளையின் ஏற்பாட்டில், மன்னார் நகர சபை உறுப்பினர் திருச்செல்வம் சந்திரன் தலைமையில் மன்னார் பஸார் பகுதியில் அமைந்துள்ள தந்தை செல்வாவின் சிலைக்கு முன்பாக முற்பகல் நிகழ்வு நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், மன்னார் நகர சபையின் தலைவர் ஞா.அன்ரனி டேவிட்சன், நானாட்டான் பிரதேச தலையின் தலைவர் திருச்செல்வம் பரஞ்சோதி,மன்னார் நகர சபையின் உப தலைவர் எஸ்.எஸ். ஜாட்சன்,வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான சட்டத்தரணி எஸ்.பிரிமூஸ் சிறாய்வா,சட்டத்தரணி பா.டெனிஸ்வரன் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (கு-110,56,ரி)

# நாட்டில் மழை இல்லாமல் போனதற்கு என் மீது குற்றம் சுமத்துகின்றார்கள்
## கவலைப்படுகிறார் ரிசாட்

மட்டக்களப்பு, ஏப். 1

நாட்டில் மழை இல்லாததற்கு வில்பத்து காட்டை நான் அழித்தமையே காரணம் என்று சில இனவாதிகள் கூறுவது கவலைக்குரிய விடயம் என்று கைத்தொழில் வணிக, நீண்ட கால இடம்பெயர்ந்தோர் மீள்குடியேற்ற, கூட்டுறவு திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவருமான ரிசாட் பதியுதீன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஓட்டமாவடி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மாஞ்சோலை அல் ஹிரா வித்தியாலத்தில் இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் வெப்பம் அதிகரித்தமைக்கு காரணம் வில்பத்து காட்டை நான் அழித்தமையே என்று கூறுகின்றனர். அந்த இடத்தில் 1990ஆம் ஆண்டுக்கு முன் முஸ்லிம் மக்கள் வாழ்ந்தனர். அவர்களது இடத்தில் மீள குடியேற்றம் இடம்பெறும் போதுதான் காடுகளை அழிக்கின்றோம் என்று எனக்கெதிரான பொய் பரப்புரை முன்னெடுக்கப்படுகின்றது.

நமக்கு முன்னால் இருக்கின்ற சவால்கள், நாங்கள் செய்யாத தவறை செய்ததாக திணிக்கின்றார்கள். எங்களை அநியாயமாக வம்புக்கு இழுக்கின்றார்கள். எங்கள் மார்க்கம், சொத்துக்கள், எங்கள் மீதும், எதிர்காலத்தின் மீதும் கை வைத்து எங்களைச் சீண்டுகின்ற அநாகரிகமான செயல் தொடர்ந்து திட்டமிட்டு நடந்து கொண்டிருக்கின்றது - என்றார். (ஓ,5)

# வடக்கு நோக்கிச் சென்ற இரு பேருந்துகள் விபத்து

கொழும்பு, ஏப். 1
கொழும்பிலிருந்து வடக்கு நோக்கிப் பயணித்த இரு பேருந்துகள் விபத்துக்குள்ளானதில் 12 பேர் காயமடைந்துள்ளனர்.
சிலாபம் - புத்தளம் வீதி பங்கதெனிய சந்தியில் இந்த விபத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நிகழ்ந்துள்ளது.
விபத்தில் காயமடைந்தவர்கள் சிலாபம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
கொழும்பிலிருந்து வவுனியா நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்தும் கொழும்பிலிருந்து மன்னார் நோக்கி பயணித்த தனியார் பேருந்து ஒன்றும் மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து பங்கதெனிய சந்தியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் தனியார் பேருந்து பின்புறமாக மோதுண்டதாகக் கூறப்படுகின்றது. (ஓ.5)

## இராணுவத்தை...

'இந்தியாவின் முன்னாள் தலைமை நீதியரசர் பகவதி தலைமையில், உடலகம ஆணைக் குழுவின் விசாரணைகளைக் கண்காணிப்பதற்கு அமைத்த முன்னணி நபர்களைக் கொண்ட பன்னாட்டு சுயாதீனக் குழுவை உதாரணமாகக் கொண்டு கலப்பு நீதிமன்றத்தை உருவாக்கலாம்' என்று முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கடந்த வெள்ளிக்கிழமை அறிக்கை வெளியிட்டிருந்தார். கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் இதற்குப் பதிலடி கொடுக்கும் விதத்தில், இலங்கை அரசு கூறுவதைப் போன்றே முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனும் கூறுகின்றார். அவர் அரசின் ஊதுகுழலாகச் செயற்படுகின்றாரா? என்று கேள்வி எழுப்பியிருந்தார்.
இந்த நிலையில் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரின் அலுவலகத்தால் நேற்று வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்புட்டுள்ளதாவது:

**அரசின் வாதம் தவறு**

இலங்கையில் வெளிநாட்டு நீதிபதிகளை கொண்ட கலப்பு நீதிமன்றம் ஒன்றை சட்டரீதியாக அமைக்க முடியாது என்ற அரசின் வாதம் தவறானது என்பதை சுட்டிக்காட்டுவதற்காகவே நீதியரசர் பகவதி தலைமையில் அமைக்கப்பட்ட பன்னாட்டுச் சுயாதீன குழுவை உதாரணமாக சுட்டிக்காட்டியிருந்தேன்.
அறிக்கையின் எந்த இடத்திலும் பகவதி தலைமையிலான பன்னாட்டுச் சுயாதீன குழுவை போன்ற ஒரு குழுவை அமைக்க வேண்டும் என்று குறிப்பிடவில்லை. இலங்கையில் உள்நாட்டில் அமைக்கப்பட்ட உள்ளக ஆணைக்குழுவான உடலகம விசாரணை ஆணைக்குழுவை மேற்பார்வை செய்வதற்காக அமைக்கப்பட்டதே பகவதி தலைமையிலான பன்னாட்டுச் சுயாதீன குழு என்றும் பன்னாட்டுத் தராதரங்கள் மற்றும் விதி முறைகளுக்கு அமைவாக இந்த உள்ளக ஆணைக்குழு செயற்படவில்லை என்று பகவதி தலைமையிலான குழு தன்னைத் தானே கலைத்தமை இலங்கையில் ஏன் பன்னாட்டு விசாரணை அவசியம் என்பதையும் எடுத்துக் காட்டுகின்றது என்றும் தெளிவாக எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். பகவதி ஆணைக்குழுவின் உதாரணம் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய பன்னாட்டு விசாரணை பொறிமுறையையே எடுத்துக்காட்டுகிறது.

**நிலைப்பாட்டில் மாற்றமில்லை**

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்களை விசாரணை செய்வதற்கு பன்னாட்டு விசாரணை பொறிமுறை ஒன்றே தீர்வு என்பதில் நான் உறுதியாகவும் தெளிவாகவும் இருக்கிறேன். இதனை பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்தி அதற்கான பணிகளையும் ஆரம்பித்துள்ளேன்.
இலங்கையைப் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்லவேண்டும் என்று செப்ரெம்பர் 2018 இல் நான் முதலமைச்சராக இருந்தபோது வட மாகாண சபையில் தீர்மானத்தையும் நிறைவேற்றியுள்ளேன். இவ்வாண்டு மார்ச் மாதம் மனித உரிமைகள் சபை அமர்வுகளுக்கு முன்னதாக வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பேரணிகளிலும் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு இலங்கையைக் கொண்டு செல்ல வேண்டும் என்றே வலியுறுத்தப்பட்டன. நானும் இந்த அனைத்து ஆர்ப்பாட்டங்களிலும் கலந்துகொண்டேன். பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு இலங்கையைக் கொண்டு செல்ல வேண்டும் என்று நான் எனது அறிக்கைகளிலும் திரும்பத் திரும்ப வலியுறுத்தியுள்ளேன். அத்துடன் ஐ.நா. மனித உரிமைகள் சபை ஆணையாளருக்கு எழுதிய கடிதத்திலும் இதனை வலியுறுத்தியுள்ளேன்.
திடீரென்று சூனியத்தில் மூழ்கிக் கிடந்த ஒருவர் விடுபட்டு வந்தது போல் தான் இதுகாறும் கூறியதை மறந்து எம்மைக் குற்றம் சாட்டுகிறார் ஒருவர் என்றுள்ளது. (ஓ.5)

## இந்தியாவின்...

கொழும்பு ஆங்கில வாரஇதழுக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
எந்தவொரு தீர்வும் தெற்கில் இருந்தே வர வேண்டும். சட்டப்பூர்வமாக எங்களுக்கு என்ன தேவை என்று மட்டும் நாங்கள் கேட்கலாம். இந்திய இலங்கை உடன்பாட்டில், 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாக எங்களின் சார்பாக இந்தியா கையெழுத்திட்டது. இந்தியா எமது நெருங்கிய அயல் நாடு. இந்தியா நடுநிலையாளராக வந்தால் நாங்கள் மகிழ்ச்சியடைவோம்.
வடக்கு, கிழக்கு மக்களுக்கு தவறு செய்திருக்கிறோம் என்பதை தெற்கில் உணர்ந்து கொண்டு ஒரு தீர்வுக்கு வர வேண்டும். எங்களின் பிரச்சினைகளை புரிந்து கொள்ளும், நாம் ஏற்றுக் கொள்ளக் கூடிய இறுதி தீர்வை வழங்கக் கூடிய எவரையும் நாங்கள் ஆதரிப்போம்.
ஆனால், வெறும் சொற்களால் அளிக்கப்படும் வாக்குறுதிகளை ஏற்க முடியாது. ஒரு புரிந்துணர்வுக்கு வர மூன்றாவது தரப்பு எமக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும் - என்றார். (ஓ.5)

## சிறுவன்...

மணிக்கு குடும்பமாக தேவாலயத்துக்குச் சென்றோம். 6.45 மணிக்கு வழிபாடுகள் நிறைவு செய்து வீடு திரும்பினோம். தேவாலயப் பூக்கன்றுகளுக்கு தண்ணீர் விட்டு, தாமதமாக வீடு வருவதாக மகன் தெரிவித்தான். அவனை ஆலயத்தில் விட்டு வீடு திரும்பினோம்.
சிறிது நேரத்தில் அவன் வீடு வரவில்லை. தேவாலயத்துக்குச்சென்றோம். அங்கு அவன் இல்லை. சிலவேளைகளில் தேவாலயத்திலிருந்து அவனது அம்மம்மா வீட்டுக்கு படம் பார்க்கச் செல்லுவான். அங்கே சென்று பார்த்தோம். அவனது கை மற்றும் கால் கட்டப்பட்டு கழுத்தைச் சுற்றியும் துணியால் இறுக்கமாகக் கட்டப்பட்டிருந்தது. வாய்க்குள்ளும் துணி திணைக்கப்பட்டிருந்தது. மகன் சுயநினைவின்றி இருந்தான். உடனடியாக 1990 நோயாளர் காவு வண்டிச் சேவைக்கு அறிவிக்கப்பட்டு, கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்பித்தோம் - என்றார்.
பாதிக்கப்பட்ட சிறுவன் தெரிவித்ததாவது:
தேவாலயத்திலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். அம்மம்மா வீட்டுக்குள் இனந்தெரியாதோர் செல்வதை அவதானித்தேன். பின்தொடர்ந்து சென்றேன். எனக்குப் பின்னால் வந்த யாரோ, எனது மூக்கை துணி வைத்துப் பொத்தினார். அதன் பின்னர் எனக்கு நடந்தது தெரியாது - என்றான்.
சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதாகவும், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுக்கவில்லை என்றும் சிறுவனது தாயார் தெரிவித்தார். (ஓ.5,160)

## தடம்புரண்டது..

போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் ஒருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
விசுவமடுவைச் சேர்ந்த சிவானுப்பிள்ளை ரஜீவன் (வயது-24) என்பவரே உயிரிழந்துள்ளதுடன், அவருடன் பயணித்த விசுவமடுவைச் சேர்ந்த செல்வராசா சுதாகரன் (வயது26), சரசாலையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தங்கராசா (வயது-60), கந்தையா (வயது-67) ஆகியோர் காயமடைந்துள்ளனர்.
இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 5.30 மணிக்கு மட்டுவில் புத்தூர் சாலையில் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலுக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.
சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்ததாவது:
கிடுகி ஏற்றிக் கொண்டு இருசக்கர உழவு இயந்திரம் சரசாலையிலிருந்து அச்சுவேலி நோக்கிச் சென்றுள்ளது. வன்னிப் பகுதியில் இருந்து மணல் ஏற்றிக் கொண்டு டிப்பர் வந்துள்ளது. மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் ஆலயத்துக்கு அருகில், டிப்பரின் முன்பக்க ரயர் வெடித்துள்ளது. இருசக்கர உழவு இயந்திரத்துடன் டிப்பர் மோதியதுடன், வயலுக்குள் தடம்புரண்டு வீழ்ந்துள்ளது. இந்தச் சம்பவத்தில் டிப்பர் சாரதி உயிரிழந்துள்ளார். (ஓ.5,9,131)

## கஞ்சா...

யாழ்ப்பாணத்தில், நேற்றுமுன்தினம் நள்ளிரவு 11.45 மணியளவில் புத்தூர் பகுதியில், யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பொறுப்பதிகாரி ஜெரோசன் தலைமையிலான குழுவினர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். இதன்போது வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இருவரிடமிருந்து 12 கிலோ 300 கிராம் கஞ்சாவையும், அச்சுவேலியைச் சேர்ந்த 33 வயதுடையவரிடமிருந்து ஒரு கிலோ 385 கிராம் கஞ்சாவையும் மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இவர்கள் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளனர்.

**ஹெரோய்ன்**

மல்லாகம் தொடருந்து நிலையத்தில் 400 ஹெரோய்னுடன் இருவரை நேற்றுமுன்தினம் மாலை கைது செய்துள்ளதாக காங்கேசன்துறை சிறப்பு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்தனர். அவர்கள் இருவரும் மல்லாகம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகின்றது.

**வவுனியா**

வவுனியா பண்டாரிக்குளம் விபுலானந்தா கல்லூரிக்கு அருகாமையில் வர்த்தக நிலையம்என்றபோர்வையில்கஞ்சாவியாபாரத்தில் ஈடுபட்டிருந்த ஒருவரைக் கைது செய்துள்ளதாக வன்னி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் செயற்படும் சிறப்புப் போதை ஒழிப்பு பொலிஸார் தெரிவித்தனர். வர்த்தக நிலையத்திலிருந்து 15 கிராம் 500 மில்லி கிராம் கஞ்சாவைக் கைப்பற்றியுள்ளதாகவும் அதனை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 31 வயதாக ஒருவரைக் கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (ஓ.5,26,110)

## பாதிக்கப்பட்டோர்...

உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.
விழுதுகள் ஆற்றல் மேம்பாட்டு மையத்தால் யாழ்ப்பாணத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட நிலைமாறுகால நீதியில் எங்கள் குரல் என்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:

**மிகப் பெரிய சவால்**

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் பிராந்தியக் கிளை மன்னாரில் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இதுவரை அந்த அலுவலகம் ஏன் திறக்கப்படவில்லை. அந்த அலுவலகம் மன்னாரில் திறக்கப்பட்டால் தீக்குளிப்போம் என்று தாய்மார் சிலர் எச்சரித்தனர்.
இதுதான் தற்போது எமக்குள்ள சவால். நிலைமாறு கால நீதிச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த அரசுக்கு மனமில்லை. பல்வேறு அழுத்தங்கள் காரணமாக சிலவற்றை ஆமை வேகத்தில் செயற்படுத்துகின்றது. அந்த வேகம் போதாது என்பதன் காரணமாக நம்பிக்கையை இழப்பவர்கள் இப்போது அதை வேண்டாம் என்று கூறுவதும் எங்களுக்கு இருக்கக் கூடிய மற்றைய சவால்.
நிலைமாறு கால நீதியிலே இந்த இரண்டு சவால்களும் எப்போதும் இருந்துகொண்டு தான் இருக்கப்போகிறது. இந்தமுறை ஜெனிவாவில் சில தமிழ்த் தரப்புக்கள் நிலைமாறு கால் நீதியே வேண்டாம் என்றும் கூறுகின்றார்கள். வேண்டாம் என்றால் அரசுக்கு நல்ல சாட்டாகப்போய்விடும். இழுத்தடித்து இழுத்தடித்து இவற்றை எல்லாம் செய்கின்றபோது யாருக்காக இது செய்யப்படுகிறதோ அவர்களே இதை வேண்டாம் என்று கூறிவிட்டால் அது அரசுக்கு நல்லதொரு சாட்டாகப்போய்விடும். வேண்டாம் என்று கூறுபவர்களை எந்தவிதத்திலும் நான் குறைவாகப்பேசவில்லை. ஆனால் இது ஒரு சவால்.

**வலி தெரியும்**

எங்களுடைய பிள்ளைகளை சிலமணிநேரம் காணவில்லை என்றால் என்ன செய்கிறோம். 10 வருடங்களாக பிள்ளையைத் தேடும் தாய்மார்கள் இன்னும் என்ன செய்வார்கள் என்பது. அந்த வலி எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதும் எங்களுக்குத் தெரியும். உலகிலே காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான பிரச்சினைகள் ஏற்பட்ட நாடுகளில் இப்படியான காலதாமதம் இருந்திருக்கிறது. பதில் கிடைத்ததாக இல்லை. ஆனாலும் உண்மை கண்டறியப்படவேண்டும். விசாரணைகள் நடத்தப்படவேண்டும்.

**சான்றிதழை பெறவேண்டும்**


அரசால் வழங்கப்படும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சான்றிதழை உறவுகள் பெற்றுக்கொள்ள வேண்டும். அதுதான் அரசை பொறுப்புக் கூறவைப்பதற்கான சான்று. காணாமல் ஆக்கப்பட்டுள்ளார் என்று அரசே சான்றிதழ் தரும்போது, என்ன நடந்தது என்பதையும் அரசே கூறவேண்டும். அரசியல் இலாபங்களுக்காக அதைப் பெற்றுக் கொள்ள வேண்டாம் என்று கூறுபவர்களுடைய பேச்சைக் கேளாது சான்றிதழைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**உண்மை உறைக்கும்**

மன்னார் புதைகுழியில் இருந்து எடுக்கப்பட்ட எலும்புக் கூட்டின் பாகத்தை பன்னாட்டுப் பரிசோதனைகளில் முதல் நிலையில் உள்ள புளோரிடோ என்ற இடத்துக்கு அனுப்பினார்கள். எமக்கு கிடைத்திருக்கும் முடிவு அது பழமைவாய்ந்தது என்பதே. நாங்கள் பரிசோதனைக்கு பிஸ்கெட் பக்கெட்டை அனுப்பவில்லை. அந்தப் பரிசோதனையின் முடிவு உண்மையானது அல்ல என்றால் நாங்கள் இன்னுமொரு பரிசோதனைக்கும் கேட்டிருக்கிறோம். அதிலும் இவ்வாறான ஒரு முடிவு வந்தால் நாங்கள் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். உண்மை எப்போதும் கசக்கும். நாங்கள் எதிர்பார்ப்பது கிடைக்கவில்லை என்பதற்காக அது உண்மையில்லை என்றாகிவிடாது.
காணாமல் ஆக்கப்பட்டவர்களுடய விடயத்தில் பன்னாட்டு விசாரணையை நாங்கள் கோருவதும் அதற்குத்தான். முழுக்கமுழுக்க பன்னாட்டு விசாரணை இருந்தால் அது சிறந்த ஒரு விசாரணையாக இருக்கும். அப்போது குற்றமிழைத்த யாரும் தப்பிக்க முடியாது. இராணுவத்தினர் குற்றமிழைத்த அதே வேளை முற்பட்ட காலங்களில் என்ன நடந்தது என்பதும் எங்களுக்குத் தெரியும். யார் யாரெல்லாம் குற்றமிழைத்தார்களோ அவர்கள் அனைவரும் பொறுப்புக்கூறவேண்டும் - என்றார். (ஓ.5,21,ரி)

## எங்கள்...

டைய பெயர் விவரங்களையும் எமது குடும்ப அட்டையில் இணைக்கவேண்டும். இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
விழுதுகள் ஆற்றல் மேம்பாட்டு மையத்தால் யாழ்ப்பாணத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட நிலைமாறுகால நீதியில் 'எங்கள் குரல்' என்ற நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு, அங்கு வருகை தந்த மக்கள் பிரதிநிதிகளிடம் கேள்விகள் கேட்கவும், விளக்கங்களைப் பெறவும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.
பெண் ஒருவர் மேற்படி கோரிக்கையை முன்வைத்தார். எமது உறவுகள் உயிருடனேயே உள்ளனர். ஆனால் அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். எமது குடும்ப அட்டையில் அங்கத்தர்கள் விவரத்தில் அவர்களுடைய பெயர்கள் உள்வாங்கப்படவேண்டும். அதற்கான நடவடிக்கையை எடுப்பீர்களா என்று அந்தப் பெண் கேட்டார்.
நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அது அனைத்து உறவுகளின் கோரிக்கையாக இருக்கிறது. அதை நிறைவேற்ற வேண்டும். கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய பெயர்களும் குடும்ப அட்டையில் பதியப்படவேண்டும். அதற்கான நடவடிக்கையை எடுப்போம் - என்றார். (ஓ.5,21)



# இந்தியாவால் விண்வெளியில் குப்பைகள்

புதுடெல்லி, ஏப். 1

இந்தியாவின் 'ஏ சாட்' ஏவுகணை தாக்கி அழித்த செயற்கைக்கோளின் பாகங்கள் விண்வெளியில் மிதக்கின்றன என்றும் இவற்றால் பன்னாட்டு விண்வெளி நிலையத்துக்கு பாதிப்பில்லை என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

விண்வெளியில் இந்திய செயற்கைக்கோளைப் பாதுகாக்கும் நோக்கில் மற்ற செயற்கைக்கோள்களைத் தாக்கி அழிக்கும் 'ஏசாட்' ஏவுகணையை கடந்த சில நாள்களுக்கு முன் பாதுகாப்பு ஆய்வு மற்றும் மேம்பாட்டுத் துறை வெற்றிகரமாக சோதித்தது.

3 நிமிடங்களில் பூமியின் சுற்றுவட்டப்பாதையில் இருந்த பயனில்லாத செயற்கைக்கோள் ஒன்றை ஏவுகணை தாக்கி அழித்தது. அமெரிக்கா, ரஷ்யா, சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியா இந்தச் சாதனையை நிகழ்த்தியிருக்கிறது. இது முழுக்க முழுக்க இந்தியத் தொழில்நுட்பத்தில் நிகழ்த்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் இந்தியா அழித்த செயற்கைக்கோளின் பாகங்கள் விண்வெளியில் மிதப்பதாக அமெரிக்கா கூறியுள்ளது. (ம)


லிபியாவில்

# 117 அகதிகளை மீட்ட கடற்படை

*திரிபோலி, ஏப். 1*

*லிபியாவின் மேற்குக் கடற்பகுதியில் இறப்பர் படகில் ஆபத்தான வகையில் பயணம் மேற்கொண்ட 117 சட்டவிரோத அகதிகளை கடலோர பாதுகாப்பு படையினர் மீட்டனர்.*





லிபியாவில் கடாபியின் ஆட்சி வீழ்த்தப்பட்ட பிறகு அங்கு அதிகாரப் போர் உச்சக் கட்டத்தை எட்டியுள்ளது. பதவிவெறி பிடித்த போராளிக் குழுக்களின் மோதலில் பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர். இவர்களிடம் இருந்து தப்பித்து உயிரைப் பாதுகாத்து கொள்ள லிபியாவில் வறுமை நிலையில் வாடும் மக்களில் பலர் புகலிடம் தேடி ஐரோப்பிய நாடுகளுக்கு செல்கின்றனர்.

இதேபோல் வன்முறை, உள்நாட்டுப் போர், வறுமை உள்ளிட்ட காரணங்களால் ஏனைய ஆபிரிக்க நாடுகளில் இருந்தும் அகதிகள் கடல் வழியாக ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்கு லிபியா ஒரு முக்கிய போக்குவரத்து வழியாக உள்ளது. லிபியாவில் இருந்து அவர்கள் மத்திய தரைக்கடல் வழியாக ஐரோப்பிய நாடுகளுக்கு, சட்டவிரோத ஆட்கடத்தல் கும்பலின் உதவியுடன் படகுகளில் செல்கின்றனர். இவ்வாறு செல்லும்போது பல சமயம் விபத்தில் பெரிய அளவில் உயிரிழப்பு ஏற்படுகிறது. இதனால் லிபிய கடற்பகுதிகளில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், லிபியாவின் அல் கோம்ஸ் கடற்பகுதியில் 117 அகதிகளுடன் சென்ற படகொன்று மீட்கப்பட்டுள்ளது. அந்தப் படகில் 84 ஆண்கள், 15 பெண்கள் மற்றும் 18 குழந்தைகள் இருந்துள்ளனர். (ம)

# பாலியல் தொல்லை பாதிரியார் கைது

வோஷிங்டன், ஏப். 1

அமெரிக்காவில் உள்ள தேவாலயத்தில் இந்திய பாதிரியார் ஒருவர் 13 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்தமை உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து அவருக்கு 6 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.



அமெரிக்காவில் தெற்கு டகோட்டா மாகாணத்தில் ரேபிட் நகர தேவாலயத்தில் பணிபுரிந்துவரும் ஜோன் பிரவீன் என்ற பாதிரியாருக்கே மேற்படி குற்றச்சாட்டுக்காக சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ம)



# திரேசா மேயின் தீர்மான வரைவு மூன்றாம் முறையாகத் தோல்வி!

ஐரோப்பிய யூனியலிருந்து இங்கிலாந்து வெளியேறுவது தொடர்பாக தலைமை அமைச்சர் தெரசா மே கொண்டு வந்த தீர்மானம் மூன்றாவது முறையாகவும் தோல்வி அடைந்தது.

ஐரோப்பிய யூனியனில் இருந்து இங்கிலாந்து வெளியேறுவது தொடர்பான பிரெக்ஸிட் தீர்மானத்தின் மீது 2016ஆம் ஆண்டு இங்கிலாந்தில் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. பெரும்பாலான மக்கள் பிரெக்ஸிட் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர். தீர்மானம் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, ஐரோப்பிய யூனியனில் இருந்து இங்கிலாந்து வெளியேறுவதற்கான நடவடிக்கைகளை மார்ச் மாதத்துக்குள் கொண்டுவர தீர்மானம் செய்யப்பட்டது. அதன்படி, ஐரோப்பிய யூனியனில் இருந்து இங்கிலாந்து வெளியேறுவதற்கான விதிமுறைகள், நிபந்தனைகளைக் கொண்ட பிரெக்ஸிட் ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. தலைமை அமைச்சர் தெரசா மே இதற்கான முயற்சிகளைத் தீவிரமாக மேற்கொண்டுவருகிறார். ஆனால் இந்தத் தீர்மானம் மூன்றாவது முறையாகவும் இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் தோல்வி அடைந்தது.

மே 22ஆம் திகதிக்குள் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து இங்கிலாந்து வெளியேற இருந்த நிலையில், தீரமானங்கள் தொடர்ந்து இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் தோல்வி அடைந்து வருவதால் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து ஐரோப்பிய ஒன்றியத்திடம் ஏப்ரல் 12ஆம் திகதிக்குள் பிரிட்டன் தெரிவிக்க வேண்டும். (ம)



*ஆபிரிக்க நாடான மொசாம்பிக்கை அண்மையில் இடாய் புயல் கொடூரமாகத் தாக்கியது. புயலின் பின்னரான தற்போதைய நிலையை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டுள்ளது. இடாய் புயலின் தாண்டவத்தை துல்லியமாக வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது அந்த ஒளிப்படம். (ம)*

# தொழிற்சாலையில் வாயுக் கசிவினால் 7 பேர் உயிரிழப்பு

## *சீனாவில் துயரம்*

சீனாவின் ஜியாங்சு மாகாணத்தில் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட வாயுக்கசிவால் 7 பேர் உயிரிழந்தனர்.

சீனாவின் ஜியாங்சு மாகாணத்தில் உலோக தொழிற்சாலை ஒன்று அமைந்துள்ளது. நேற்றுக் காலை தொழிற்சாலையின் வெளிப்புறத்தில் அமைந்துள்ள உடைந்த உலோகங்கள் சேமித்து வைக்கப்பட்டு இருந்த பகுதியில் வாயு கசிந்து வெடிவிபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் 7 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். ஜியாங்சு மாகாணத்தில் கடந்த சில நாட்களில் ஏற்பட்டுள்ள இரண்டாவது மிகப்பெரிய வெடிவிபத்து இது. (ம)



காசாவில் பெரும் பதற்றம்

# இஸ்ரேலின் தாக்குதலில் நான்கு பலஸ்தீனர் சாவு

ஜெருசலேம், ஏப். 1

**அமெரிக்காவுக்கும், இஸ்ரேலுக்கும் எதிர்ப்புத் தெரிவித்து காசாவில் பலஸ்தீனர்களால் நடத்தப்பட்ட போராட்டத்தில், இஸ்ரேல் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் நான்கு பலஸ்தீனர்கள் உயிரிழந்தனர்.**

பலஸ்தீனத்தின் ஒருபகுதியான ஜெருசலேமை இஸ்ரேல் கடந்த ஐந்து தசாப்தங்களாக ஆக்கிரமித்து வைத்துள்ளது. அமெரிக்க அதிபர் ட்ரம்ப் 2017ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அங்கீகரித்தார். அத்துடன் இஸ்ரேலுக்கான அமெரிக்கத் தூதரகத்தையும் ஜெருசலேமில் திறக்குமாறு உத்தரவிட்டு அதன்படி நடவடிக்கை எடுத்தார். அமெரிக்காவின் இந்த நடவடிக்கைகளை பலஸ்தீனர்கள் ஏற்றுக்கொள்வில்லை. இஸ்ரேல் பலஸ்தீன எல்லைப் பகுதிகளான காசா, மேற்குக் கரை, கிழக்கு ஜெருசலேம் என்பனவற்றில் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் நடத்தப்பட்டு வருகின்றன.



பலஸ்தீனர்களின் விடுதலையை வலியுறுத்திப் போராடிவரும் ஹமாஸ் அமைப்பு இஸ்ரேலுக்கு எதிரான போராட்டங்களை தீவிரப்படுத்தியிருந்தது. இந்தப் போராட்டம் எகிப்தின் தலைமையில் நடைபெற்ற பேச்சையடுத்து அண்மையில் நிறுத்தப்பட்டது.

ஜெருசலேம் இஸ்ரேலின் தலைநகராக அறிவிக்கப்பட்டு ஓர் ஆண்டு நிறைவடையும் நிலையில் அவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஹமாஸ் அமைப்பு காசா எல்லையில் பெரும் பேரணியையும் ஆர்ப்பாட்டத்தையும் ஒழுங்கமைத்தது.


இந்தப் பேரணி மீது இஸ்ரேலியப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டிலேயே 4 பலஸ்தீனர்கள் சாவடைந்தனர். சுமார் 300 பேர் காயமடைந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

## ரஷ்யாவில் நேற்று மிதமான நடுக்கம்

மொஸ்கோ, ஏப். 1

ரஷ்யாவின் கிழக்குப் பகுதியில் நேற்றுச் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. 6.3 ரிக்டர் அளவில் இந்த நிலநடுக்கம் பதிவானது என்று பன்னாட்டு புவியியல் ஆய்வு மையம் அறிக்கை விடுத்துள்ளது.

ரஷ்யாவில் சுமார் ஆயிரத்து 250 கிலோமீற்றர் நீளமுள்ள காம்சட்கா தீபகற்பம் அமைந்துள்ளது. பசிபிக் பெருங்கடல் மற்றும் ஒகோட்ஸ்க் கடல்களுக்கு இடையில் அமைந்துள்ள இந்தத் தீபகற்பம் சுமார் 2 லட்சத்து 70 ஆயிரம் சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பைக் கொண்டதாகும். இந்தப் பகுதியில் பூர்வகுடிகள் உள்பட சுமார் 3 லட்சம் மக்கள் வாழ்கின்றனர். இந்தத் தீபகற்பத்திலேயே மேற்படி நிலநடுக்கம் ஏற்பட்டது. (ம)





## பப்புவாவில் நிலநடுக்கம்

நியூபிரிட்டன், ஏப். 1

ஆஸ்திரேலியா அருகேயுள்ள தீவு நாடான பப்புவா நியூகினியா வில் நேற்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

ஆஸ்திரேலியா அருகே பசிபிக்கடலில் உள்ள தீவு நாடு பப்புவா நியூகினியா. நேற்று அங்கு திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் அங்குள்ள நியூபிரிட்டன் தீவு சிலமுறை குலுங்கியது. 6:1 ரிச்டர் அலகுகளாக இந்த நிலநடுக்கம் பதிவானது. நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதவிவரம், உயிரிழப்பு மற்றும் காயம் குறித்த தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

பப்புவா நியூகினியா பசிபிக் பிராந்தியத்தில் நிலநடுக்க அபாய பகுதியில் உள்ளது. இதனால் அங்கு அடிக்கடி நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)



## இன்றைய நாள்

**மேடம்:** குடும்பத்தினர் ஒத்துழைப்பர். அத்தியாவசிய செலவுக்கு கடன் வாங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப இலாபம் கிடைக்கும். உறவினர் வருகையால் மகிழ்ச்சி கூடும்.

**இடபம்:** வாழ்வில் புதிய அனுபவத்தைப் பெறுவீர்கள். எதிரி தொல்லை மறையும். தொழில், வியாபாரத்தில் எதிர்கால வளர்ச்சி குறித்து திட்டமிடுவீர்கள். தாராள லாபம் கிடைக்கும். நண்பர்களின் உதவி கிடைக்கப் பெறுவீர்கள்.

**மிதுனம்:** யாரிடமும் சொந்த விஷயம் பேசுவது கூடாது. தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சியும், ஆதாயமும் கிடைக்கும். உடல்நலனில் அக்கறை கொள்வீர்கள்.

**கடகம்:** புத்துணர்வுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்..

**சிம்மம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். பணிகளில் உற்சாகமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி இலக்கு திட்டமிட்டபடி நிறைவேறும்.

**கன்னி:** எதிர்பாராத வகையில் வருமானம் அதிகரிக்கும். தொழில், வியாபார ரீதியாக வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள். உணவு விஷயத்தில் கட்டுப்பாடு தேவை. மனைவியின் செயல்பாடு மகிழ்ச்சியளிக்கும்.

**துலாம்:** நேர்மை எண்ணத்துடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்வர். சீரான ஓய்வு உடல் நலம் பெற உதவும்.

**விருச்சிகம்:** பொது விஷயங்களில் அக்கறை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். விழா, விருந்து என சென்று மகிழ்வீர்கள்.

**தனுசு:** பேச்சில் இனிமை நிறைந்திருக்கும். உறவினர் அன்பு பாராட்டுவர். தொழில் வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பிள்ளைகள் விரும்பியதை வாங்கித் தருவீர்கள்.

**மகரம்:** பணியில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய உத்தி மூலம் ஆதாயம் அதிகரிக்கும். உறவினர் வருகையால் செலவு உண்டாகும்.

**கும்பம்:** எதிரிகளை இனம் கண்டு விலகுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான வருமானம் கிடைக்கும். சுபச் செலவு செய்து மகிழ்வீர்கள்.

**மீனம்:** நண்பர்களின் உதவியால் மனம் நெகிழ்வீர்கள். அன்றாட பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும்.

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 1

**நாமகள் கழக கால்பந்தாட்டம்**

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளை யாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தேவரையாளி யங் லயன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞான முருகன் விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து செம்மலை உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**செந்தமிழ் கழக கால்பந்தாட்டம்**

வற்றாப்பழை செந்தமிழ் விளையாட்டுக் கழகம் சித்திரை புத்தாண்டை முன்னிட்டு முல்லைத்தீவு கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வற்றாப்பழை செந்தமிழ் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் விண்ணொளி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வித்தியா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அண்ணா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உதயம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(ம-23)






# யாழ்ப்பாணம் லீக்கின் கால்பந்தாட்டம் ஆனைக்கோட்டை யூனியன் சம்பியன்

யாழ்ப்பாணம், ஏப். 1

யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் ஆனைக்கோட்டை யூனியன் அணி கிண்ணம் வென்றது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. இதில் ஆனைக்கோட்டை யூனியன் அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் அணி மோதியது.

முதல் பாதியின் முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது ஆனைக்கோட்டை யூனியன். சயந்தன், அபினேஸ், மதி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பதிவு செய்தனர். டயமன்ஸ் அணியினர் கோல் பதிவுசெய்வதற்கு ஒன்றன் பின்னர் ஒன்றாக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் யூனியனின் கோல் காப்பாளரால் அவை முறியடிக்கப்பட்டன.

இரண்டாம் பாதியில் பீமா, பியூலஸ் இருவரும் டயமன்ஸின் சார்பில் தலா ஒவ்வொரு கோலையும், தனுயன் யூனியனின் சார்பில் கோலொன்றையும் பதிவுசெய்தனர். இதையடுத்து 4:2 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது யூனியன். பரிசளிப்பு நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனும், சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர் சிறிசற்குணராசா வும், யாழ்ப்பாண்ம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தியும் கலந்து கொண்டனர். (ம-23)



## ஹாட்லிக் கல்லூரி சம்பியன்

யாழ்ப்பாணம், ஏப். 1

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் 20 வயதுப்பிரிவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது. பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியை எதிர்த்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணி நிர்ண யிக்கப்பட்ட 6 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரி அணி 3.4 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை மாத்திரம் இழந்து 65 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

(ம-422)

## கடற்கரைக் கரப்பந்தாட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் வடமாராட்சியில் சம்பியனானது!



யாழ்ப்பாணம், ஏப். 1

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கடற்கரைக் கரப்பந்தாட்டத்தில் சம்பியனாகியது உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி.

வல்வை உதயசூரியன் உல்லாசக் கடற்கரையில் நேற்றுமுன்தினம் இறுதியாட்டம் இடம்பெற்றது. இதில் தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயமும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியும் மோதின. மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. அபாரமாக விளையாடிய உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணி 21:15, 21:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதல் இரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றது. மூன்றாம் இடத்தை கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி பெற்றது. (ம-108)

# உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கால்பந்தில் வலயச் சம்பியன்!



யாழ்ப்பாணம், ஏப். 1

வடமராட்சி வலயப் பாசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத்தில் 16 வயதுப்பிரிவில் கிண்ணம் வென்றது உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி.

இறுதியாட்டம் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் கொற்றாவத்தை அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியும் பலப்பரீட்சை நடத்தின.

கோல்கள் இல்லாமல் முடிந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியிலும் அதேநிலைதான். சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை. 3:0 என்ற கோல் கணக்கில் கிண்ணம் வென்றது உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி. இதில் மூன்றாமிடத்தை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பெற்றது. (ம-108)

# கிண்ணம் வென்றது திருக்குமரன் அணி




யாழ்ப்பாணம், ஏப் .1
தீலிபன், லக்சியன் இருவரின் சிறப்பான கோல்களின் மூலம் புத்தூர் எவரெஸ்ட் அணியை வீழ்த்தி கிண்ணம் வென்றது உரும்பிராய் திருக்குமரன் அணி.

யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரின் பி பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டம் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இறுதியாட்டத்தில் புத்தூர் எவரெஸ்ட் அணியை எதிர்த்து உரும்பிராய் திருக்குமரன்; அணி மோதியது.

முதல் பாதியில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்தன.

இரண்டாம் பாதியில் ஆதிக்கம் செலுத்திய திருக்குமரன் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



## சுப்பர் ஓவரில் வைத்து கொல்கத்தாவை வென்றது டெல்லி கப்பிட்டல்ஸ் அணி

ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவுநடைபெற்ற ஆட்டத்தில், பரபரப்புக்கு மத்தியில் கொல்கத்தாவை வென்றது டெல்லி அணி.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணி 8 இலக்குகளை இழந்து 185 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ரசல் 62 ஓட்டங்களையும், டினேஸ் கார்த்திக் 50 ஓட்டங்களையும், லின் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குக் களமிறங்கிய டெல்லி அணியாலும் 185 ஓட்டங்களையே பெறமுடிந்தது. அதிகபட்சமாக பிருத்வி ஷா 99 ஓட்டங்களைக் குவித்தார். ஸ்ரேயாஸ் 43 ஓட்டங்களையும், தவான் 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் இரண்டு அணிகளும் 185 ஓட்டங்களைப் பெற்றமையால் சுப்பர் ஓவரில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி அணி 10 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா 7 ஓட்டங்களை மட்டும் பெற்று 3 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. (ம)





## இன்று




## மாமுனை கலைமகள் சம்பியனானது

யாழ்ப்பாணம், ஏப். 1
மருதங்கேணி பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவில் மொத்தப் புள்ளிகள் அடிப்படையில் மாமுனை கலைமகள் விளையாட்டுக் கழக அணி 112 புள்ளிகளைப் பெற்றுச் சம்பியனானது.

அம்பன் பிங்பொங் விளையாட்டுக்கழக அணி106 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், ஆழிய வளை அருணோதயா விளையாட்டுக் கழக அணி மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

இறுதி நாள் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட செயலக மேலதிக மாவட்டச் செயலர் (காணி) சு.முரளிதரனும், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் இ.குருபரனும், யாழ்ப்பாணமாவட்ட விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் கே.விஜிதரனும், யாழ்ப்பாண மாவட்ட கால்பந்தாட்ட பயிற்றுனர் பா.முகுந்தனும் கலந்துகொண்டனர். (ஒ.23)

## கொடுக்குளாய் சக்திவேல் கிண்ணத்தைச் சுவீகரித்தது

யாழ்ப்பாணம், ஏப்.1
மருதங்கேணி பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளை யாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்ட தொடரில் கொடுக்குளாய் சத்திவேல் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

வடமராட்சி பொது மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கொடுக்குளாய் சத்திவேல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மணற்காடு சென்.அன்ரனிஸ்விளையாட்டுக்கழக அணி மோதியது.

ஆட்டம்சமநிலையில்முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. 5:4 என்ற கோல் கணக்கில் கொடுக்குளாய் சத்திவேல் விளையாட் டுக் கழக அணி கிண்ணம் வென்றது. (ஒ.23)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

போரின் பின்னர் கையளிக்கப்பட்ட அனைத்து கடற்கலங்கள் பல வருடங்கள் ஆகியும் எந்தவிதமான ஆவணங்களும் இல்லாமல் காணப்பட்டன. இக் கடற்கலங்களை குறுகிய காலப்பகுதியில் கொழும்பு தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பதிவுப்புத்தகங்கள், அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம் என்பவற்றை உடனடியாகப் பெற்றுத்தந்த முல்லைத்தீவு வடக்கு கடற்றொழில் திணைக்கள பொறுப்பதிகாரி

**தேவசேனாதிபதி துசாந்தன்**

அவர்களின் பொறுப்புணர்வுள்ள கடமையினை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நெய்தல் முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராமிய கடற்றொழில் அமைப்பு

---

## FLC FRENCH LANGUAGE CENTRE

**பிரெஞ்ச் DELF A1**

V. ஜெகன் (Trained in France- 2007)

40, பலாலி வீதி, ஆரியகுளம் 0779 789 456 021 221 7781

ஆரம்பம் : 06.04.2019 சனி மதியம் 12 மணி.

ஏனைய நிறுவனங்களில் கற்றோரும் இணையலாம்.

---




**2 Kw முதல் 5 Kw வரை**

**(6 மாத கால உத்தரவாதத்துடன்)**

தொடர்புகளுக்கு:

**(வரை. ஸ்டபர்ட் மோட்டார்**

**(தனியார்) நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்.**

## RATNAM BROTHERS

யாழ்ப்பாணம் - 021 222 6185, 077 734 0056

கிளிநொச்சி - 021 228 3485, 077 933 9051

வவுனியா - 024 222 1237, 077 301 7779

மன்னார் - 077 672 2084

---

## வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

11Kg மேற்பட்ட பொதிகளுக்கு 1Kgக்கான கட்டணம்! UK 550/=, France 700/=, Germany 650/=, Swiss 750/=, Canada 950/= ஏனைய நாடுகளுக்கும் விசேட விலைக்கழிவு பொதிகள் அனுப்பி வைக்கப்படும். சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களூடாக செய்து கொடுக்கப்படும்.

**திருமுருகன் கொம் நெற் (பிறைவெட்) லிமிடெட்** 321, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்/ 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி/18, பிரதான வீதி, நெல்லியடி/கிளிநொச்சி/மன்னார்.

077 755 4528 DHL aramex SKYNET

---

# வேலைவாய்ப்பு

கிளிநொச்சியில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

- பண வசூலிப்பாளர்கள்
- இரவு நேர விநியோக ஊழியர்கள்
- பாதுகாப்பு உத்தியோகத்தர்
- அலுவலக உதவியாளர்கள்



ஆர்வமுள்ளவர்கள் இன்று (01.04.2019) திங்கட்கிழமை மு.ப.11.00 மணி தொடக்கம் பி.ப. 2.00 மணிவரை உங்கள் சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.

**உதயன் பணிமனை**

**A9, வீதி, கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி.**

---

## A/L 2021 புதிய பிரிவுகள்

**கணக்கீடு பிரத்தியேக வகுப்புக்கள்**

**MR.K BALAKAJEN**

B.Com (Jaf),H.N.Dip-in-Acc

Dip-in-Edu (ousc), M.Com (Honis)

வகுப்பு நடைபெறும் இடம்

| கொழும்புத்துறை | கந்தர்மடம் |
|---|---|
| சனி, ஞாயிறு 4 - 5 p.m. | Tue, Fri 6 - 7 p.m. |

077 216 8884

---

## சதாபொன்ஸ் கல்விநிலையம்

(ஒழுக்கம் சார் கல்வி)

மாலிசந்தி அல்வாய்

O/L மீட்டல் வகுப்புக்கள்

03.04.2019 புதன் கிழமை

காலை 7.30 மணிக்கு

ஆரம்பம்

**அனுமதி இன்றுமுதல்**

077 309 5176/021 226 3206

---

## D.C.M - யாழ்.நகர் கல்வி நிறுவனம்

(வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அருகில்)

# A/L 2021

கலை, வர்த்தகப் புதிய பிரிவுகள்

ஆரம்பம் :— 06.04.2019 (சனிக்கிழமை)

நேரம் :— காலை 9.00மணியளவில்

- நிர்வாகி -

077 011 9434

(CS/243933)(11)

---

**உதயன்**

விளம்பர தொடர்புகளுக்கு

advt@uthayan.com

---

# நளினின் விலைக்கழிவு

## STUDENTS OFFER

**கா.பொ.த சாதாரண தர பரீட்சை (O/L) சித்தி பெற்ற மாணவர்களுக்கான சிறப்பு விலைக்கழிவுகளுடன் பரிசில்கள்**




hp Authorized Commercial Partner in Northern Province

## கணினிகள் மடிக்கணினிகளுக்கான சிறப்பு விலைக்கழிவு

**hp Notebook 250 G6**

Intel Core i3 7th Gen
1TB Hard Disk, 4GB RAM
15.6' HD LED Screen
Intel HD Graphics
DOS
1 Year Hardware warranty
+ 2 Years Service Warranty


**Rs.64,500/=**



**hp Notebook 15-DA0004TU**

Intel Core i3 7th Gen
1TB Hard Disk, 4GB RAM
15.6' HD LED Screen
Intel HD Graphics
Win 10 Home
1 Year Hardware warranty
+ 2 Years Service Warranty

**Rs.68,800/=**



**hp Notebook 15-DA0020TX**

Intel Core i5 8th Gen
1TB Hard Disk, 4GB RAM
15.6' HD LED Screen
2GB NVIDIA Graphics
Win 10 Home
2 Years Hardware warranty
+ 2 Years Service Warranty

**Rs.103,000/=**

**FREE GIFTS**

* USB Mouse
* Laptop Bag
* Mug



Terms & Conditions applied

**NALIN Information Technologies Pvt Ltd.**

JAFFNA - No.195/2 Parameswara Junction, Palaly Road.
021 222 1121, 077 766 7975, 021 222 4994

KILINOCHCHI - No.44, A9 Road. (Opposite to Central College)
076 359 7610, 021 228 5550

---

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

**20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்**

# அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.

021 222 6113

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.04.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.